Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2011

சமூக அவலங்களை துணிச்சலுடன் வெளிக்கொணரும் ஒரேயொரு தமிழ் சஞ்சிகை

# இருக்கிறம்

வார இதழ்

ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 24 | 12 செப்டெம்பர் 2011 | விலை: ரூபா 30.00



## மரணம் பெருகிய இறுதிக்களம் சாம்பலில் படிந்து நிற்கும் துயரம்

ஸ்பெஷல் ரிப்போர்ட்

## கோண்டாவில் கிராமத்தில் நடந்தது என்ன?

# இப்படிச் சொல்லுகினம் பாருங்கோ!


இருக்கிறம் வார இதழ்

**தொடர்புகளுக்கு...**

ஆசிரியர் பீடம்:
தொ.பேசி : 011 3150836
தொ.நகல் : 011 2585190
கட்டுரை/ஆக்கங்கள்:
weeklyirukkiram@gmail.com
செய்திகள்/படங்கள்:
newsirukkiram@gmail.com
விமர்சனங்கள்/ஆலோசனைகள்:
irukiram@gmail.com
விளம்பரப்பிரிவு:
011 5322730
விநியோகப்பிரிவு:
011 5322781
இணையத்தளம்:
www.irukkiram.tk
தபால் முகவரி:
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு-07.




'அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 17ஆவது திருத்தத்தை அமுல்படுத்தியிருந்தால் நாடு முகம் கொடுக்கும் சர்வதேச அழுத்தத்திலிருந்து 50 வீதமான பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். அதற்காக ஜெனிவாவிற்கு ஓட வேண்டிய தேவையில்லை. ஒருவர் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் அவருக்காக சட்டத்தரணி ஆஜராகலாம். இது சர்வதேச சட்டத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட ஒருவரை 48 மணி நேரம் தடுத்து வைத்திருக்கலாம். அதற்கான அதிகாரம் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் இருக்கின்றது. எனினும் பொலிஸ் அதிகாரங்கள் இராணுவத்திற்கு வழங்கப்படுகின்றன. 18ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட நாள் தேசிய துக்கதினமாகும்'

★ ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க.
★ 08 செப்டெம்பர் 2011
(பாராளுமன்ற உரையில்...)



'யாருக்காகவும் நான் சாட்சி சொல்லப் போவதில்லை. அது தொடர்பில் தமிழ் மக்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. வன்னியில் சாவின் மத்தியில் நின்று பணியாற்றியவள் நான். யாழ் மாவட்டத்தின் மீள் குடியமர்வு அபிவிருத்தி தொடர்பாகவே ஜெனிவா மாநாட்டில் அறிக்கை சமர்ப்பிப்பேன். நடந்து முடிந்த போரைப் பற்றி அங்கு சாட்சி சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அவ்வாறு சாட்சி சொல்வதற்காகவும் நான் அழைக்கப்படவில்லை. யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியமர்வு மற்றும் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் தொடர்பான தகவல் திரட்டியுள்ளேன். யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகள் குறித்தும் ஜெனீவாவில் தெரிவிக்கவுள்ளேன்'

★ யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார்
★ 09 செப்டெம்பர் 2011
(வவுனியாவில் ஊடகவியலாளர் சந்திப்பில்...)



'தொடர்ந்து இத்தகைய செயற்பாடுகளில் இராணுவத்திற்கு தொடர்பில்லையென கூறிக் கொண்டு மக்களுக்கு பெரும் துன்பத்தைத் தருகின்ற இச்சம்பவங்களை கண்டிகாது, அந்த குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு கொடுத்துக் கொண்டு இருப்பது இராணுவத் தலைமையின் பெருங்குறையாகும். உடனடியாக ஒரு ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்து விசாரணை மேற்கொண்டால்தான் இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் தொடராமலும் சம்பவத்திற்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதையும் அவர்களின் நோக்கத்தையும் இனம் காணுவதற்கும் முடியும்'

★ வீ.ஆனந்தசங்கரி, த.வி.கூ.
★ 08 செப்டெம்பர் 2011
(ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்...)



'அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியான சூழ்நிலை பற்றி சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தவுள்ளோம். தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நலத்திட்டங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளது. போர் காரணமாக பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் நலனை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளின்போது விளக்கமளிக்கப்படும்'

★ அமைச்சர் மகிந்த சமரசிங்க
★ 09 செப்டெம்பர் 2011
(பாராளுமன்ற உரையில்...)



அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் ஏன் பல்கலைக்கழக மாணவர்களைசந்திக்கவேண்டும். போரில் தோற்கடிக்கப்பட்ட தமிழ் இனவாதத்தை அரசியல் ரீதியாக வென்றெடுக்க உதவிவழங்கும் வகையில் பிளேக் செயற்பட்டு வருகிறார். 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான அதிகாரப் பகிர்வு ஒன்றை வழங்க அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் முயற்சிகளில் அவர் ஈடுபட்டு வருகின்றார்'

★ அமைச்சர் விமல் வீரவன்ச
★ 08 செப்டெம்பர் 2011
(மஹரகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது...)



வடக்கு, கிழக்கு இரண்டு மாகாணங்களையும் இணைப்பது தொடர்பிலான தீர்மானத்தை கிழக்கு மக்களே எடுக்க வேண்டும். புலிகள் தோற்கடிக்கப்பட்டு 2 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் காணி அதிகாரங்களை வழங்கலாம். எனினும், 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு அமைவாக பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது. பயங்கரவாத அச்சுறுத்தல் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்படாத நிலையில் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தற்போதைக்கு பொருத்தமில்லை'

★ அமைச்சர் ஹிஸ்புல்லா
★ 08 செப்டெம்பர் 2011
(ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்...)



அநாவசிய முறையில் எவரையும் கைது செய்து, தடுத்து வைக்கும் அவசியம் அரசாங்கத்திற்கு இல்லை. எனினும், தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக அரசாங்கம் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப் பின்நிற்காது. கிறீஸ் மர்ம மனிதர்கள் ஊடாக நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருகின்றனர். சர்வதேச மட்டத்தில் இலங்கையை வீழ்த்த முயற்சித்தவர்களே இவ்வாறாக குறுக்கு வழிகளைக் கையாள்கின்றனர்'

★ பிரதியமைச்சர் அநுர யாப்பா
★ 09 செப்டெம்பர் 2011
(ஊடகவியலாளர் சந்திப்பில்...)



'அவசரகாலச் சட்டம் இன்று நீக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டமே நாட்டில் நடைமுறையில் உள்ளது. இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களைக் கைதுசெய்யவும், அவர்களைத் தடுத்து வைக்கவுமே முடியும். அதியுயர் பாதுகாப்பு வலயங்களை வைத்திருக்க முடியாது. அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் இந்த அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன? வடக்கில் தொடர்ந்தும் நடத்திச் செல்லப்படுகின்ற அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு அரசு நடவடிக்கை எதுவுமே எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் நீதிமன்றம் செல்லவும் தயாராக இருக்கின்றோம்'

★ சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.
★ 09 செப்டெம்பர் 2011
(ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது...)



விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடையை நீடிப்பதற்கும் நிலுவையிலுள்ள வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் மேலும் அவசரகாலச் சட்டத்தின் சில விதிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்வாங்கப்படவிருக்கின்றன. தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் நாட்டைக்கட்டியெழுப்பவேண்டும்என்பதாலும் அதேநேரம் யுத்தத்தின் பின்னரான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வினை எட்டுவதற்கும் இந்த விதிகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன'

★ அமைச்சர் ரவூப் ஹக்கீம்
★ 07 செப்டெம்பர் 2011
(பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்ட நீக்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் ஒத்திவைப்பு பிரேரணை வேளையில் உரையாற்றுகையில்...)

## இருப்பு



"வாழ்க்கையுடன் போராடும் நிஜங்கள்"

# ஓட்டைப் பிரிந்து துப்பாக்கியை நீட்டி 'உன்னோடு சேர்த்து பிள்ளை, மனைவியையும் சுட்டுப் போடுவம்' என்றார்கள்

வீட்டிற்கு ஒரு பிள்ளை கொடுக்கவேண்டிய துன்பகர மான ஒரு காலகட்டத்தில் தாங்கள் வாழ்ந்த வீட்டைவிட்டு வெளி யேறிய வசந்தா கல்லடியில் தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். இவர்கள் வாழ்ந்த இடம் முதலைக்குடா. மூத்த மகன் கஜன் திருமணமானவர். அவரது மனைவி ராணியும் முதலைக் குடாவைச் சேர்ந்தவர். 2008ஆம் ஆண்டு முதலாம் மாதம் 30ஆம் திகதி இரவு 11 மணியளவில் கஜன் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

இவர்கள் வீட்டில் தூங்கிக் கொண்டி ருக்கும் வேளை கதவு பலமாகத் தட்டப் பட்டுள்ளது. இதே பிரச்சினை தொடர்ச் சியான காலங்களில் நடந்து கொண்டி ருப்பதால் பயத்தில் உறைந்து போன கஜனும் மனைவி ராணியும் ஒரே வயதான மகனை இறுக்கியபடி அசையாமல் இருந்தனர். கதவு தட்டிய கும்பல் பின்னர் இவர்கள் இருவரது பெயரையும் சொல்லிக் கதவைத் திறக்கும்படி கட்டளை பிறப்பித்துக் கொண்டே இருந்துள்ளது. இதற்கும் அவர்கள் அசையாமல் இருந்துள்ளனர். பின்னர் கதவை உடைக் கும் முயற்சியில் ஈடுபட கஜனும் மனைவி யும் உதவிக்கு ஊர்மக்களை சத்தமிட்டுக் கூவியுள்ளனர். தாங்கள் கத்தியது கல்லடி முழுக்கக் கேட்டிருக்கும் எனச் சொல்லும் ராணி 'எங்கட சத்தம் ஊர் முழுக்கக் கேட்டிருக்கும். என்றாலும் ஒருத்தரும் எங்களுக்கு உதவிக்கு வரல்ல' எனக் கண்கலங்குகின்றார்.



இக்கும்பல் பின்னர் இவர்கள் வீட்டின் கூரை மீது ஏறியுள்ளது. 'ஓட்டைப் பிரிச்சி துப்பாக்கியை நீட்டினார்கள். உடனடியாக இப்ப கதவு திறக்காவிட்டால் உன்னோட சேர்த்து பிள்ளையையும் மனைவியையும் சுட்டுப் போடுவம் என்றார்கள். எல்லோ ரையும் சுட ஆயத்தமாக, இவர் கத்தக் கத்த வெள்ளை வேனுக்குள் இழுத்துப் போட்டுத்துப் போனவங்கதான் இன்றுடன் மூன்று வருடம் ஆகித்து' ராணியால் மேற்கொண்டு பேச முடியவில்லை.

கஜனின் தாய் அழுதபடி 'என்ர மகன் அப்பா என்னக் கொண்டு போறாங்க அப்பா என்று வேனுக்குள்ள இருந்து சத்தம் போட்டுக் கத்திக் கத்தித்தான் போனவனாம் என்று கேட்டிருந்த அயல் சனம் எல்லாம் காலையில சொல்லிச்சுகள். ஆனா ஒருத்தரும் என்னட்ட என்ர பிள்ளை கள வீட்டுக்குள்ள இருந்து பதறித் துடிச்சி கத்தக்குள்ள வந்து சொல்லல்ல. எல்லாரிட் டையும் எங்கட நம்பர் இருக்கு. ஒருத்தரும் சொல்லல்லையே மகள்' என்று கூறினார்.

'நாங்க பொலிஸுக்கு அடுத்த நாள் போனம். பிறகு மனித உரிமைகள் ஆணைக் குழு, ரெட் குறோஸ், ஐ.சி.ஆர்.சி., குழுக்களின்ர ஒபிஸ், தடுப்பு முகாம் என்று நாங்க போகாத இடமேயில்ல என்றாலும் இவர் இருக்கிற மாதிரி ஒரு தகவலும் இன்னும் கிடைக்கல்ல. இப்படி அலைஞ்சி திரியக்குள்ள ஒரு நாள் நந்தன் எண்டு ஒருத்தர் எங்கட வீட்டை வந்தார். அவர் என்ட தம்பியோட வேலை செய்யி றவர். அவர் 'என்ர கூட்டாளி ஒருத்தன் பொலிசா இருக்கான். அவனுக்குத் தெரிஞ்ச இடத்தில கொஞ்சப் பேர அடைச்சி வைச்சிருக்காங்களாம். அவங் களப் பாக்க ஒருத்தருக்கும் அனுமதி இல்லையாம். ஒருக்கா உங்கட கணவரிட போட்டோ ஒன்று தந்தா அவர் அங்க இருக்காரா இல்லையா என்று கூட்டா ளிட்ட குடுத்து செக் பண்ணி பாக்கன்' என்று சொல்ல, நான் எவ்வளவு செல வென்றாலும் பரவாயில்ல ஆள ஒருக்கா காட்ட வையுங்க அண்ணன் என்று சொல்லித்து எங்கட குடும்பப் போட்டோ வக் குடுத்தன்' என்றார். ராணி தானும் மகனும் கணவனுடன் எடுத்துக்கொண்ட ஒரு போட்டோவைக் கொடுத்துள்ளார்.

அந்த நபர் போட்டோவை ஒரு வீடியோக் கடையில் கொடுத்து சில மாற்றங்களுடன் கஜனின் அம்மா வசந்தா வீட்டிற்கு வந்துள்ளார். அங்கு 'அம்மா என்ர கூட்டாளி ஒரான் பொலிசா இருக்கான். அவன் சொன்னான் அவனுக் குத் தெரிஞ்ச இடத்தில கொஞ்சப் பேர அடச்சி வைச்சிருக்கிறாங்களாம். நான் உங்கட மகனின்ர கதையைச் சொன்னேன். கொஞ்ச போட்டோ தந்தான், இதில உங்கட பிள்ளட போட்டோ இருக்கா என்று பாருங்க' என்று கூறி கஜனின் போட்டோவுடன் சேர்த்துக் கொஞ்சப் போட்டோவும் காட்டியிருக்கான்.

தன் மகனின் அப் போட்டோவைக் கண்டதும் அந்தத் தாயின் மனம் பட்ட சந்தோசம், உணர்வுகள் சொல்ல வார்த்தை களே இல்லை. ஓவென அழுதபடி 'என்ர ராசா என்ர பிள்ள இருக்கான் ராசா இவன் தான் என்ர பிள்ள' என்றபடி மகனின் போட்டோவைக் காட்டியுள்ளார். 'சரி அம்மா நான் உங்கட பிள்ளய எப்படியும் எடுத்துத் தருவன். ஆனா கொஞ்சப் பேருக்குப் பாட்டி போட வேண்டியிருக் கும். அதுக்குக் கொஞ்சச் செலவாகும். ஆனா உங்களுக்கும் கஸ்டம்' என இந் நபர் இழுத்திருக்கான். 'என்ர பிள்ளயத் தவிர எங்களுக்கு வேறொன்றும் பெரி சில்ல. எவ்வளவு செலவானாலும் பரவா யில்ல. வீட வளவ வித்துப் போட்டென் றாலும் தாறம்' தாய் அழுதபடியே சொல் லியிருக்கார்.

இவர்களுக்காக தனது பொலிஸ் கூட்டாளியை தன் வீட்டிற்கு அழைத்து வருவதாகவும் அவர்களிடம் மகனின் விபரங்களை நேரடியாகக் கொடுத்துக் கதைக்கும்படியும் வரும்போது பார்ட்டி போடக் கூடியவாறு சாராயப் போத்தல் வாங்கி வருமாறும் நந்தன் கூறியுள்ளான். தாய் தனது இரண்டாவது மகனை அழைத் துக் கொண்டு பெரிய விலைகூடிய சாராயப் போத்தலுடன் சென்றுள்ளார். இவர்களிடம் பொலிஸ் எனக் குறிப்பிட்ட நபர் முழுவிபரத்தையும் கேட்டு தொலை பேசியில் சிங்களத்தில் யாருடனோ இவர் கள் முன்னிலையில் கதைத்துள்ளான். பின்னர் இவர்களிடம் 'அம்மா உங்கள் மகனிடம் தொலை பேசியைக் கொடுக்கச் சொல்லி இருக்கன். இப்ப கூட்டி வருவாங்க நீங்க கதையுங்க' என்று கூறியுள்ளான்.

இந்நபருக்குத் தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. தொலைபேசியில் கரகரத்தபின் 'அம்மா உங்கள் மகனுடன் கதையுங்க' எனத் தொலைபேசியைக் கொடுத்துள்ளார். 'அம்மா' என மறுமுனை யில் இருந்து குரல் வந்ததும் தாயால் பேச முடியவில்லை 'என்ர மகனே' என அழுதுள்ளார். 'அம்மா எப்படி இருக் கீங்க அம்மா.. என்ர மகன் இப்ப நடப் பானாக்கும்' என மறு முனையில் குரல் கேட்க தாயால் பேச முடியாதபடி துக்கத் தில் தனது இரண்டாவது மகனிடம் தொலைபேசியைக் கொடுத்து 'ராசா தம்பியோட ஒருக்கா கதையப்பா' என்றுள் ளார். தம்பியும் உடனே அழுதபடி மறு முனையுடன் கதைத்துள்ளார்.

பின்னர் இந் நந்தன் இவர்களிடம் மகனை அழைத்து வருவதாகச் சொல்லி உடனடியாக எழுபதாயிரம் தரும்படி வேண்டிக் கொண்டு சென்றுள்ளார். பின்னர் இவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 'உங்கள் மகனைப் போல் உங்கள் ஊரைச் சேர்ந்தவர்களும் இங்கு இருக்கலாம். ஆகவே, அனைவருக் கும் அறிவிக்கும்படி உங்கள் கிராம சேவ கரிடம் சொல்லுங்கள். என்னுடன் அவர் கள் தொடர்பு கொள்வதற்கு எனது தொலை பேசி இலக்கத்தை கிராம சேவகரிடம் கொடுங்கள்' எனக் கூறியுள்ளார்.

இவர்களுக்கு மீண்டும் ஒரு நாள் அழைப்பு வந்துள்ளது. உடனடியாக கஜனை அங்கிருந்து வெளியேற்ற வசதி கிடைத்துள்ளது. ஆகவே ஒரு இலட்சம் பணத்துடன் கச்சேரிக்கு வரும்படி கூறி யுள்ளார். பின்னர் மீண்டும் அழைப்பு வந்துள்ளது. மகனை பொலிஸில் கொண்டு வந்து ஒப்படைக்கப்போவதாக மீண்டும் அழைப்பு வந்துள்ளது. மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு ஒரு இலட்சம் பணத்துடன் வரும்படி அந்நபர் கூறியுள்ளான். ராணியும் கஜனின் அம்மாவும் காசு பிரட்டுவதற்காக ஓடித்திரிந்து கடைசியில் மாதமொன்றுக்கு 10 வீதம் வட்டிக்கு கடன் வாங்கிக்கொண்டு பாதுகாப்பிற்காக வேறு ஒருத்தரை அழைத்துக் கொண்டு மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு வந்துள்ளார்கள்.

'நாங்க பஸ் நிலையத்தில் மகனுக்காக காத்துக்கொண்டிருந்தம். எங்கள நேரத் தோட வரச் சொன்னபடியா காலை 5 மணிக்கெல்லாம் வந்துட்டம். அந்த நேரம் இங்கு சனம் குறைவா இருந்திச்சி. தள்ளி ஒரு பெண்ணும் நின்று கொண்டிருந்தார்.




எங்களோட வந்த எங்கட அக்காட மகன் கொஞ்சம் தள்ளிப்போய் திரிந்து கொண்டிருந்தான். அப்ப நந்தன் தனிய வந்தான். 'அம்மா உங்க மகன இஞ்ச கொண்டு வாறதில கொஞ்சம் பிரச்சின. அதனால செங்கலடிக்குப் போவம். காசு ரெடிதானே அம்மா' என்றான். ஓம் ஓம் என்று நானும் மருமகளும் சொன்னம். பிறகு நந்தன் பஸ் நிலையத்தின் மற்றப் பக்கத்திற்குப் போனான்.'

'அங்கிருந்து ரெலிபோன் எடுத்து யாரோடையோ கதைச்சுக் கொண்டி ருந்தான். கொஞ்ச நேரத்தில அக்காட மகன் சீரியசா வந்தான். பெரியம்மா எனக்குச் சந்தேகமா இருக்கு, அந்தாள் முதலில உங்களப் பற்றி யாரோடையோ கதைச்சான். பிறகு அந்தா அங்கே நிக்கிற பெண்ணிடமும் நம்மட்டச் சொன்ன மாதிரி சொன்னான். இவன் நிச்சயமா ஏமாத்தப் போறான். நாம பொலிசுக்கு அறிவிப்பம்' என்றான். 'நாங்க உடனே எங்களுக்குத் தெரிஞ்ச பொலிஸில வேல செய்யிற ஒருத்தருக்குச் சொன்னம். அவர் பொலிசுக்கு அறிவித்தார்' என்றார்.

◄ விஜயலட்சுமி சேகர் ►

இவ்வாறான பிரச்சினைக்கு இப்படி யான பெண்கள் அனேகர் ஆட்பட்டு வருவதைப் பொலிஸார் அறிந்திருந்த படியால் விரைந்து நடவடிக்கை எடுத் தனர். நந்தனைக் கைதுசெய்த பொலிஸார், நந்தனையும் இவர்களையும் ஏற்றிக் கொண்டு செங்கலடிக்குச் சென்றுள்ளனர். போகும் வழியில் இவருடன் தொடர்பில் இருக்கும் நபருடன் காசுடன் இக்குடும் பத்தை அழைத்து வருவதாக சொல்லும் படி பொலிஸார் பணித்தனர். நந்தனும் அவ்வாறே சொல்லி செங்கலடி வங்கியின் முன் காத்திருக்கும்படிக் கூறியுள்ளார்.

செங்கலடிக்குச் சென்றதும் இவர்களை சிறிது தூரத்தில் ஆட்டோவில் இருந்து இறக்கியுள்ளார். பின்னர் நந்தன் காட்டிய நபரிடம் ராணி பணத்தைக் கொடுக்கும் போது அந் நபரையும் கைது செய்தனர்.

இவ்வாறுதான் இன்று பல பாகங்க ளிலும் நடந்துகொண்டிருக்கின்றன. யுத்தம் என்ற ஒன்றைக் காரணம் காட்டி காணாமல் போனவர்களை மீட்டுத் தருவதாகக் கூறி இவ்வாறு சில பேர்வழிகள் பணம் பறித்து வருகின்றனர். அம்மக்களே உறவுகளைத் தொலைத்துவிட்டு வாழ வழியின்றி கண்ணீருடன் இருக்கும்போது அவர்களது வாழ்வில் சிலர் குளிர்காய எத்தனிக்கின்றனர்.

இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகளை சட்டம் கடுமையாக தண்டிக்கவேண்டும். பிள்ளைப் பாசம், கணவன் பாசம் என்று தவிப்பவர்களுக்கு தங்கள் பிள்ளைகள், கணவன்மார் கிடைத்தால் போதும் என்ற ஆர்வத்தில் தங்களிடம் உள்ளவற்றை எல்லாம் விற்று பணத்தைக் கொடுத்து ஏமாறுகின்றனர். உணர்ச்சிவசப்பட்டு ஏமாற் றுப் பேர்வழிகள் கூறும் சாகச வார்த்தை களை நம்பி ஏமாறாமல் அவதானத்துடன் நடந்துகொள்வது அவசியம்.

12.09.2011
காத்திருப்பு 01 | இருக்கை 24

# வாழ்தலுக்கான போராட்டம்

வணக்கம் என் உறவுகளே!

சுவடுகள் இல்லாத நினைவுகளை மட்டும் எமக்குச் சொந்தமாக்கி, நேரத்திற்கும் காலத்திற்கும் அப்பால் உள்ள வெளியில் வாழ்வதற்காய் தினம் தினம் மரணத்தின் நிழலில் தவித்துக் கொண்டிருக்கின்றோம். தொடர்ந்து துரத்திக் கொண்டிருக்கும் சக்திகளிடமிருந்து தப்புவதே இன்று எமக்குள்ள சவாலாக இருக்கின்றது. எங்கள் கிராமங்களில் ஒளி இல்லை. அடுப்புகள் எரிவதில்லை. எங்கள் உறவுகளின் முகங்களில் பயம் உறைந்து போய்க்கிடக்கிறது.

கொடிய யுத்தத்தின்போது கழுவிச் செல்லப்பட்ட குருதிகள் உறைந்து போயிருக்கும் புனித நிலங்களில் மீண்டும் படைக்கலங்களும் சப்பாத்துக் கால்களும் தாராளமாகவே ஊடுருவி எங்கள் மண்ணில் தமது வருகையின் அடையாளங்களைப் பதிக்கத் தொடங்கியிருக்கின்றன.

மீண்டும் நிசப்தம், அச்ச உணர்வு, மயான அமைதி, இரவானதும் நாய்களின் குரைப்பு என தினம் தினம் எங்கள் இரவுகள் பயமாய்க் கழிகின்றன. வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் வாழும் அப்பாவித் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அச்சத்தால் உறைந்து போயிருக்கின்றனர்.

இன்னமும் எமது உறவுகள் புனர்வாழ்வு முகாம்களுக்குள் விடுதலையின்றி வலிகளைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதய சுத்தியோடு இவர்களுக்கான மறுவாழ்வு வழங்கப்பட வேண்டும். ஆனால் அரசியல் முலாம்பூசல்களுக்காக நடாத்தப்படும் நாடகங்களாகவே இன்னமும் புனர்வாழ்வுக் காட்சிகள் காட்டப்பட்டு வருவது எதிர்காலத்துக்கான நம்பிக்கையை இழக்கச் செய்து வருகிறது.

தேசிய மொழி இன்னமும் சிங்களமாகவேயிருப்பதால் எங்கும் எதிலும் சிங்களமயமாக்கப்பட்டு வரும் தமிழர் பிரதேசங்கள் எமக்கான அடையாளத்தை இழந்து விடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. எங்கும் சிங்கள தேசம் என்ற முத்திரை குத்தல்கள், மொழிக்கு முக்கியத்துவம் அளிக்காமல் சிங்கள பேரினவாதத்தின் இனவாத கொள்கைகளுக்கு சம்மதிக்கும் தமிழர்கள் மட்டும் சமாதானத்தை சுவாசிக்க அனுமதிக்கப்படுவர் என்பதே இத்தேசத்தின் இன்றைய யதார்த்த நிலையாக இருக்கின்றது.


மொழியையும் தமிழையும் தம் பாரம்பரிய தனித்துவங்களையும் தாங்கள் காலம் காலமாய் வாழ்ந்த நிலத்தையும் காக்கத்துணிந்து ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நின்று நீதி கேட்கும் தமிழர்கள் தொடர்ச்சியாக பிணமாக்கப்பட்டு வருகின்றனர். தமிழ் என்ற அடையாளத்தை விட்டுக் கொடுக்கும் தமிழர்க்கு மட்டுமே வாழ்தல் என்ற உரிமை வழங்கப்படுகிறது.

எம் மண்ணில் எங்கள் பச்சிளம் சிசுக்கள் வடித்த குருதியில் இன்னமும் எங்கள் மண்ணின் ஈரம் காயவில்லை. இதயங்களில் ஏற்பட்ட கோரமான காயங்கள் மாறாத வடுவாய் உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கின்றன.

உயிரை இருக்கப் பிடித்துப் போரிடும் உயிர் வாழ்தலுக்கான போராட்டம் எங்களுடையது. இந்த பிரச்சினைக்கு எதிராக தமிழ் அரசியல் தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் குரலுக்கு மதிப்பளித்து அவர்களைஇந்தப் பிரச்சினையிலிருந்து மீட்கவேண்டும். இதனை நீடிக்க விடாது மக்களின் பாதுகாப்பையும் நிம்மதியானவாழ்க்கையையும்நிலைநாட்டவேண்டும். அதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகத்தில் எமக்கென துரோகிகளும் விரோதிகளும் எதிரிகளும் பலமாக இருந்தாலும் உண்மையுள்ள நிதர்சனங்கள் மத்தியில் அவர்களின் போலியான ஆவணங்கள் தவிடுபொடியாகிவிடும் என்ற எதிர்பார்ப்புடன் ஜெனீவா கூட்டத்தொடர் எங்களுக்குச் சாதகமாக நிறைவேறி முடிய உங்களுடன் காத்திருக்கின்றேன்...

ஆசிரியர்




# அலரிமாளிகைக்குள் வாலை சுருட்டி அடங்கிய தமிழ் கட்சிகள்

தமிழர்களை தமிழ்த் தலைமைகள் என்றும் எப்பொழுதும் ஏமாற்றித்தான் வருகின்றன என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. வடகிழக்கில் கிறீஸ் படையின் தாக்குதல்களை கண்டித்து அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும், சமூக பற்றுள்ளவர்களையும் திரட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்கமைத்திருந்தது என்பது யாவரும் அறிந்ததே. ஆனால், தற்போது மகிந்தரை சந்தித்ததால் அதை ஒத்தி வைத்துள்ளனராம்.

மகிந்தர் தமிழ்த் தலைமைகளுக்கு வாக்குறுதி வழங்கிவிட்டாராம். அதனால் இவர்கள் தமது திட்டத்தை ஒத்திவைத்துள்ளனர். என்ன வேடிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் பற்றி இந்தத் தமிழ்த் தலைமைகளுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதை மிகவும் தெளிவாக வெளிக்காட்டியுள்ளனர்.

மகிந்தர் இவர்களின் உண்ணாவிரதத்திற்கு பயந்து இவர்களை சந்தித்து வாக்குறுதிகள் வழங்கவில்லை. மாறாக இன்று சர்ச்சையில் உள்ள விடயத்தில் ஒன்று ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிவைவேற்றும் சாத்தியப்பாடு உள்ளதால் அதற்கு இந்த தமிழ்த் தலைமைகள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் ஒரு ஆதாரமாக அமையும் என்பதால் அதை இடைநிறுத்தும் பொருட்டு இந்த தமிழ்த் தலைமைகளிடம் பேரம் பேசியுள்ளார் மகிந்தர்.

இந்த தமிழ்த் தலைமைகளும் வழமையான மக்கள் விரோதச் செயற்பாட்டின் அடிப்படையில் அவருக்கு உதவியாகவும் மகிந்தரையும் அவரது இராணுவ ஆட்சியையும் கிறீஸ் படையின் தாக்குதலையும் வெளியுலகிற்கு வெளிக் கொண்டுவராமல் பாதுகாத்துள்ளது. 1979களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சாத்வீக போராட்டம் சாத்தியம் அற்றது என்று மேடைகளில் முழங்கி தமது நலனுக்காக தமது இருப்பிற்காக போராட்டத்தை தொடங்கி அதன் பின் அன்றைய அரசு கூட்டணியினருக்கு எலும்புத் துண்டுகளை எறிய அதைக் கவ்வி அரசிற்கு வாலாட்டி தமிழ் மக்கள் மீது பாய்ந்தது போன்று தற்போது உள்ள தமிழ் தலைமைகளும் செயற்படுகின்றன.

இங்கு கிறீஸ் படையின் தாக்குதல் பல மாதங்களாக நடைபெற்ற போதும் அதைக் கண்டித்து யாழ் மாநகர சபையில் ஒரு தீர்மானம்கூட நிறைவேற்றப்படாது செயற்பட்ட யாழ். மாநகர சபை திடீர் என்று கிறீஸ் படையின் தாக்குதல் தொடர்பாக மகிந்தருக்கு கண்டன அறிக்கை அனுப்புகின்றதாம். முன்பு யாழ் முதல்வர், கிறீஸ் படையல்ல அது மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் தான் என தனது வாலை அரசுக்கு ஆட்டிய இந்த ஆள்காட்டிகள் தற்போது மக்கள் பற்று வந்தது போல் ஒரு நாடகம். இதுவும் அரசை பாதுகாக்கும் பொருட்டே.

என்றுமே இந்த மூன்றாம் தர அரசியல் சக்திகள் மக்கள் நலனில் செயற்பட்டவையல்ல. மாறாக மக்களைக் காட்டிக்கொடுத்து தமது சுகபோகங்களை அனுபவித்தவர்களே என்பதை என்றும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்த தமிழ்த் தலைமைகள் ஒருபோதும் மக்கள் நலனிலான ஒரு தீர்வை பெற்றுத்தரப் போவதில்லை என்பதை யாவரும் அறிந்திருத்தல் அவசியம்.

இந்தத் தலைமைகளை தூக்கி எறிந்து மக்கள் நலனின் அக்கறை கொண்ட தலைமைகள் தமது செயற்பாட்டை மக்களுடன் இணைத்து செயற்படுவதன் மூலம்தான் மீண்டும் ஒரு முள்ளிவாய்க்காலில் முடிவடையக் கூடிய யுத்தத்தை தடுத்து நிறுத்த முடியும்

– காங்கேசன்

இருக்கிறம்
ஒரு பொல்லாப்புமில்லை
வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.

3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

| | |
|---|---|
| ஆசிரியர் | : அருளானந்தம் சஞ்ஜீத் |
| நிர்வாக ஆசிரியர் | : சாந்தி சச்சிதானந்தம் |
| செய்தி ஆசிரியர்கள் | : கலாவர்ஷ்னி கனகரட்ணம்<br>தவநாதன் இரவிவர்மன் |
| நிருபர் குழு | : தர்மராசா சிந்துஜா<br>கந்தலிங்கம் மாலா<br>அருமைத்துரை ஐசீகரன்<br>ரா.அர்விந்த் |
| கார்ட்டூன் | : சஞ்ஜீத் |
| புகைப்படம் | : யாத்ரா<br>தமிழியன் |
| பக்க வடிவமைப்பு | : முஹம்மட் பிறவ்ஸ்<br>ஷிரோமி பீற்றர் |

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.




# சுடலை ஞானம் வந்த நீதியரசரும் பூச்சாண்டி காட்டும் கூட்டமைப்பும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்மொழிவை முன்வைப்பதற்காக அரசாங்கத்துக்கு விதித்த இரண்டு வார காலக்கெடு முடிந்து எத்தனையோ நாளாயிற்று. காலக்கெடு விதிக்கும்போதே அதனை அரசாங்கம் மீறினால் அடுத்த நடவடிக்கை என்ன என்பதைத் தீர்மானித்துக் கொண்டு விதித்திருக்க வேண்டும். ஆனால் வழக்கம்போல மழுப்பல் அரசியல் நடத்தியிருக்கிறார்கள் கூட்டமைப்பினர். 'அஹிம்சாப் போராட்டத்தில் குதிப்போம்..' என்று ஆரவாரமாகப் பேச மட்டுந்தான் தமக்குத் தெரியும் என்பதை மீண்டும் எங்களுக்கு நிரூபித்திருக்கிறார்கள். அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் வானிலிருந்து வீசி எறியப்படும் நாள் மிகத் தொலைவில் இல்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது.

அது அப்படியிருக்க, தமிழ்க் கட்சிகளின் பேச்சுவார்த்தைகளின் உள்ளடக்கத்தை நோக்கி எங்கள் கவனத்தை நாம் சற்றே திருப்புவோம். பேசப்பட்ட விடயங்கள் என்ன என்பதும் தெளிவாக நமக்குத் தெரிவிக்கப்படவில்லைதான். இதுவும் தாம் எந்த அளவுக்கு சமரசமாகப் போக முயல்கின்றனர் என்பதை தமிழ் மக்களிடமிருந்து மறைக்கும் அவர்களின் கபடத்தனத்தின் விளைவோ தெரியவில்லை. வடக்கு கிழக்கு மாகாணசபைகளின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை அவர்கள் கோரியதாகக் கேள்விப்படுகின்றோம்.

மாகாண சபைகளைத் ஸ்தாபிப்பதற்குக் காரணமாகவிருந்த 13ஆவது திருத்தச் சட்டத்தினை இந்திய அரசாங்கம் ஆதரிப்பதனால் அதனை யொட்டியே இவர்களுடைய கோரிக்கைகளும் அமையலாம் என்றே அனுமானிக்கின்றோம். கையில் இருப்பதைக்கொண்டுதான் அடுத்த கட்டத்திற்குப் போகவேண்டும் என்கின்ற உபாயம் பொருத்தமே என்றாலும்கூட, எவ்வளவு தூரம் 13ஆம் திருத்தச்சட்டமும் மாகாணசபைகளும் தமிழ் முஸ்லிம் மக்களின் அதி குறைந்த அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடும் என்பது கேள்விக்குறியே. அதற்கு மிக முக்கிய காரணியாக இருப்பது இலங்கையின் நீதித்துறையின் மோசமான நிலைமையாகும்.



எந்த அதிகாரப்பரவலாக்கல் கட்டமைப்பின் பயனும் ஒரு சுதந்திரமான நீதித்துறையின் இயக்கத்தில்தான் தங்கியுள்ளது. மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கத்துக்கும் இடையில் தவிர்க்க முடியாமல் ஏற்படுகின்ற அதிகார வரையறை குறித்த முரண்பாடுகள், நீர், காணி போன்ற வளப் பகிர்வுகள் குறித்த முரண்பாடுகள் இவையெல்லாமே நீதித்துறையினால்தான் தீர்க்கப்பட முடியும். வட, கிழக்கு மாகாணசபையின் ஆரம்ப காலத்தை நோக்கினாலும் இதன் அர்த்தம் புரியும். கொழும்பில் நிலைகொண்டுள்ள மீன்பிடித்துறை, உள்நாட்டு விவகார அமைச்சுக்கள் போன்றன யாவும் உதாரணமாக சாதாரண மீன்பிடி வள்ளங்களை வாங்கவும், பாதைகளைத் திருத்தவும் வேண்டிய அதிகாரங்கள் எவற்றையும் வடகிழக்கு மாகாணத்திற்குக் கொடுக்காது இழுத்தடித்தன. இந்தப் பிரச்சினை எங்கள் நாட்டில் மட்டுமல்ல, அதிகாரப்பரவலாக்கப்பட்ட அனேக நாடுகளிலும் உண்டு.

எங்கெல்லாம் சுதந்திரமாகவும் நடுநிலையாகவும் இயங்கும் நீதித்துறை இருந்ததோ அங்கேயெல்லாம் மாநில அரசுகளுக்கிடையே இருந்த முரண்பாடுகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டன. சுருங்கக் கூறில், ஒரு அதிகாரப் பரவலாக்கல் செயற்படுத்தப்படும் அரசின் ஸ்திரத்தன்மை நீதிமன்றங்களினால்தான் நிர்ணயிக்கப்படுகின்றன என்று சொல்லலாம். இதற்கு ஒரு சிறந்த உதாரணம் இந்தியாவாகும். இந்திய அரசின் மேலாதிக்கப் போக்குகள், அதன் சுதந்திரமான வீரியமுள்ள நீதித்துறையினால் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதன் நீதித்துறையின் தொடர்ந்த தலையீட்டால், 1952ஆம் ஆண்டு செதுக்கப்பட்ட அதன் அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மீறிய அதிகாரங்களோடு இன்று அதன் மாநில அரசுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மை.

எங்கள் நாட்டின் நீதித்துறை பக்கச் சார்பானது என்பது தமிழ் மக்களுக்கு எப்பொழுதோ தெரியும். உச்ச நீதிமன்றத்தின், முன்னாள் நீதியரசர் இருக்கையில் அமர்ந்தாரென்றால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும் தமிழ் அரசியல் கைதிகளின் கதி அதோ கதியாகத்தான் இருந்தது என்று எந்த அனுபவப்பட்ட சட்டத்தரணியும் கூறுவார்.

தடுப்புக் காவலின் கீழ் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட கைதிகள் அவர் முன்கொண்டுவரப்பட்டபோது, தன்னுடைய கைக்காயங்களைக் காட்டி அவை கைதிகளினுடையதைப்போல இருக்கிறதாகையால் எல்லாக் காயங்களையும் வதையினால் ஏற்பட்ட காயங்கள் என்று சொல்ல முடியாது என்று தீர்த்த பெருமகன் அவர். வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்தது தொடக்கம், ஐ.நா. சமவாயங்களுக்கு இலங்கை கைச்சாத்திட்டாலும்கூட அச்சட்டங்கள் இலங்கையின் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி இலங்கை அரசாங்கத்துக்கு அவற்றைச் செயற்படுத்தும் கடப்பாடு இல்லை என்று சர்வதேச சமூகத்தின் நியாயாதிக்கத்தினையே கருவறுத்ததுவரை பல கைங்கரியங்களைச் செய்தவர். இப்பொழுதுதான் சிங்கள மக்களுக்கு அவருடைய ஊழல் தெரியவந்துள்ளது. அதுவும், அவர் அரசாங்கத்துக்கும் ஜனாதிபதியின் குடும்பத்துக்கும் எதிராகப் பல கருத்துக்களைத் தெரிவிக்க ஆரம்பித்ததற்குப் பிறகுதான் வெளிப்படையாக அவரைப் பற்றிய குற்றச்சாட்டுக்கள் வந்திருக்கின்றன.

சமீபத்தில் நீதியரசர்கள் குழுவொன்று ஜனாதிபதியைச் சந்தித்து 1999-2009ஆம் ஆண்டு வரை, அதாவது முன்னாள் பிரதம நீதியரசர் பதவியில் இருந்த காலம்வரை, கிட்டத்தட்ட 42 நீதியரசர்கள் தமது பதவிகளை அநியாயமாக இழந்திருக்கிறார்களென்றும் அவர்களில் சிலர் தற்கொலைகூட செய்திருக்கிறார்களென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இதுவரைகாலமும் இந்த நீதியரசர்கள் எங்கிருந்தார்கள் என்பது கேள்வி. தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக இவர்களுக்குக்கூட முன்பு குரல் எழுப்ப முடியவில்லையெனில் சாதாரண மக்கள் எம்மாத்திரம்? இப்பொழுதெல்லாம் தென்பகுதியில் சிங்களவர்களுக்குக்கூட அரசாங்கத்துக்கெதிரான எந்த வழக்கையும் தாக்கல் செய்வதற்கு யாருக்கும் துணிவில்லை என்பது நாடறிந்த இரகசியமாகும்.

இதையொட்டியே தற்போது நீதித்துறையில் விரவியிருக்கும் ஊழல் பற்றிய கவலைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. முன்னாள் பிரதம நீதியரசர், தனது பதவிக்காலம் முடிவடைந்தவுடனேயே ஜனாதிபதிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அப்படியாயின் இந்தப் பதவி அவருக்குத் தருவதாக எப்பொழுது ஏற்பாடாயிற்று என்பதே கேள்வி. இதே காலப்பகுதியில் அவர் அரசியல் தொடர்பான பல முக்கிய வழக்குகளில் நீதியரசராக அமர்ந்திருந்தார். தவிரவும், அவரும் அவருக்குக் கீழே பணி செய்த பல நீதவான்களும் பலவகையான சன்மானங்களுக்காகத் தங்கள் நடுநிலைமையை இழந்திருக்கிறார்கள் என்று அறியப்படுகின்றது. நீதித்துறையின் சுயாதீனமான செயற்பாடானது, தனிப்பட்டரீதியிலும் நீதிமன்ற ரீதியிலும் பேணப்பட வேண்டியதாகும். அவ்வாறு அது செயற்படுவதற்கான உத்தரவாதம்கூட எங்களது அரசியலமைப்புச் சட்டத்தில் இல்லை.

நீதித்துறையின் சுதந்திரத்தை வேரறுக்கும் இத்தகைய போக்குகளைப் பல வறிய நாடுகளில் கண்டு, 10 வருடங்களுக்கு முன்பு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பெங்களூரில் நீதித்துறையினைச் சாாந்தவர்கள் பங்குபற்றும் ஒரு மாபெரும் சர்வதேச மாநாட்டினை நடத்தியது. ஒவ்வொரு ஜனநாயக நாட்டிலும் அதிகாரத்தினைக் கொண்டவர்கள் தங்களுக்கு அவ்வதிகாரத்தினை வழங்கிய மக்களுக்குக் கணக்குக் காட்ட வேண்டியவர்களாயின், அதே முறையில் நீதித்துறையினரும் கணக்குக் காட்ட வேண்டியவர்களே என இங்கு முடிவாயிற்று.

> **"எங்கள் நாட்டின் நீதித்துறை பக்கச் சார்பானது என்பது தமிழ் மக்களுக்கு எப்பொழுதோ தெரியும்"**

ஏனெனில் நீதித்துறையின் அதிகாரங்களும் அதே முறையில் மக்களால் நீதியரசர்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்களேயாகும். இதன் அடிப்படையில் ஆறு அடிப்படை விழுமியங்களை இந்த மாநாடு எடுத்தியம்பியது: சுதந்திரம் (Independence), நடுநிலைமை (Impartiality), நேர்மை (integrity), முறைமை (propriety), சமத்துவம் (Equality), திறமை (Competence), கவனம் (Diligence) என்பவையே இவையாகும். இங்கு பங்குபற்றிய நாடுகள் அனைத்தும் 2006ஆம் ஆண்டு தொடக்கம் தத்தமது நீதித்துறையின் ஒழுக்காற்று விதிகளை இந்தக் கொள்கைகளின் அடிப்படையில்தான் உருவாக்கிக்கொண்டிருக்கும்போது நமது இலங்கை ஒன்றுதான் இது தொடர்பாக எதனையும் செய்யாமலிருக்கின்றது என்பது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

இப்பொழுது பதவியிலிருந்து விலகிய பின்புதான் முன்னாள் நீதியரசருக்கு . ஞானம் பிறந்திருக்கின்றது போலும். இலஞ்சம் ஊழலுக்கெதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார். ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கெதிரான சமவாயத்திற்கு இலங்கை அரசாங்கம் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதமே கையொப்பமிட்டிருப்பதால் உடனடியாக அதனை செயற்படுத்த முன்வரவேண்டுமென அறைகூவல்விடுத்திருக்கிறார். அரசாங்கத்திட்டங்களில், அதுவும் கடன் திட்டங்களில் முறைகேடாகக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவது எதிர்கால சந்ததியினரின் தலையில் பாரிய கடன் சுமையினை ஏற்றும் குற்றச் செயலாகும் என அவர் நீலிக் கண்ணீர் வடித்துள்ளார். சர்வதேச சட்டங்களை செல்லாக்காசாக்கிய நீதியரசர் அதே வாயால் அவற்றைச் செயற்படுத்தக் கோருவது சிரிப்புக்கிடமான செயலாகும். அதிகாரத்திலிருக்கும்போது ஒரு கதையும் அதிகாரத்தில் இல்லாதபோது இன்னொரு கதையும் சொல்லும் எங்களது பெரும்பான்மைச் சமூகத்தின் பண்பாடே இதுதானே.

எந்தப் பக்கத்திலிருந்து பார்த்தாலும் நீதித்துறையினைச் சீர்செய்து, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் ஓர் அரசியலமைப்புச் சீர்திருத்தமின்றி அதிகாரப்பரவலாக்கலினைக் கோருவது வீண் வேலையாகும். வெறுமனே பொலிஸ் காணி அதிகாரங்களைக் கோருவது ஒருவிதத்திலும் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகளைத் தீர்க்காது. வேண்டுவது அரசியலமைப்பின் முழுமையான சீர்திருத்தமே. அதற்கான இயக்கத்தினை கட்டியெழுப்புவதற்கு கூட்டமைப்பினருக்கு ஆற்றல் இல்லாததே எங்கள் துரதிஷ்டமாகும்.

# நாடும் நடப்பும்

## வருத்தம் சுகம் வரும் ஆனால் ஆள் தப்பாதே

என்ன தலைப்பப் பாத்திட்டு முழிக்கிறியள். மர்ம மனிதனின்ர மர்மம் முடிஞ்சபாடில்ல பாருங்கோ. இருக்கிறத இல்ல எண்டா ஏதோ இருக்கெண்டு அர்த்தம் எண்டு நீங்கள் அறிஞ்சிருப்பியள். உவயளின்ர தத்துவம் சனத்துக்கு நல்லா விளங்குமுங்கோ. உவயள் முந்திக்கூட உப்படித்தானுங்கோ. அடிப்பினமுங்கோ. ஆனா, அடிக்கேல்ல எண்டுவீனமுங்கோ. சனத்துக்கு உண்மையில என்ன நடக்குதெண்டு விளங்கிப் போட்டுதுங்கோ. அதுக்குப்பிறகு நான் விளக்கம் எல்லாம் குடுக்கக் கூடாதுங்கோ.

ஆனாப்பாருங்கோ. தென்னிலங்கையில இருந்து மூளை சுகமில்லாத ஆக்கள் கனபேர் பாதைமாறி வடக்கு, கிழக்குக்கு வந்திட்டதா அறிஞ்சனானுங்கோ. எங்கண்ட தமிழ்ச்சனத்திட்ட ஒரு கோரிக்கையுங்கோ. பாவம் அவையள். அவையளும் மனிசர்தான். ஆர் செய்த பாவமோ அவயளுக்கு ஆண்டவன் உப்படி வருத்தத்த குடுத்திட்டான். நீங்கள் தான் அனுசரிச்சு நடந்து அவையள் பாதைமாறி பகல்லையோ இரவிலையோ உங்கண்ட வீடுகளுக்குள்ள வந்தா அவயளப்பிடிச்சு அடிச்சுப்போடாம நல்ல சாப்பாடு ஏதும் குடுத்திட்டு ஆமி தம்பியளிட்ட கூட்டிக்கொண்டுபோய் குடுங்கோ. அல்லாட்டி போன் பண்ணினாலும் ஆமி தம்பியவ உடன வந்து அவயள கூட்டிக்கொண்டு போவினமுங்கோ. அந்த சுகமில்லாத தம்பியவைய கிறீஸ் மனிசரெண்டு பேப்பரில போட் டும் அசிங்கப்படுத்தாதையுங்கோ. நெட்டிலையும் போடாதையுங்கோ. அதுகளும் எங்கள மாதிரிப் பிள்ளையள் தானே. வருத்தம் வந்தா அதுகள் என்ன செய்யிறது. பொம்பிளப்பிள்ளயளக் கண்டா அதுகளுக்கு வருத்தம் கூடுமெண்டு மருத்துவமும் சொல்லேக்க எங்கண்ட சனம்தான் கொஞ்சம் பொறுமையா நடக்கோணும் பாருங்கோ.

எண்டாலுமுங்கோ மர்மமா வாறவைக்கு விசரர், பைத்தியக்காரர் எண்டு சேட்டிவிக்கற் குடுத்து அனுப்பிவைக்கிறதும் மர்மமா வாறவயள கலைச்சுப்பிடிக்கப் போனவயப்பிடிச்சு அவயளுக்கு அடிச்சுப்போட்டு அதுகளுக்கு பயங்கரவாதத்துக்கு துணை போனவ எண்டு சேட்டிவிக்கற் குடுக்கிறதும் நாயமாப் படேல்லயுங்கோ. பிரிவின கூடாது. இது ஒரு நாடு எண்டுட்டு நீங்களே உப்படிப் பிரிவினையள தூண்டிவிடக்கூடாதுங்கோ. இலங்கையில பயங்கரவாதம் இல்லயுங்கோ. அத இரண்டு வருசத்துக்கு முன்னம் ஒழிச்சிட்டம் எண்டீனமுங்கோ. ஆனா பாருங்கோ பயங்கரவாத தடைச் சட்டம் இருக்குதுங்கோ. பயங்கரவாதத்துக்கு துணை போறவ இருக்கீனமாமுங்கோ. எனக்கு ஒண்டும் விழங்கேல்லயுங்கோ. உதத்தானுங்கோ எங்கண்ட ஆக்கள் ஒரு பழமொழி சொல்லுறவ, பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லோணும் எண்டு.

அதுதானுங்கோ முதல்லயே சொன்னனானுங்கோ. இங்க இருக்கு எண்டா இல்லயுங்கோ. இல்ல எண்டா இருக்குங்கோ. போன கிழம கோண்டாவில்ல ஒரு தம்பிய ஊர்ப்பெடியள் பிடிச்சு அடைச்சு வைச்சிருந்தவங்களுங்கோ. நீதிபதி வந்தால் தான் பொடியன உங்களிட்ட தருவம் எண்டு அங்க வந்த சனம் எல்லாம் ஆமியிட்ட அடம்பிடிச்சதானுங்கோ. அப்பத்தானுங்கோ அங்க வந்த கொமாண்டர் தம்பி பிடிபட்ட அந்தப் பொடியனுக்கு கன்னத்தில மாறி மாறி அடிக்க சனம் விறச்சுப்போச்சுங்கோ. பொடியனுக்கு நாலு அடிச்ச உடன சனம் ஆமி சேரே அடிச்சுப்போட்டார், அவர் கூட்டிக்கொண்டு போகட்டும் எண்டமாதிரி நிண்டதுங்கோ. அவரும் பொடியன பொலிஸ் வண்டியில ஏத்தி அனுப்பிப்போட்டு போட்டாருங்கோ.

பொலிஸ்ரேசனில கொண்டுபோயும் அந்தப் பொடியனுக்கு அடிச்சவ எண்டு கேள்விப்பட்டன். அடுத்தநாள் ஒரு செய்தி படிச்சனான் பாருங்கோ. அந்தப் பொடியனுக்கு மனநோய் எண்டு. அதுவும் பொடியனுக்கு பொம்பிளப்பிள்ளயளக் கண்டா வருத்தம் கூடுமாமுங்கோ. பெண் எண்டால் சும்மா இல்லயுங்கோ. கலியாணமாகாத பொம்பளப் பிள்ளயளக் கண்டால்தான் இன்னும் கூடுமாமுங்கோ. அது மனநோய் இல்ல பாருங்கோ அந்த வருத்தத்திற்கு வேற பேர் இருக்குங்கோ. செல்வச் சந்நிதியானே என்ன சோதனையடாப்பா...!

**- வண்டில்கார வைரவி அப்பு**

# வியாபாரமாகிவரும் புலமைப்பரிசில் கல்வி





எமது நாட்டில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் தரம் ஐந்தை எட்டும்போது அவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறுவது வழமை. இக்காலப்பகுதியில் இப்பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான கவனயீர்ப்புக்கள், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களினாலும் பெற்றோர்களினாலும் மேலோங்கிக் காணப்படும். மலையகப் பகுதியில் புலமைப்பரிசில் பரீட்சை நெருங்கும் காலப்பகுதியில் என்னதான் விழுந்து விழுந்து படிப்பித்தாலும் பரீட்சையில் மாணவர்கள் கோட்டை விடுவதென்னவோ உண்மைதான்.

பரீட்சை நெருங்கும் காலப்பகுதியில் மட்டும் கவனிக்காமல் அவர்களுக்கான பயிற்சிகள் தரம் மூன்று அல்லது நாளில் இருந்தே வழங்கப்படுமாயின் இந்நிலை ஏற்படாது என்று நினைக்கின்றேன். பெற்றோர்களும் ஆசிரியர்களும் பரீட்சை நெருங்கும்போதுதான் பிள்ளையைப் போட்டு வதை வதை என வதைப்பர். பத்து வயதென்பது அவ்வளவு சுமைகளை சுமக்கும் வயதல்ல. இதெல்லாவற்றையும்விட தற்போது இப்புலமைப் பரிசில் பரீட்சைகள் நடைபெறும் காலப்பகுதியில் அதற்கான விசேட வகுப்புகள் வியாபாரத்தைப் போன்று நடைபெறுகின்றது.

புலமைப் பரிசில் பரீட்சையில் தன் பிள்ளை சித்தியெய்த வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு பெற்றோரினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இன்று அது பல பெற்றோர்களின் கௌரவப் பிரச்சினையாகவும் இருக்கின்றது என்பது வேறு கதை. அதனால் தன் பிள்ளையை எப்பாடு பட்டேனும் சித்தியடைய வைக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் பணம் செலவழித்து ரியூசன் வகுப்புகளுக்கு அனுப்புகின்றனர்.

பணம் இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்? இதைச் சாட்டாக வைத்துக்கொண்டு சில ஆசிரியர்கள் ஒன்றிணைந்து விடுமுறை தினங்களில் நகர்ப்புறங்களில் கருத்தரங்குகளை நடாத்தி இப்பெற்றோர்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தைக் கறந்து விடுகின்றனர். இவ்வாறான கருத்தரங்குகளுக்கு துண்டுப்பிரசுரங்களின் மூலமாக ஆசை வார்த்தைகளிலான வண்ண வண்ண விளம்பரங்கள் விநியோகிக்கப்படுவதால் பலர் அதை நம்பி ஏமாந்து போயுள்ளனர். கருத்தரங்குக்கு முற்பணமாக ஒரு தொகை, பின்பு அங்கு மாணவர்களுக்கு கொடுக்கப்படும் ஒப்படைத்தாள்கள் மற்றும் வினாத்தாள்களுக்கென தனித்தனித் தொகைகள் அறவிட்டு பணத்தை இலகுவாகக் கறந்துவிடுகின்றார்கள்.

தமது பிள்ளைகளின் நலனில் மாத்திரமே அக்கறை கொண்டு செயற்படும் பெற்றோர்களும் பணத்தை பெரிதுபடுத்தாமல் கொடுப்பது அவர்களுக்கு இன்னும் இலகுவாகிவிடுகின்றது. பணத்தை மட்டும் குறியாக வைத்து செயற்படும் ஆசிரியர்களுக்கு பிள்ளை படித்தால் என்ன படிக்காவிட்டால் என்ன. எல்லா ஆசிரியர்களும் அப்படியல்ல. இப்படித்தான் அண்மையில் ஹட்டன் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் சில ஆசிரியர்கள் ஒன்றிணைந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்கொன்றினை நடாத்தியிருக்கின்றனர்.

அதனை இலவசம் என்று கருதிய ஒரு தோட்டத் தொழிலாளியான தந்தையும் தன் மகனை அழைத்து வந்திருக்கின்றார். ஆனால் அதற்கு பணம் வேண்டும் என்று குறித்த ஆசிரியர்கள் கூறவே அவர் தன்னிலையை எடுத்துக்கூறி அதற்கான பணத்தை பின்பு எப்படியும் தந்து விடுவேன் என்று கூறியிருக்கின்றார். ஆனால் அவ் ஆசிரியர்களோ அதற்கு இணங்காமல் திருப்பியனுப்பியிருக்கின்றனர். அன்று அக்கருத்தரங்கில் மாணவர் கூட்டம் அலைமோதியது.

அவர்கள் நினைத்திருந்தால் அம்மாணவனை இலவசமாகவே அக்கருத்தரங்கில் இணைத்துக் கொண்டிருக்கலாம். பணம் அவர்களது கண்ணை மறைத்துவிட்டது. ஆசிரியர் தொழில் என்பது வெறுமனே சம்பளத்தை மட்டும் குறிக்கோளாக கொண்டதல்ல. கண்ணெனத் தகும் கல்வியை மாணவருக்கு ஊட்டும் குருவே ஆசிரியர். ஆனால் சிலர் பணம் எனும் மாயையால் ஆசிரியர் தொழிலுக்கே களங்கம் ஏற்படுத்துகின்றனர்.

தன்னலம் பாராது செயற்படும் நல்லாசிரியர்களும் இருக்கவே செய்கின்றனர். குறிப்பாக சொல்லவேண்டுமாயின் கடந்த வருடம் வட்டவளை தோட்டப்புற பாடசாலையொன்றில் கல்வி கற்ற தந்தையை இழந்த மாணவனொருவனை தரம் ஐந்துக்கு பொறுப்பான ஆசிரியர் ஒவ்வொரு நாளும் மாலை வேளைகளில் வீட்டுக்கு அழைத்துச் சென்று படிப்பித்தார். அந்த மாணவனும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தினான்.

**எம். சந்திரசேகரன்**

அதேபோல 2008 ஆம் ஆண்டு இதே வட்டவளைப் பகுதியிலுள்ள பிரிதொரு தோட்டப்புறப் பாடசாலையிலுள்ள அதிபரொருவரும் மாலை வேளைகளில் வகுப்புநடாத்தி மாணவியொருவரை சித்திபெற வைத்துள்ளார். இப்படியான சமூகநல அக்கறை கொண்ட ஆசிரியர்களும் இம்மலையகத்தில் இருக்கவேசெய்கின்றனர். ஆனால், தற்போது பணத்துக்காக போலி வேஷம் போடும் ஆசிரியர்களிடம் இந்த நல்லுணர்வுகள் அறவே இல்லாமல் இருக்கின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மலையகத்தின் எதிர்காலமே கல்வியென்ற அச்சாணியில்தான் தங்கியிருக்கின்றது. அதுவும் இவ்வாறு வியாபாரமாக்கப்பட்டு விடுமாக இருந்தால் கண்ணிருந்தும் குருடாக இருப்பதற்கு சமமாகும். மலையக சமூகத்தின் சமூகவியலைக் காக்கவேண்டிய ஆசிரியர்களே இவ்வாறான ஈனச்செயல்களில் ஈடுபட்டால் யாரிடம் போய் சொல்வது? இதை சம்பந்தப்பட்ட கல்வித்துறை நிர்வாகம் கருத்திற்கொள்ளுமா?



# அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்திற்குமான தலைமைத்துவத் திறன்களை வளர்ப்போம்

த. சிந்துஜா

ஒன்றிணைந்த இலங்கை என்பது பௌதீக காரணிகளால் அல்லது பௌதீக வளங்கள், எல்லைகளால் ஒன்றிணைக்கப்படுகின்ற விடயம் மாத்திரமல்ல. சிந்தனா ரீதியான உள்வாங்கல் அல்லது சிந்தனா ரீதியான ஒன்றிணைப்பும் தேவைப்படுகின்றது. அதற்காக மூவின மக்களும் வாழும் இந்த நாட்டில் அதன் சமூக பின்னணிகள் அனைத்தும் பல்வேறு வழிகளில் ஒன்றிணைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதற்கு நல்லிணக்கம் அல்லது மீளிணக்கம் என்ற ஒன்று கட்டாயம் தேவை. குறிப்பாக இளைய சமுதாயத்தினரை முழுமையாக அதற்குத் தயார்படுத்த வேண்டியிருக்கின்றது.

இலங்கையில் வாழ்கின்ற எதிர்கால இளம் தலைமுறையினை நல்லிணக்கத்துடன் கட்டியெழுப்பும் நோக்கில் சிறிலங்கா யுனைட்ஸ் (Srilanka unites) அல்லது 'ஒன்றுகூடுவோம்' என்னும் அமைப்பின் மூன்றாவது மாநாடு அண்மையில் நடைபெற்றது. இம்மாநாடு இம்முறை கண்டி அஸ்கிரிய மைதானத்தில் தொடர்ந்து ஐந்து நாட்களாக நடைபெற்றது. 15 தொடக்கம் 18 வயதுக்கிடைப்பட்ட பல்லின மதப் பின்னணியுடைய 600 மாணவர்கள் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர். அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்திற்கும் அவசியமான தலைமைத்துவத் திறனை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.

இந்நாட்டின் புத்திஜீவிகளின் வழிகாட்டலின் கீழ் கலந்துரையாடல்கள் உள்ளடங்களாக பல்வேறு செயற்பாடுகளில் பங்குகொள்வதற்கான வாய்ப்பு இம்மாணவர்களுக்குக் கிடைத்தது. தலைமைத்துவப் பயிற்சியைப் போன்று சமூகங்களுக்கிடையிலான இடைவெளிகளைக் குறைப்பதற்கான தமது பங்களிப்புக் குறித்த கல்வியையும் இம்மாணவர்கள் கற்றுக்கொண்டனர். 2011ஆம் ஆண்டுக்கான இவ் இளைஞர் முகாம் ஏனைய வருடங்களை விட முற்றிலும் வித்தியாசமாக அமைந்திருந்தது. புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற இளைஞர் யுவதிகளும் இந்நிகழ்விற்காக அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஶ்ரீலங்கா யுனைட்ஸ், கல்வியமைச்சுடன் இணைந்து முன்னெடுத்துச் செல்லும் இத்திட்டத்தில் மாணவர்களுக்கு உளவளம், விளையாட்டு, கலாசாரம், மற்றும் தலைமைத்துவம் போன்றவற்றில் சிறப்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கடந்த கால யுத்த சூழ்நிலையால் மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்த வட, கிழக்கு மாணவர்களுக்கு இத்தலைமைத்துவப் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. சகல இன மதங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் மொழித்தேர்ச்சியும் ஏற்பட இப்பயிற்சி ஓரளவு வழிவகுத்துள்ளது. எல்லோரும் ஒரு தேசத்து பிள்ளைகள் என்பதை அவர்கள் இந்நிகழ்வினூடாக நிரூபித்துவிட்டனர். தத்தம் பாரம்பரிய உடைகள் அணிந்து மகிழ்ச்சியுடன் காணப்பட்ட அப்பிள்ளைகளுடன் உரையாடும் சந்தர்ப்பம் எமக்கும் கிடைத்தது. முல்லைத்தீவிலிருந்து வருகை தந்திருந்த ஜெனோராஜ் மரியதாஸ் என்ற இளைஞனிடம் சென்று அவரது மனநிலை பற்றிக் கேட்டேன்.



'நாங்கள் இங்க வரேக்க இப்படி இவ்வளவு ஒற்றுமையாக இருப்போம் எண்டு நினைக்கேல்ல. தமிழர்களும் சரி சிங்களவர்களும் சரி எல்லோரும் ஒற்றுமையாக இருக்கின்றனர். நாங்கள் வந்த முதல் நாள் எங்கண்ட தமிழர்களோட மட்டும் தான் கதைத்தம். அதுக்குப்பிறகு அண்டைய இரவு அவங்களும் வந்து எங்களிடம் கதை கேட்டாங்கள். நாங்களும் கதை சொன்னம். அவங்களுடைய மொழி எங்களுக்கு விளங்கல. அப்படி இருந்தும் நாங்கள் தெரிஞ்சாக்கள் மூலம் என்னெண்டு விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடியவாறு இருந்தது. அவங்களுக்கும் அப்படித்தான்' என்றார் மகிழ்ச்சியுடன்.

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வந்து இலங்கை மாணவர்களுடன் மகிழ்வுடன் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டிருந்த ஒலிவ சுபசிங்கவைச் சந்தித்தோம்.

'இலங்கையில் நடைபெற்ற மோதல்கள் காரணமாக புலம்பெயர்ந்தவர்களுக்கு இலங்கையர் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து வேலை செய்வதைப்போலவே புலம்பெயர்ந்தவர்களும் இலங்கைக்கு நன்மை செய்கின்றனர்' என்றார்.

நடனம், சித்திரம், இசைக் கருவிகள் வாசித்தல், இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்குபற்றிய மாணவர்கள் ஒருவருக்கொருவர் கட்டியணைத்தும் உணவூட்டிக் கொண்டும் தங்கள் ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொண்டனர். புலம்பெயர் மாணவர்கள் தங்களுக்கு இவ்வாறான பயிற்சி ஒரு நல்ல விடயம் என்று குறிப்பிட்டனர். இனம், மொழி, மதம் என்பவற்றை மறந்து எவ்வித வேறுபாடுகளுமின்றி பழகுவதற்கு தமக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு இதுவென்றார்கள்.

அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்த புலம்பெயர் மாணவியான இஷிகா கவிரத்ன, 'புலம்பெயர்ந்த நாங்கள் சில விடயங்களை உடனடியாக விமர்சிக்கின்றோம் என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கு காரணிகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் இலங்கைக்கு உதவி செய்ய வேண்டும். இலங்கையை முன்னோக்கிச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கின்றோம்' என்றார்.



ஜெனோராஜ்



ஒலிவ சுபசிங்



இஷிகா



சுகந்தினி

நல்லிணக்கத்தை மேம்படுத்தும் இந்நிகழ்வு குறித்து கடந்த காலங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நற்புறவை வளர்ப்பதற்கு இந்நிகழ்வுகள் ஓரளவு பங்களிப்பை வழங்கிவந்தாலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அளவிற்கு அவை போதுமானதாக இல்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. என்றாலும் நாட்டில் பல பாகங்களிலிருந்து வந்த இளைஞர் யுவதிகள் தம்மிடையே தொடர்பாடலை வளர்த்துக்கொள்வதற்கு இந்நிகழ்வு நல்ல முயற்சியாகும்.


'தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்று பாகுபாடின்றி எல்லோரும் அனைத்து இனத்தின் மீதும் நம்பிக்கை வைக்கின்றபோது நிச்சயமாக ஓர் சிறந்த இலங்கையைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். இதை நான் இங்கு வந்த பின்தான் புரிந்துகொண்டேன். எம்மிடையே ஒற்றுமையைப் பலப்படுத்துவது எப்படி என்று இந்நிகழ்வினூடாகப் புரிந்துகொண்டேன்' என்றார் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த சுகந்தினி சச்சிதானந்தம்.

## ஒன்று கூடுவோம்

நல்லிணக்கம் தொடர்பாக இந்நிகழ்வில் மாணவர்களுக்கு சிறந்த அறிவூட்டப்பட்டதா என்று பலர் வாதிட்டாலும் மாணவர்கள் இந்நிகழ்வு தொடர்பில் திருப்தி கொண்டுள்ளமை அவர்களின் உரையாடலிலிருந்து தெரிந்தது. தங்களுக்குள் உள்ள உணர்வுகளை அவர்கள் பகிர்ந்துகொள்ளவும் தமக்கிடையிலான இடைவெளிக்கு என்ன காரணம் என்பதைப் புரிந்துகொள்ளவும் 'ஒன்றுகூடுவோம்' என்ற இந்நிகழ்வு நன்கு வழிசமைத்துள்ளது.

இறுதியில் நடைபெற்ற நடன நிகழ்ச்சியில் யாரையும் இனம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் அனைவரும் ஒற்றுமையாய் கூடி மகிழ்ந்தனர். இவைதான் உண்மையான நல்லிணக்கம் என்பதை, இறுதி நாளன்று அவர்கள் பிரிந்து தத்தமது ஊர்களுக்கு செல்லும்போது உதிர்ந்த கண்ணீர்த் துளிகளும் பிரிவின் ஏக்கங்களும் வெளிப்படுத்தி நின்றன.

# மூதூர் பிரதேசத்தின் தழும்புகள்



★ மூதூர் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் சுமார் 4 ஆண்டுகள் கடந்தும், இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. இவர்களைக் காலம் தாழ்த்தாது மீள்குடியேற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் எனத் திருகோணமலை நகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சி.நந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★ இவர்கள் மீள்குடியேற்றப்படாத பகுதிகளான கூனித்தீவு, சூடைக்குடா, சம்பூர் மேற்கு, சம்பூர் கிழக்கு, கடற்கரைச்சேனையின் சில பகுதிகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர்.

★ மொத்தமாக ஆயிரத்து 866 குடும்பங்கள் திருகோணமலை மாவட்ட அகதி முகாம்களில் வசித்து வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

★ கொழும்பில் கட்டுநாயக்கா, கொலன்னாவை, இரத்மலானை ஆகிய அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சுதந்திரமாகப் பெரும்பான்மை சிங்கள மக்கள் குடியிருக்க முடியுமென்றால், அரசு அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ள தமது பூர்வாங்க நிலங்களான கூனித்தீவு, சூடைக்குடா, சம்பூர், கடற்கரைச்சேனையின் சில பகுதிப் பிரதேசங்கள் ஆகியவற்றில் தமிழ் மக்கள் ஏன் குடியிருக்க முடியாது என்றும் அவர் வினவியுள்ளார்.

### மூதூரின் 7 வட்டாரங்கள்




- மூதூர்- 1 (தக்வா நகர், நெய்தல் நகர், அக்கரைச்சேனை)
- மூதூர்- 2 ( பால நகர், ஜின்னா நகர்)
- மூதூர்- 3 (ஆனைச்சேனை)
- மூதூர்- 4 (ஜாய வீதி)
- மூதூர்- 5 (பெரியபாலம், 64ஆம் கட்டை, கைரியா நகர், சாப நகர், அரபிக்கல்லூரி வீதி)
- மூதூர்- 6 (இக்பால் வீதி)

மூதூர்-7 (தர்கா நகர், நடுத்தீவு, கபீப் நகர்)

★ அகதிமுகாம் வாழ்க்கை முடிவின்றித் தொடர்வது உண்மையில் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதன்று. தமக்கான அடிப்படை வசதிகளுடன் சுயமான பொருளாதாரத்துடன் தமது சொந்த நிலங்களிலேயே இம்மக்கள் வாழ விரும்புகின்றனர். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமையாகும். எனவே, அரச உயர் அதிகாரிகள் இம்மக்களின் மீள்குடியேற்றத்திற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மூதூர் NEWS FEED

### 01 ஒகஸ்ட் 2006

மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த 38,000க்கும் அதிகமான முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டனர். 54பேர் பலியாகினர், 1176 பேர் காயமடைந்தனர். பல கோடி ரூபா சொத்திழப்பு ஏற்பட்டது.

### 04 ஒகஸ்ட் 2006

பாரிசைத் தலைமையகமாகக் கொண்டுள்ள பட்டினிக்கு எதிரான அமைப்பு Action Contre La Faim (ACF) என்ற மனிதாபிமான அமைப்பின் 17 உள்ளூர் பணியாளர்கள் மூதூரில் உள்ள அவர்களின் அலுவலகத்தில் மரண தண்டனை விதிக்கப்படும் பாணியில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### 07 ஜனவரி 2011

மூதூர் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினருக்கும் அமைச்சர் முரளிதரனுக்குமிடையேயான சந்திப்பில் மூதூர் பிரதேசத்தில் இயங்கும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (MPCS) கட்டிடங்களை மீளப்புனரமைப்பதற்கும் வேண்டிய நிதியினையும் மற்றும் வாகனம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்தார்.

### 18 ஏப்ரல் 2011

மூதூர் சந்தைப் பகுதியில் அதிசக்தி வாய்ந்த குண்டொன்று வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களினால் கண்டு பிடிக்க பட்டு பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட குண்டு செயலிழக்கும் இராணுவத்தினரால் குறித்த குண்டு செயலிழக்கவைக்கப்பட்டது.

### 02 மே 2011

மூதூர் கிழக்கு- கட்டைபறிச்சான் தெற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மூதூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதேசசபை உறுப்பினருமான க.திருச்செல்வம் அவர்களது ஏற்பாட்டில் இச்சங்கம் உருவாக்கப்பட்டது.

### 15 ஜூலை 2011

மூதூர் கிழக்கு கூனித்தீவு பிள்ளையார் ஆலயம், பத்திரகாளி அம்மன் ஆலயம் என்பனவற்றுக்கு செல்வதற்கான அனுமதியை ஐந்து வருடங்களின் பின்னர் இராணுவத்தினர் வழங்கினர்.

### 25 ஜூலை 2011

சேருவில மற்றும் மூதூர் பிரிவுக்கு உட்பட்ட கிளிவெட்டி, அரியமான்கேணி, எல்.பி.ஐ, லிங்கபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 25 பேர் நீலாப்பலை இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு, இராணுவத்தினரால் விசாரணை செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக முன்பு செயற்பட்டவர்கள், அவர்களுக்கு உற்சாகம் அளித்தவர்கள், உணவு வழங்கியவர்கள் என்ற சந்தேகத்தின்பேரிலேயே இவர்கள் இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.


### 14 ஒகஸ்ட் 2011

மூதூர் கடற்படை முகாமில் இருந்து மக்களை அச்சுறுத்தி வந்த கடற்படை வீரர் ஒருவர் பெண்ணுடன் பாலியல் சேஷ்டை புரிந்த நிலையில் கொதித்து போன மக்கள் மூதூர் கடற்படை முகாமின் மீது சரமாரியான தாக்குதலை நடத்தினர்.



## திருமலையின் மூதூர் பிரதேச தகவல் திரட்டு


- கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரம்தான் மூதூர் பிரதேசம்
- கடல் சார்ந்து இருக்கும் இந்த நகரில் ஆரம்ப காலத்தில் முத்துக் குளிக்கும் தொழில் பிரபலமாக இருந்ததாகவும் இதனால் இவ்வூருக்கு முத்தூர் என்று பெயர் வழங்கியதாகவும் கூறப்படுகின்றது. ஆனாலும் காலவோட்டத்தில் பெயர் மருகி மூதூர் என்று ஆகியுள்ளது. இங்கு முஸ்லிம் மக்களும் மூதூரின் கிழக்கு பகுதியான சம்பூரில் தமிழ் மக்களும் வாழ்கின்றனர்.
- மூதூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, கூனித்தீவு, நவரெட்னபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1486 குடும்பங்களைச் சேர்ந்த 5961 பேர் 2006 ஏப்ரல் மாதம் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்தனர்.
- 2006 ஏப்ரல் மாதம் வெளியேறிய இப்பகுதி மக்கள் தற்போது மூதூர் பிரதேச செயலாளர் பிரீவில் உள்ள கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களிலும் கட்டைப்பறிச்சான் கிராமத்தில் தனியார் காணிகளிலும் வசித்து வருகின்றனர்
- மூதூர் புவியியல் அமைப்பானது விவசாயத்துக்கும் மீன்பிடிக்கும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது.
- இங்குள்ளவர்களின் கல்வி அறிவு 98 வீதம் ஆகும்.
- மூதூர் பிரதேசத்துக்கு பெருமளவிலான உல்லாசப் பயணிகள் சேருவில 11 என்னும் கப்பல் மூலமாக சேருவில விகாரை, லங்கா பட்டண, நொக்ஸ் சுனாமி பிரதேசங்களையும் பார்வையிடுவதற்காக வருகை தருகின்றனர்.
- காலையில் திருமலையிலிருந்து புறப்படும் உல்லாச பயணிகளில் உள்ளூர், வெளிநாட்டு பயணிகளும் அடங்குகின்றனர். மூதூர் துறைமுகத்தை வந்தடையும் பயணிகள் மூதூர் துறைமுக கடல் பரப்பில் நீராடி கடல் உணவுகளையும் இங்குள்ள மீன் வாடிகளில் வாங்கி லங்கா பட்டணத்துக்குக் கொண்டு சென்று அங்கு சமைத்து உண்ண கொள்வனவு செய்வதையும் காண முடிகின்றது.
- வெளியூர் வாசிகளின் வருகையால் மூதூர் பிரதேச ஹோட்டல்களிலும் அதிகமான வியாபாரங்கள் இடம் பெற்று வருகின்றன.



# சட்டம் பேசுகிறது
## கேள்வி–பதில்


**கேள்வி:** என்னிடம் ஓர் அங்கவீனமான சிறுவன் வளர்ந்து வருகிறான். அவனது தந்தையோ அவனை பராமரிக்காது புறக்கணித்து வருகிறார். அவரிடமிருந்து பராமரிப்புச் செலவினைக் கோரிப் பெற்றுக்கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏதும் உள்ளனவா?

**- என். காராளசிங்கம், நெல்லியடி, யாழ்ப்பாணம்.**



**பதில்:** 1999ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க பராமரிப்புக் கட்டளைத் திருத்தச் சட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கான பராமரிப்புத் தொகையை அவர்களுடைய பெற்றோரிடமிருந்து பெறுவதற்கான சட்ட ஏற்பாடுகள் உண்டு. இச்சட்டத்தினடிப்படையில் நீதிமன்றம் இத்தகைய வழக்கு தொடர்பான விடயங்களை ஆராயும். இதனடிப்படையில் குழந்தையின் தந்தை, குறித்த நபர்தான் என்பது உறுதிப்படுத்தப்படும். இன்றைய காலப்பகுதியில் DNA பரிசோதனை அதற்கான சிறந்த வழியாகும்.

பராமரிப்புச் செலவீனங்களுக்கான விண்ணப்பம் பின்



**கேள்விகளுக்கு பதிலளிப்பவர்**
**சட்டத்தரணி எஸ்.எம். என். மர்சூம் மௌலானா**

வருமாறு கோரப்படலாம்.


ஒரு குழந்தைக்கான அல்லது அங்கவீனமுற்ற குழந்தைக்கான பராமரிப்புச் செலவிற்கான விண்ணப்பம் முன்னெடுக்கப்படும் போது அத்தகைய விண்ணப்பம் குழந்தையின் மூலமாகவோ அல்லது அங்கவீனமுற்ற குழந்தையின் மூலமாகவோ அல்லது குழந்தை / அங்கவீனமுற்ற குழந்தையைப் பராமரிக்கின்ற யாதேனும் ஒரு நபரின் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

பராமரிப்புச் செலவீனங்களைக் கோரும் இவ்விண்ணப்பம் விண்ணப்பதாரி வசிக்கின்ற அல்லது எந்த நபருக்கெதிராக பராமரிப்பு வழக்கு தொடரப்படுகின்றதோ அந்த நபர் வசிக்கின்ற பகுதிக்குரிய நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதவான் நீதிமன்றத்தில் பராமரிப்புக் கோரி வழக்குத் தொடரலாம்.

★ ★ ★

**கேள்வி:** எனது நண்பி அவளது அலுவலகத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார். அதாவது, அலுவலகத்தின் தலைமை அதிகாரி தன்னுடன் முறைகேடான பாலியல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டால் மாத்திரமே அவளது இடமாற்றத்தை உறுதிப்படுத்துவதாக கூறி அவள் உடல் உளரீதியான துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டாள். எனவே, அவளது இடமாற்றத்தை விரைவாகப் பெறுவதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு பணிவாக வேண்டுகிறேன்.

**- நிர்மலா தேவி, கிண்ணியா**



**பதில்** உங்களுடைய கேள்வியிலிருந்து எனக்கு மிகவும் தெளிவாக விளங்குவது என்னவென்றால் திணைக்களத்தின் உயர் அதிகாரி முறைகேடான பாலியல் தொடர்பினை ஏற்படுத்தி உங்கள் நண்பியின் இடமாற்றத்தை உறுதிப்படுத்துவதாகக் கூறுகிறார். இது ஒருவகையில் அவர் இலஞ்சம் பெறுவதாகவே கருதப்படும். 1954 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் அதன் திருத்தச் சட்டங்களின் பிரகாரமும் ஒரு அரசாங்கத் திணைக்களத்தில் பணியாற்றும் யாரேனும் ஒரு நபருக்கு இலஞ்சம் வழங்குவதோ அவர் பெறுவதோ சட்டப்படி குற்றமாகும் இலஞ்சத்தை எதிர்பார்த்து அரச பணி ஒன்றைத் தாமதடப்படுத்துவது இலங்கையில் ஒரு தெளிவான குற்றமாகக் கருதப்படும். இவ்வாறான விடயங்கள் பற்றித் தெரியப்படுத்துவதற்கு பின்வரும் முகவரியை நாடலாம்.




**இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் விசாரணைகள் ஆணையாளர்,**
இல 36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு - 07.
தொ.பேசி இலக்கம்: 2586257/ 2584872/ 2586841

**வாசகர்களே...!**
- சட்டப் பிரச்சினைகளில் சிக்கி அவதியுறுகிறீர்களா?
- உங்கள் சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடிய வில்லையா?
- கவலையை விடுங்கள். 'இருக்கிறம்' சஞ்சிகையில் 'சட்டம் பேசுகிறது' பகுதிக்கு உங்கள் சட்டப் பிரச்சினைகளை எழுதியனுப்புங்கள்.
- அனுபமிக்க சட்டத்தரணிகள் பதிலளிப்பார்கள்.

**சட்டம் பேசுகிறது, இருக்கிறம், 03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-7**

## ◄ நக்கல் நையாண்டிப் போடியார் ►

*எப்புடி சொகமா இருக்கீங்களா...?*

*இன்டைக்கு என்ன எண்டு தெரியுமா? இலங்கயில் எலக்ஷன் நடக்கிறது ஒண்டும் புதுசு இல்ல. ஆனா, அந்த எலக்ஷன்ல நடக்கிறதுதான் புதுசு பாருங்க. முஸ்லிம் காங்கிரஸ்ட கோட்ட கல்முனயிலயும் எலக்ஷன் நடக்குதுதானே. இதுல குஞ்சு, குறுமனியான் எல்லாம் எலக்ஷன் கேக்குது எண்டா பாருங்களேன். ஒழுங்கா ஸ்கூலுக்குப் போயிருக்கமாட்டானுகள். எலக்ஷன் கேட்கிறானுகள். கேட்டா சமூக சேவயாளர் எண்டு செல்லுறானுகள்.*

*இவனுகள்ட சமூக சேவதான் நாட்டுக்கே தெரியுமே... பொம்புளப் புள்ளயள் ஸ்கூலுக்குப் போகேக்க அவங்க பின்னாடி காவலுக்குப் போறதும் வரும்போது கூட்டிவாறதும். இவனுகளுக்கும் நம்முட சனங்க வோட்டுப் போடும் எண்டா இந்த சமுதாயத்த மாத்த ஏலாதுடப்பா...!*

*நாலு பணம் சுருட்டனும் எண்டா, அரசியல்ல எறங்குறது. இப்ப அரசியல் என்கிறது குடிசக் கைத்தொழிலா மாறிப்போச்சுடப்பா. ஆரும் எலக்ஷன் கேட்கலாம். ஏலாட்டி சுயேச்சயிலயாவது கேட்டு பேமஸ் ஆகலாம் பாருங்க. எத்தன பேர்கிட்ட அடிவாங்கின நானே எவ்வளவு பேமஸ்? நானே எலக்ஷன் கேட்கல. தயவு செஞ்சி சனங்களே இந்த புள்ளக்கௌயலுக்கு வோட்டுப் போட்டு உங்கட பொன்னான வோட்ட மண்ணாக்கிடாதீங்க.*

*ஆரு சமூகத்துக்கு நல்ல சேவ செய்வாங்களோ அவங்களுக்கு போடுங்க. புதுசா முளச்சதுகளுக்காக வோட்டுகள வேஸ்ட் பண்ணிடாதீங்க...*

*மறுகாவும் வருவன்...!*





சிறுகதை

# துப்பாக்கியின் காலம்



கறுவல் வந்தான். துவக்கோடு வந்தான். துவக்கின் இரண்டு குழல்களும் புகையைக் கக்கின.

'யாரைச் சுட்டனி?' மணியம் கேட்டான். கறுவல் பேசவில்லை. கறுவல் முறைத்தான். உள்ளுக்குள் கோபம் வந்தாலும் துவக்குப் பேசும் என்பது அறிந்ததே. யார் இயக்கத்தைப் பற்றி தப்பாய்ச் சொன்னாலும் இரண்டு குழலுக்குள்ளாலும் துப்பாக்கி புகையைக் கக்கிப் பார்க்கும்.

'எடேய் மணியம் தட்டாரக் குணத்தைத்தான் சுட்டனான்'

'ஏனடா கறுவல், குணத்தார் என்ன செய்தவர்'

கறுவல் முன் கோபக்காரன். கையில் கொலைக்கருவியை கொடுத்தது யார்? யாராய் இருந்தால் என்ன? அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே. மணியத்தார் குற்றுயிராய்க் கிடந்தார்.

'முந்திக் கறுவல் வீட்ட இருக்கேக்கை, குணத்தார் வீட்டிலைதான் மூண்டு நேரம் சாப்பாடு. அவிச்சுப் போட்ட குணத்தாற்றை மனிசி நாகம்மாவை வெள்ளையாடையோடை பாக்கிற விருப்பத்திலை சுட்டவனே கறுவல்' ஒருவன் வாயோரியாகக் கேட்டான்.

சட...சட...சட..புட.. பிறகும் சத்தம். கறுவல் Camp இன் பின்பக்கம் நின்று சுட்டான். 'அடே உவனுக்கு என்ன நடந்தது. சும்மா தோட்டாக்களை வீணாக்குறான்'

ஒருவேளை உவன் மற்றவங்களின்ரை ஆளோ? மனிதனின் சந்தேகம்தானே எல்லாத்துக்கும் அடி.

'போ போய்ப் பார். கவனமெடா. கறுவல் இண்டைக்கு என்னவோ ஆவேசத்திலை நிக்கிறான்'

கண்கள் ரத்தமாக உடம்பெல்லாம் வேர்க்க விறுவிறுக்க தோட்டா முடிஞ்சு போக உறுமலுடன் இரட்டைக்குழல் துப்பாக்கியை நிலத்தில் வீசியெறிந்தான் கறுவல்.

'குமார் இங்கை வா! ராசனிட்டை போய்ச்சொல்லு உந்த ஏ.கே யை கொண்டு வரட்டாம் எண்டு'

குமார் எதுக்கும் பயப்படாதவன். ஆனால் கட்டை கறுவலின் சன்னதத்தைக் கண்டு மிரண்டு போனான். பயந்து போனவன் Camp தலைவர் ராசனிட்டை போய் கறுவல் சொன்னதைச் சொன்னான். 'டேய் ராசன்' கறுவல் கத்தினான். ஒரு கட்டனுக்கு கொடுக்க வேண்டிய மரியாதை ஒன்றையும் கறுவல் கொடுக்காமல் விட்டதாலை மிரண்டு போனவன், கோபப்பட்டான்.

'சிவம், பாலன், சிறி, கௌரி, ஆனந்தன் இஞ்சை ஓடி வாங்கோ. கறுவலைப் பிடியுங்கோ!'

கறுவல் கருங்காலி மரத்தில் பிணைக்கப்பட்டான்.

'டேய் டேய்'

கறுவல் இன்னும் கத்தியபடியே இருந்தான்.

சொட்டுச்சொட்டாய் மணியத்தாரின் உடம்பில் குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது. எத்தனையோ மாதங்களாய் சவுக்காரம் காணாத ஆஸ்பத்திரி பெட்சீட்டின் மேல் படுத்திருந்த மணியத்தாருக்கு கட்டிலின் மூட்டைக்கடி வேறு. மயக்கம் வருவதும் போவதுமாக இருந்தது.

'மிருதங்கத்துக்கு இரண்டு பக்கமும் அடியடி நாகம்மா!'

இன்னும் சாகாமல் இருந்தவரை 'கொஞ்சம் பேசாமல் இருங்கோ' என்றபடி கண் கலங்கினார் நாகம்மா.

'ஏன் பேசாமல் இருக்கச் சொல்லுறாய்' இண்டைக்கு எங்கடை நிலமை என்ன? 'ம்' எண்டால் ஆமிக்கு பயப்பிடவேணும். பிறகு உவையளுக்கு பயப்பிடவேணும். கொஞ்சம் வாய் பேசினால் போச்சு. துவக்கு வில்லு தட்டுப்பட்டிடும்'

'அப்பா தயவு செய்து பேசாதையுங்கோ.. இப்ப நீங்கள் இருக்கிற நிலமையிலை இது நல்லா இல்லை' இரண்டாவது மகள் வசந்தி தனது அப்பாவை அமைதிப்படுத்தினாள்.

'என்ன மகள் சொல்லுறாய்.. இப்ப என்ரை உயிர் போயிடும் எண்டு நான் நினைக்கேல்லை. உவன் கறுவல் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வானெண்டு நான் கனவிலையும் நினைக்கேல்லை. ஆனால் அவன் நல்ல பொடியன். ஏன்தான் திடீரெண்டு இப்படி ஆயிட்டுதோ தெரியாது. நான் அவனோடை எப்பவும் போலத்தான் பேசினனான். என்னத்தைக் கண்டானோ தெரியாது திடீரெண்டு துவக்கை நீட்டி சுட்டுப்போட்டான். நான் உதுக்கு பயப்பிடேல்லை. உதுக்கு பயப்புட்டால் எங்கடை உலகத்திலை வாழ ஏலுமே? மகள் நீ சின்னப்பிள்ளையில்லை. உனக்கும் விளங்கும். இண்டைக்கு எங்கடை நிலமையைக் கொஞ்சம் சிந்திக்கவேணும் பிள்ளை. இயக்கம் இயக்கம் எண்டு சொன்னால் அதுக்குள்ளேயும் எத்தினை பிரச்சனைகள், எத்தினை பிளவுகள் பிறகு எங்கை நிம்மதி?'

மணியத்தார் இரண்டுதரம் விக்கினார்.. கண்ணை மூடினார்... டொக்டர் ஓடி வந்து பார்த்துவிட்டு சொன்னார் 'மயக்கம்தான்'

கறுவலைக் கட்டியிருந்த மரத்தைச் சுற்றி ஆட்கள் வந்து விட்டார்கள்.

'என்ன கூத்துப் பாக்கிறியளே? நானென்ன பாம்பாட்டியே? இல்லாட்டிப் பைத்தியக்காரனே?' ராசனுக்குக் கேட்டது..

'இல்லாட்டி பைத்தியக்காரனோ?..'

'அடக்கடவுளே!'

ராசன் ஏங்கிப்போனான். ஒரு வேளை அப்படி இருக்குமோ.. பொறி தட்டியது. மனம் பாரமாகியது. ச்சீ.. எங்கடை ஆக்களை எத்தினையிலை இழக்கிறது.. யுத்தம்.. மஞ்சள் காச்சல்.. வாந்திபேதி.. மலேரியா.. இப்ப இதுவுமா? ஒரு அழிவின் ஆரம்பம் போல கறுவல் கருங்காலி மரத்தில் கட்டியிருந்தபடியே நின்றிருந்தான். ராசன் யோசித்தான் இப்படியே போனால்...? அவசர வாகனம் வயர்லெஸ் இன் சொல்லுக்கு வந்து நின்றது. கறுவல் கட்டுக்கு அடங்காததால் கட்டியே ஏற்றப்பட்டான். வைத்திய பரிசோதனை முடிவில் பைத்தியம் உண்மையாக்கப்பட்டது. மற்றப் போராளிகளையும் இப்படித் தாக்கினால் பைத்தியங்களை வைத்து... ராசன் அதிர்ந்து போனான்.

குணத்தார் கண்திறந்தார். மயக்கம் தெளிந்தார். தலைமாட்டில் பார்த்தார். நாலைந்து இயக்க பெடியன்கள் துவக்குகளோடு வந்து நிற்பதைக் கண்டார்.

'குணமண்ணை உவன் கறுவலுக்கு பைத்தியமாம். பக்கத்திலை தான் அறையிலை போட்டிருக்கினம். இடைக்கிடை கத்துறான். உங்களுக்கு மயக்கமாயிருந்ததிலை ஒண்டும் விளங்கேல்லை'

அவருக்கு பெருமூச்சொன்று தானாய் வந்தது. குணத்தார், ராசனை பக்கத்தில் கூப்பிட்டார். அவனின் கையைப் பிடித்தார். அவனின் கையில் தன் கையை வைத்து அழுத்தினார். மீண்டும் கண் கலங்கினார். இவ்வளவு காலமும் சனத்துக்குள்ளைதான் பைத்தியக்காரர் இருந்தினம். புள்ளையைப் பறி கொடுத்தவையள், தேப்பனைத்தின்னி, தாயைத்தின்னி.... எண்டெல்லாம் பைத்தியம் பிடிச்ச ஆக்கள் இருந்திச்சினம். வெளிநாட்டிலை இருந்து வந்த டொக்டர்மார் சொல்லிச்சினம் எங்கடை இடத்திலை தான் அதிகமாக பைத்தியக்காரர் இருக்கினம் எண்டு. அவையள் சொல்லாமலேயே எங்களுக்கு விளங்கிச்சு. இங்கை கிழடு கட்டையளை விட்டுப்போட்டு வெளிநாடு அது இதெண்டு புள்ளையள் போனாப் போலையும் இஞ்சை இருக்கிறதுகளை யுத்தத்திற்கு அனுப்பிப்போட்டு பிரேதத்தை எதிர்பாக்கிற நேரத்திலையும் பாதிக்கப்படுவது மனம்தானே. முந்தியெண்டால் பைத்தியம் ஒண்டு ரெண்டு, அதுவும் உதிலை இருக்கிற மந்திகையிலை கொண்டு போய் போட்டால் சரி. ஏதோ சுகமாயிடும்.

இப்ப மனநோய் எண்டு அங்கொடைக்கு கொண்டு போக ஏலுமே. அங்கை போனாலும் உவன் தமிழன். புலி, ஏதோ உளவு பாக்கிறதுக்குத்தான் பைத்தியக்காரன் போல நடிச்சு இஞ்சை வந்திருக்கிறான். தற்கொலைப்படையிலை உள்ளவன் போல எண்டு சொல்லுவினம். பைத்தியத்தோடை கொண்டு போய் பூசாவிலை போட்டிடுவாங்கள். இண்டைக்கு எங்கடை நிலைமை இப்படிப்போட்டுது.

குளுக்கோஸ் ஏறுவதில் தாமதம் ஏற்பட்டது. குணத்தார் மெதுவாய் செருமினார். குண்டு நல்லா பாஞ்சிருக்கு. ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. ஒரு நல்ல மனிசனை இழக்கப்போறம் என நினைத்தான் ராசன். குணத்தார் கண்ணை மூடித்திறந்தார். ஏதோ மின்னலடித்தது. கண்களில் வெளிச்சம் வந்து இருளும் வந்தது. நாகம்மாவும் வசந்தியும் விலகி நிற்க குணத்தார் ராசனின் கைகளையே பற்றிப்பிடித்தபடி படுத்திருந்தார். இப்போது அவரின் சிந்தனை இறப்பதற்கு முன்னால் என்பதாகவே இருந்தது.

'எங்கடை குஞ்சு, குருமன்களை எல்லாம் யுத்தத்திலை தாரை வார்த்தாச்சு. இருக்கிற மிச்சசொச்சமும் வருத்தத்திலை சாகுதுகள்..... இப்படியே போனால் இதின்ரை முடிவுதான் என்ன ஆகுமெண்டு சொல்ல ஏலாமல் இருக்கு. கடைசியிலை ஆருக்கு சுதந்திரம் வாங்குறது. சொல்லப்போனால் கட்டிடங்களும் இப்ப இல்லையே. மனிசன் எங்கை இருக்கப்போறான். இருக்கிறவையளுக்கும் பைத்திய வியாதி... இப்படியே எங்கடை இனமெண்டு ஒண்டு இருந்ததெண்டு வந்து குடியேறினவை சொல்லப் போகினம். அதுக்கு வாய்ப்பிருந்தால் துறந்த வீட்டிலை அது நுழைஞ்ச மாதிரி வருவினம். இல்லாட்டி ஆயதங்களோடை, அதுவுமில்லாட்டி உரிமையைச் சொல்லி எங்கடை பூமி எண்டு கொண்டு.... கடவுளே உப்படிப்போனா.... சுன்னாகம் கந்தரோடையிலை பழையதுகள் மிதக்கிற மாதிரி எங்கடை நிலமும் புதைஞ்சு மிதக்கும். அதுக்காக வெண்டாலும் நீங்கள் போங்கோ...'

இஞ்சை ஏதோ இரைஞ்சு கேக்குது... ஹெலிபோல.. ஆஸ்பத்திரி சிவப்புக் குருசும் அவங்களுக்குத் தெரியாது. 'ராசன் என்ரை குஞ்சு' என்றபடி... குணத்தாரின் கை பிடி இறுகியது... ஒரு முறைதான்... கை கொஞ்சம் கொஞ்சமாகச் சோர்ந்தது. ராசனின் கண்கள் பனித்தன. குணத்தாரின் மூச்சு நின்று போக.. ஆஸ்பத்திரி வார்ட் அழுகுரலால் நிரம்பியது. தோளில் ஏ.கே அழுத்த, தூக்க முடியாத மனப்பாரத்துடன் ராசன் நடந்து கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை)

◄ சங்கரன் ►


# மரணம் பெருகிய இறுதிக்களம் சாம்பலில் படிந்து நிற்கும் துயரம்

படையெடுப்புக்களால் சிதைந்து அழிந்து நிற்கும் வன்னி நிலத்தின் துயரோடிய அந்த இறுதி நாட்களின் பயங்கரங்களை புதுக்குடியிருப்பு நிலம் இன்னும் தனக்குள் வைத்திருக்கிறது. நிலமெங்கும் அழிக்கப்பட்ட பொருட்கள் தடயங்களாக காணப்படுகின்றன. நாம் ஒரு மாபெரும் யுத்தத்தை எதிர்கொண்டோம், மாபெரும் படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டோம், இடப்பெயர்வுக்கு உட்படுத்தப்பட்டோம். ஈழத்துச் சனங்கள் உலகில் எந்த மக்களும் எதிர்கொண்டிராத பேரவலத்தை சுமந்து சென்ற வழியிடங்களாகவும் பெயர்ந்து வந்து தங்கி ஓடியலைந்த இடங்களாகவும் வன்னிக் கிராமங்களின் கதைகளில் துயரம் படிந்துள்ளன.

யுத்த ஆயுதங்கள் அழித்த நிலத்தின் அலங்கோலமான காட்சி மற்றும் சனங்கள் கொல்லப்பட்ட மரணக் கதைகளை அங்கு சென்றால் பார்க்கலாம் கேட்கலாம். யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் தவித்தோடி இறந்தவர்களின் குரல்கள் ஈழத் தமிழர்களுக்கு நிகழ்ந்த பெரும் படுகொலையின் சாட்சியாகவும் ஈழத்துச் சனங்கள் எதிர்கொண்ட பேரழிவுகளின் சாட்சியாகவும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

மாபெரும் யுத்தப் பேரழிவுகளுக்குள் சிக்கிய மக்கள் இடம்பெயர்ந்து இன்னும் பல பிரதேசங்களில் மீள் குடியமர்த்தப்படாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர். சனங்கள் துளியளவு மனிதாபிமானமுமின்றி மாபெரும் வன்மத்தோடும் மாபெரும் அழிப்புத் திட்டத்தோடும் இந்தக் கிராமங்களில் வைத்துக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நான் பார்த்தவர்கள் எல்லோரிடமும் காணி நிலத்திற்குள் நிகழ்ந்த மரணக்கதைகள்தான் இருக்கின்றன. நமது சனங்கள் எத்தனை ஆயிரம் பேர் இங்கு கொல்லப்பட்டார்கள் என்ற கசப்பான உண்மைச் செய்தி மனத்தைக் குமுற வைக்கிறது.

எல்லாவற்றையும் சனங்கள் விட்டுச்செல்ல பொருட்கள் கைவிடப்பட்டுப்போக உக்கி உருக்குலைந்து குப்பைகளாய், அழிவின் எச்சங்களாய்



புதுக்குடியிருப்புக் கிராமங்கள் எங்கும் கிடக்கின்றன. அவர்கள் இழந்து சென்றது இந்தப் பொருட்களை மட்டுமல்ல. எல்லாவற்றையும் இழந்திருக்கிறார்கள். வாழ் நிலத்தை இழந்து கையில் கிடைத்தவற்றை எடுத்து ஓடி வந்து கடைசியில் கையில் இருந்தவற்றையும் இழந்து ஓட விரட்டப்பட்டிருக்கிறார்கள். உயிரை இழந்து, உயிர்போன உடலை இழந்து, கையை இழந்து, உடலின் பாகங்களை இழந்து, உறவுகளை இழந்து, மூர்க்கத்தனமான யுத்தத்தால் தஞ்சமடைந்த நிலக்குழிகளையும் இழந்து ஓடிச் சென்றிருக்கிறார்கள். எம்மக்கள் வாழ்க்கையை யுத்தம் சிதைத்து அழித்த நிலைமையை இந்த நிலப்பகுதிகள் விபரிக்கின்றன.



விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தை நீண்ட காலத்திற்குப் பின்னர் பார்த்தேன். அது எருக்கலை மேடாக அல்லது ஏதோ ஒரு படைமுகாம் அமைக்கப்பட்ட புதை மேடாக இருக்குமோ என்று நினைத்தேன். எல்லா துயிலும் இல்லங்களையும் போலவே விசுவமடு துயிலும் இல்லத்தின் கல்லறைகள் தகர்த்தழிக்கப்பட்டிருக்கின்றன. எருக்கலை மரங்கள் அடர்ந்து நிலத்தை கிழித்து வளர்ந்த கல்லறைகளைப் போல பூத்திருக்கின்றன.

அந்தக் கல்லறைகளின் அருகில் இருந்து அதன் கனவுகளை படித்த காலம் இன்று எருக்கலையை சுற்றி அடர்ந்த உன்னிப் பற்றைகளுக்குள் எறிந்து கிடக்கிறது. யுத்தம் தொடங்கிய காலத்தில் ஒருமுறை முல்லைத்தீவு நகரத்திற்குச் சென்று விட்டு பசியோடு திரும்பியபொழுது துயிலும் இல்லத்தை காவல் காத்த முதிய தந்தை ஒருவர் உணவு தந்து பசியாற்றிய நினைவு வந்தது.

◀ தமிழ்மாறன் ▶

1997இல் கிளிநொச்சியை இராணுத்தினர் ஆக்கிரமித்திருந்த காலத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த மாவீரர்கள் பலரும் விசுவமடு துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது விசுவமடுவிற்குச் செல்லமுடியாது வன்னியை இராணுவத்தினர் பிளந்திருந்தனர். அதனால் கல்லறைகளின் கதைகளை கேட்பதைப் போலவும் அவற்றின் கனவுகளை வாசிப்பதைப் போலவும் நாம் சென்று வரும் ஒரு கோயிலைப் போல உயிர்நிலமாய் நம்பிக்கை தந்திருந்தது. கொல்லப்பட்ட நமது நிலத்தின் உயிரோடு இன்னும் கனவின் செழிப்பை தரும் இந்த விதை நிலத்தோடு இம்முறை மரண நிலம் நோக்கிய பயணம் தொடங்கியது. சில நாட்களின் முன்பு பேரூந்தில் சென்ற பொழுது எனக்குப் பக்கத்தில் இருந்த தாய்மார்களது கண்களோடு பலரது கண்கள் விசுவமடு விதை நிலத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டு வந்தன.

விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தை கடந்து 'சீற்' எனப்படும் கூரைத்தகடுகளை தூரத்தூரமாக குத்தி நட்டிருந்தார்கள். எதையோ மறைப்பதற்காகவே அவை நாட்டப்பட்டிருக்கின்றன என்று, பார்ப்பவர்கள் நினைத்தாலும் வெட்ட வெளியில் அவற்றை ஏன் நட்டிருக்கிறார்கள் என்று கேள்வி எழும். அவை சரணடைந்த மக்களை சோதனையிடும் சோதனை நிலையங்களாக பெருக்கப்பட்டுள்ளன. ஒருபக்க மறைப்புக்களாக அமைக்கப்பட்ட நிறுத்தப்பட்ட கூரைத்தகடுகளின் முன்பாக சனங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு சோதித்து கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். அவலத்தை சுமந்த மக்களிடம் நடத்தப்பட்ட அந்த சோதனையில் எதைத்தான் மீட்டிருக்க முடியும்? மூங்கிலாற்றின் மேற்புறமாக இருக்கிற அந்தப் பெரும் வெளியில் ஒரு முறை பத்தாயிரம் மக்கள் சரணடைந்திருக்கிறார்கள். பரந்து வந்த மக்களை மிருகங்களை தடுத்து சோதனையிடுவதைப் போல பயன்படுத்தப்பட்ட அந்த கூரைத்தகட்டுத் தடுப்புக்கள் இப்பொழுது சரிந்தும் விழுந்தும் கிடக்கின்றன.

மூங்கிலாற்றில் சாம்பலும் இரத்தமும் கலந்து ஓடியிருக்கிறது. பரந்தன் முல்லை வீதியில் பசுமையான வயல்கள் நிறைந்த அந்த வெளிப்பகுதியில் இடையில் மூங்கிலாறு இருக்கிறது. அழகும் இதமும் தருகின்ற அந்த வெளிக்கு இத்தகைய அவலம் நிகழ்ந்து போனது. தண்ணீரும் சதும்பும் கொண்ட அந்த வெளியில் மக்கள் குடியிருக்க முடியாது. ஆனால் இடம்பெயர்ந்து வந்த மக்கள் அந்த வெளியை நிறைத்து தஞ்சமடைந்திருக்கிறார்கள்.


2009 மாசி மாதத்தின் நடுப்பகுதியில் இரவுப் பொழுதொன்றில் அந்தப் பகுதியை நோக்கி இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை நடத்திய பொழுது இடம்பெயர்ந்து வந்து தற்காலிக கூடாரங்களில் தங்கித் தூங்கிக் கொண்டிருந்த மக்களில் 31பேர் எரிந்து வெந்து இறந்துபோய்க் கிடந்தார்கள்.



ஷெல் விழுந்து எரிந்த இடத்தில் சிவப்பாக சிலைகளைப்போல சனங்களின் வேகிய உடல்கள் பளபளத்துக் கிடந்தன. ஷெல் மழையில் எங்கு ஷெல்கள் விழுகின்றன என்ன நடக்கின்றன என்று தெரியாத இரவைக் கடந்து மறுநாள் சனங்கள் பார்த்த பொழுதே அவர்கள் எரிந்து கருகிக் கிடந்தது தெரிந்தது.

எரிந்து கருகிய சனங்களின் புகைப்படங்கள் இணையங்களில் வெளிவந்திருந்தன. அந்தப் புகைப் படங்களின் முகங்கள் அழிந்து சவங்களாகியிருந்தார்கள். அந்தப் படத்தில் தென்பட்டவர்களைப் பார்த்தால் நமது உறவாய் நமது நண்பராய் தெரிந்தன. அடையாளம அழிந்த அந்த முகங்களைப் பார்த்த பலரும் நமது தாய் தந்தை சகோதர்களைப்போல இருக்கின்றன என்று அழுதிருந்தார்கள். என்னிடமும் அதே அச்சமும் வலியும் பரவியது. நெருப்பு தின்று மீதியாய் விட்டிருந்த அந்தச் சாம்பல் சனங்களின் உறைந்த சிலைகளை ஒரு பொழுதும் மறந்துவிட முடியாது.

# உதயன் தாக்குதலின் பின்னணியில் யார்?



யாழ்ப்பாணத்தில் வெளியாகின்ற உதயன் செய்திப் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் ஜூலை மாதம் 29ஆம் திகதி இனம் தெரியாத ஆயுததாரிகளால் தாக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

ஆயுததாரிகள் குகநாதனின் உயிரைப் பறிக்கும் நோக்கத்தில் கோரமாகத் தாக்கியிருந்தனர். தலையில் ஏற்பட்டுள்ள பாரிய தாக்குதல் காயத்திற்கு மத்தியிலும் வாழும் அதிர்ஷ்டம் அவருக்குக் கிட்டியது. யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உதயன் பத்திரிகை அலுவலகத்திலிருந்து அவரது வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும் போதே அவர் ஆயுததாரிகளின் தாக்குதலுக்குட்பட்டார்.

மற்றைய நாட்களில் அலுவலகத்தில் பணிபுரியும் ஒரு சிலரோடு பாதுகாப்பாக வீடு செல்லும் அவர் அன்றைய தினம் மாத்திரம் தனியாகச் சென்றிருந்தார். குறிப்பாக உதயன் பத்திரிகை அலுவலகத்திலிருந்து அவரது வீட்டிற்கு குறைந்தளவிலான மீற்றர் தூரமே இருந்ததாலும் வீட்டுக்கும் பத்திரிகை அலுவலகத்திற்குமிடையில் ஒரு இராணுவக் காவலரண் அமைந்திருப்பதாலும் தான் தாக்கப்படுவேன் என்கிற அச்சம் அவரிடம் குடிகொண்டிருக்கவில்லை.

குகநாதனைத் தாக்கிய ஆயுததாரிகளுக்கு அங்கு அமைந்திருந்த இராணுவக் காவலரண் எவ்விதத்திலும் தடையாக அமைந்திருக்கவில்லை. இராணுவக் காவலரணுக்கு 30 மீற்றர் தூரத்தில் வைத்தே குகநாதன் தாக்கப்பட்டிருந்தார். இராணுவக் காவலரண் கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் அமைந்திருந்தும் தாக்கியவர்கள் தப்பிவிட்டனர்.

இத்தாக்குதல் சம்பவமானது இலங்கையின் ஊடக சமூகத்திற்கு மிகவும் பாரதூரமான ஒன்று. யாழ்ப்பாண உதயன் பத்திரிகை ஆசிரியர் தாக்கப்பட்டிருப்பது அவர்களது தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அல்லாமல் அப்பத்திரிகையின் ஊடக பாவனைக்கு எதிராகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உதயன் பத்திரிகைக்கும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவல்ல. இதற்கு முன்னர் எத்தனையோ முறை இப்பத்திரிகை நிறுவனம் தாக்கப்பட்டமையால் இத்தாக்குதல் ஊடகச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்து நிற்கிறது.

ஆனால் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, 'கேள்வி கேட்பதற்கே பொருத்தமில்லாத ஒரு சிறு சம்பவமே இது' என அண்மையில் கூறியிருந்தார். தவிர, இதுபோன்ற எத்தனையோ தாக்குதல் சம்பவங்கள் இதைவிட பாரதூரமான முறையில் நாட்டைச் சுற்றி நாளாந்தம் இடம்பெற்று வருவதாகவும் அவர் வாதிக்க ஆரம்பித்திருந்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இச்சம்பவம் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் புலப்படுகின்ற சம்பவமாகையால் தனது வழமையான அதிரடியை இதிலும் காட்ட முனைந்துள்ளார்.

உதயன் பத்திரிகையின் செய்தியாசிரியர் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் நம்பகத்தன்மை தொடர்பிலான அறிக்கையொன்றை தனக்கு உடன் வழங்குமாறு ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபருக்கு கட்டளை பிறப்பித்திருந்தார். அவ்வறிக்கை உடனடியாக பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்டிருந்தது.

இத் தாக்குதல் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி ஊடக அமைப்பு கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றிருந்தது. அவ்வார்ப்பாட்டத்தின் இரண்டாம் கட்டம் ஓகஸ்ட் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் நடைபெற்றது.

இரண்டு ஆர்ப்பாட்டங்களிலும் அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்க அங்கத்தவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். பல வருடங்களின் பின் யாழில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர் தாக்குதல்களுக்கு எதிராகப் பலத்த கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் தெரிவித்திருந்தனர்.

மேற்படி மக்கள் எழுச்சிப் பேரணி பற்றி அறிந்த மையாலோ என்னவோ யாழ் ஆர்ப்பாட்டத்திற்கு முன்னைய தினமே அதாவது ஓகஸ்ட் 15ஆம் திகதி உதயன் செய்தியாசிரியர் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் எனக் கூறி கொழும்பு கலுபோவில ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த தமிழ் இனத்தவர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த சந்தேக நபர் மேலதிக சிகிச்சைக்காகவே கலுபோவில வைத்தியசாலைக்கு வந்திருந்தார்.

லஸந்த விக்ரமதுங்கவின் கொலை, லங்கா ஈ நியூஸ் இணையத்தள அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டமை போன்ற சம்பவங்களின் பரிசோதனைகளைப் போன்று எங்கேயும் சம்பந்தமே இல்லாத பூதச் சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படலாம். ஆனாலும் ஒருபோதும் எவ்வித பெறுபேறுகளும் கிடைக்கப்போவதும் இல்லை. உதயன் பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதல் மாத்திரமல்லாமல் இலங்கையில் ஊடகங்களுக்கு எதிராக இடம்பெற்ற அனைத்து தாக்குதல்களோடும் தொடர்புள்ள உண்மையான சந்தேக நபர்களைக் கைதுசெய்ய வேண்டியிருப்பதே தற்போதைய உடனடித் தேவையாகும். தவிரவும் கைதுசெய்யப்படுவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் குறித்த தாக்குதல்களுக்காக சந்தேக நபர்களை வழிநடத்தியவர்கள் யார் என்பதனையும் அதற்கான காரணங்கள் என்ன என்பதனையும் வெளிப்படுத்தல் வேண்டும்.

ஆனாலும் இலங்கையின் பொலிஸ் துறை ஊடகங்களுக்கு எதிராக தாக்குதல்களின் போது அப்பாற்பட்ட தூரம் பயணித்துக் கருமமாற்றிய சரித்திரங்கள் எதுவும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை என்றே கூற வேண்டும்.






இதற்கு முன்னரும்கூட உதயன் பத்திரிகைக்கு எதிராக மேற்கொள்ளப்படட ஒரு சில தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலான சந்தேக நபர்கள் பயணித்த வாகனங்கள் பற்றிய எவ்வளவோ தகவல்கள் பொலிஸாருக்கு வழங்கியிருந்தும் அது விடயம் தொடர்பில் எவ்வித பரிசோதனை நடவடிக்கைகளோ கைது செய்யப்படுதல்களோ மேற்கொள்ளப்பட்ட பாடில்லை என்று உதயன் செய்திப் பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.சரவணபவன் தெரிவிக்கின்றார்.

இதுவரை உதயன் பத்திரிகைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல்களுக்கு மேலதிகமாக அப்பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக சேவையாளர்கள் அறுவரின் உயிர் இனம் தெரியாத ஆயுதக் குழுக்களால் காவு கொள்ளப்பட்டுள்ளன.

2001 மே மாதம் 6ஆம் திகதி முதன் முதலாக உயிரைப் பறிகொடுத்திருந்தவர் அப்பத்திரிகையின்




முகாமையாளராக செயற்பட்டு வந்த கே. நந்தகுமாரா வார். 2001 ஜூன் 23ஆம் திகதி உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.ரி.கானமயில்நாதன் பல நாட்களாக சுயநினைவற்ற நிலையில் இருக்குமளவுக்கு மிகவும் குரூரமான முறையில் தாக்கப்பட்டார்.

பின்னால் வந்த வாகனமொன்று அவரை மோதி விட்டுச் சென்றிருந்தது. ஏற்கனவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் பணிபுரிந்த அவரை அறிந்து வைத்திருந்த ஒருவர் வீழ்ந்து கிடப்பவர் கானமயில் நாதன் தான் என்பதனை அறியாமல் இருந்திருந்தால் அவரது வாழ்வும் அச்சம்பவத்துடனேயே முற்றுப் பெற்றிருக்கலாம். வெளிநாடுகளிலும் கூட மருத்துவச் சிகிச்சையைப் பெற்றுவந்ததன் பின்னர் வாழும் அதிஷ்டம் அவருக்குக் கிட்டியிருந்தாலும் அவர் இன்றும் உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் ஒரு சுய கைதியாகவே முடங்கிக்கொண்டு பணி புரிந்து வருகின்றார். அன்றுதொட்டு இன்று வரையிலும் அவரும் அவரது மனைவியும் உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள்ளேயே வாழ்க்கையை ஓட்டிவருகின்றனர். எத்தனையோ மிரட்டல்களுக்கு மத்தியில் பணியாற்றிவரும் அவருக்கு சாதாரணதொரு பொது வாழ்க்கைக்கூட கிடைக்காமலுள்ளது.

2006 ஜனவரி 24ஆம் திகதி உதயன் செய்திப் பத்திரிகையின் திருகோணமலை மாவட்டச் செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இலங்கை அரசாங்கத்தின் கலந்து கொள்ளலோடு உலக ஊடக சுதந்திர தினம் 2006ஆம் ஆண்டு மே 2ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலே ஆயுதமேந்திய காடையர் குழுவொன்று உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்து அங்கிருந்த கணனிகள் மற்றும் சொத்துக்களையெல்லாம் தாக்கிச் சேதப்படுத்தியிருந்தனர்.

பின், துப்பாக்கி வேட்டுக்களை பொழிந்தவண்ணம் இன்று தாக்குதலுக்குள்ளான உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியரான குகநாதனைத் தேடிக்கொண்டிருந்தனர். அன்றைய தினம் குகநாதன் பத்திரிகை நிறுவனத்திற்குள் ஒழிந்து கொண்டு உயிரைப் பாது காத்துக் கொள்ள முடிந்திருந்தாலும் அந்நிறுவனத்தில் பணிபுரிந்த ரஞ்ஜித்குமார் ராஜரத்தினம் மற்றும் பெஸ்டியன் ஜோர்ஜ் ஆகிய இரு ஊடகவியலாளர்களும் தமது உயிரைப் பறிகொடுக்கவேண்டியிருந்தது.

உதயன் பத்திரிகை நிறுவனத்தில் சாரதியாகப் பணிபுரிந்துவந்த எஸ்.பாஸ்கரன் 2006 ஒகஸ்ட் 15ஆம் திகதி ஆயுதக் காடையர் குழுவொன்றினால் கொலைசெய்யப்பட்டார். குறித்த கொலைச்சம்பவம் இடம்பெற்று மூன்று நாட்களின் பின்னர் அதாவது 2006 ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி கோப்பாயில் அமைந்துள்ள உதயன் பத்திரிகையின் அலுவலகமும் தீக்கிரையாக்கப்பட்டது.


அதனைத் தொடர்ந்து 2007 ஏப்ரல் 29ஆம் திகதி உதயன் பத்திரிகையின் மற்றொரு ஊடகவியலாளரான எஸ்.ரஜீவர்மன் ஆயுதக் குழுவொன்றுக்குப் பலிக் கடாவாகினார். இவ்வனைத்து நிகழ்வுகளும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கெதிராகவும் அவர்களது ஊடகப் பயணத்திற்கெதிராகவும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள அடக்குமுறைப் பிரயோகங்களாகும். மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளனைத்தும் அப்பத்திரிகை நிறுவனம் சந்தித்துவந்த பிரச்சினைகளின் சிறு



பட்டியலாகும். இதுபோக இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அப்பத்திரிகைக்கு மிரட்டல்களும், அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டே வந்துள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆயுதக்குழுக்கள் தங்களுடைய அலுவலகத்திற்குள் நுழைந்தும் தொலைபேசியினூடாகவும் விடுத்துவருகின்ற மிரட்டல்களோ அதிகமாகும். ‘எம்மை மிரட்டும் ஆயுதக் குழுக்கள், அவர்களது நல்ல விடயங்களையும், அவர்கள் கூறுகின்ற விடயங்களையும் மாத்திரம் எழுதுமாறு எம்மை வற்புறுத்துகின்றனர்’ என்று உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் குறிப்பிடுகின்றார்.

வடபுலத்து மக்கள் எமது பத்திரிகையை ஏற்றுக் கொண்டுள்ளதால் தடைகளுக்கும் மிரட்டல்களுக்கும் மத்தியில் இவ்வளவுதூரம் பயணித்துவர முடிந்ததாகவும் அவர் பொறுமையோடு ஞாபகப்படுத்துகின்றார். உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரின்



கருத்துப்படி அவர்களது பத்திரிகை, இடம்பெறும் நிகழ்வுகளின் உண்மைத்தன்மையைத் தேடிப்பிரசுரிக்க முயற்சிக்கின்றது.

அதேபோன்று அனைத்துத் தரப்பினர்களினதும் கருத்துக்களைப் பிரசுரிக்கின்றது. அதற்குள் அரசாங்கமும் உள்வாங்கப்படுகிறது. அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளும், அரச விளம்பரங்களும் அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றன. இறுதியில் பத்திரிகையை வாசிக்கும் மக்கள் எல்லாவற்றையும் உய்த்தறிந்து ஒரு முடிவுக்கு வருகின்றார்கள் என்பதே பத்திரிகை ஆசிரியரின் கருத்தாகும்.

வடபுலத்து மக்களை சிந்தித்தறிந்து ஆக்கபூர்வமான முடிவுகளைநோக்கிச் செல்ல வைக்கின்ற உதயன் பத்திரிகையின் மவுசு மக்கள் மத்தியில் வலுத்து வருவதனை விரும்பாத ஜனநாயகவாதிகள் என்று கூறிக்கொள்பவர்களும் ஆயுதமேந்திய குழுக்களுமே அப்பத்திரிகையின் குரல்வளையை நெருக்க முயற்



சித்து பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் குடாநாட்டில் மேற்கொண்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் அப்பத்திரிகை எழுதவேண்டுமென அரசாங்கச் செய்திப் பணிப்பாளர் வசந்தபிரிய ராமநாயக்க கருத்துத் தெரிவித்திருந்ததும் அரசாங்கம் இப்பத்திரிகையின் போக்கை விரும்பாதிருக்கின்றமையையே சுட்டிக்காட்டுகின்றது. அப்படியென்றால் அத்தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் யார் இருந்து வருகின்றார்கள் என்பதனைக் கூறவேண்டிய அவசியமேயில்லை.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி எழுதுவதற்கும் உரத்தகுரலில் நாட்டிற்கும் உலகத்திற்கும் சொல்வதற்கும் காட்சிப்படுத்தி ஒலிபரப்புவதற்கும் ‘லேக் ஹவுஸ்’ ‘இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்’ மற்றும் ஐ.ரி.என். ஊடகநிறுவனங்கள் என்பனவே போதுமானதாகவுள்ளன.

உண்மையில் இவை இருப்பது அரசாங்கத்தின் பொய்களை உரத்துச் சொல்வதற்கு மாத்திரமல்ல மக்கள் அறிந்து கொள்ளவேண்டியுள்ள எத்தனையோ தகவல்களை மூடிமறைப்பதற்கும் அதற்காக இந்த ஊடகநிறுவனங்கள் எத்தனையோ நிகழ்ச்சி நிரல்களை வகுத்து ஒலி-ஒளிபரப்பியும் எழுதியும் வருகின்றன. இவற்றைப் பார்த்தும் கேட்டும் நம்பி ஏமாந்து போன எத்தனையோ பிரகிருதிகளால்தான் நாடு அதலபாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. இவர்களது மண்டையோடுகளில் புகுத்தப்பட்டுள்ள அறியாமை எனும் இருளை நீக்கி ஒளிபாய்ச்சவல்ல துணிச்சல் மிக்க ஊடக நிறுவனங்களின் சேவை தற்போது தேவையாகவுள்ளது.

அதற்காக எத்தனை உயிர்கள் காவு கொள்ளப்பட்டாலும் பரவாயில்லை. உதயன் பத்திரிகை மக்கள் அறிந்துகொள்ளவேண்டிய நல்லபல உண்மையுள்ள செய்திகளை பிரசுரிப்பதில் முனைப்பாயுள்ளது. இதனாலேயே இவர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றார்கள். அச்சுறுத்தப்படுகின்றார்கள். இதனால் உதயன் பத்திரிகையைத் தேடிவரும் ஆயுதக்குழுக்கள் யாரென விளங்கிக் கொள்வது அவ்வளவு கடினமல்ல.

நன்றி: ராவய
தமிழில்: ஹெட்டி ரம்ஸி

# மொபைல் இணையத்தளம்

மொபைல் போன்கள் பெருகிவிட்ட இக் காலகட்டத்தில் எல்லாமே மொபைல் போன் என்றாகிவிட்டது, ஈமெயில் படிப்பதில் தொடங்கி இணையத்தளம் பார்ப்பது வரை அத்தனையும் நாம் மொபைல் மூலமே செய்யலாம். இப்படி இருக்கும்போது நம் இணையத்தளத்தையும் மொபைல் போனில் பார்ப்பதற்கு அழகாகத் தெரியும்படி உருவாக்கினால் எப்படி இருக்கும்? நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது.





இணையத்தள முகவரி : http://mobile.wix.com

இத்தளத்திற்குச் சென்று Go mobile என்ற பொத்தானை சொடுக்கி நாம் புதிதாக ஒரு இலவச கணக்கு உருவாக்கிக் கொண்டு இணையத்தளம் உருவாக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட Template (ஏற்கனவே வடிவமைப்பு செய்யப்பட்டவை) பல இருக்கின்றன.

இதிலிருந்து நமக்கு வேண்டிய டிசைனை தேர்ந்தெடுத்து எளிதாக சில சொடுக்குகளின் மூலம் மாற்ற வேண்டியதை மாற்றி புதிதாக ஒரு மொபைல் இணையத்தளம் உருவாக்கலாம்.

எல்லாம் உருவாக்கியபின், அவர்களே ஒரு இணையத்தள முகவரியும் கொடுக்கின்றனர். நாம் நம் தளத்தில் 'மொபைல் வாசகர்கள் இங்கே சொடுக்குக' என்று ஒரு இணைப்பு வைத்து அந்த முகவரியைக் கொடுக்கலாம். இப்போது மொபைலிலும் நம் தளம் நாம் வடிவமைத்தபடி அழகாகத் தெரியும்.

# கடவுச்சொல்லை மறந்துவிட்டீர்களா?




இணையத்தில் தனித்தனி கோப்புகளாக அனுப்பாமல் பல நேரங்களில் அனைத்து கோப்புகளையும் ஒன்று சேர்த்து Zip கோப்பாக அனுப்புவது வழக்கம். இப்படி அனுப்புவதால் எந்த சிறிய கோப்புகளும் விடுபடாது கூடவே கடவுச்சொல் கொடுத்தும் வைக்கலாம். சில நேரங்களில் நாம் அதற்கு வழங்கிய கடவுச்சொல்லை மறந்துவிடுவோம். அவ்வாறான Zip கோப்புகளைத் திறக்க ஒரு இலவச மென்பொருள் உள்ளது.

தரவிறக்கச் சுட்டி : http://www.appnimi.com/file/zip-password-unlocker

இத்தளத்திற்குச் சென்று Download என்ற பொத்தானை சொடுக்கி இந்த மென்பொருளை இலவசமாகத் தரவிறக்கலாம். இந்த மென்பொருளை நிறுவி இயக்கியதும் வரும் திரையில் Select என்ற பொத்தானை சொடுக்கி எந்த Zip கோப்பின் கடவுச்சொல்லை கண்டுபிடிக்க வேண்டுமோ அதை தேர்ந்தெடுக்கவும்.

அடுத்து Destination என்று இருக்கும் கட்டத்திற்குள் எந்த இடத்தில் சேமிக்க வேண்டுமோ அதையும் கொடுத்து Start என்ற பொத்தானை சொடுக்க வேண்டியதுதான். ஒவ்வொரு கடவுச் சொல்லை பொருத்தும் நேரம் மாறுபடும். கடவுச்சொல் லைக் கண்டுபிடித்த பின் Message என்று சிறிய விண்டோவில் கடவுச் சொல்லைக் காட்டும்.





# Google™ LABS

கூகிள் கொடுக்கும் சேவைகளை ஒரு முறை பயன்படுத்தியவர்கள் அதனால் கட்டுண்டு கிடப்பதற்கு காரணம் அதன் சேவைகள்தான். இலவசம் என்று கொடுக்கும் எந்த நிறுவனமும் சேவைகளில் முன்னுரிமை கொடுக்காத நேரத்தில் சொல்லப்போனால் நாளும் ஒரு சேவை அதுவும் மிகவும் சிறப்பான சேவை என்று நம் மனதில் இடம் பிடிக்கின்றனர். ஜீமெயில் பயனாளர்கள் கூகிள் labs ஐ எப்படி பயன்படுத்துவது என்று பார்ப்போம்.




ஜீமெயில் தளத்தில் பயனாளர் கணக்கு இல்லாதவர்கள் தங்களுக்கென்று ஒரு ஜீமெயில் கணக்கை இலவசமாக உருவாக்கிக் கொள்ளவும். ஏற்கனவே ஜீமெயில் கணக்கு உள்ளவர்கள் தங்கள் கணக்கை பயன்படுத்தி ஜீமெயிலில் தங்கள் கணக்கை திறந்து கொள்ளவும்.




அடுத்து படம் 1இல் காட்டியபடி Settings ஐகனை சொடுக்கி Mail Settings என்பதை தேர்ந்தெடுத்து சொடுக்கவும். அடுத்துவரும் திரையில் Labs என்ற மெனுவை தேர்ந்தெடுக்கவும். இதில் பலவகையான Labs சேவைகள் கிடைக்கின்றன.

இதில் நமக்கு வேண்டிய எந்த சேவை பிடித்திருக்கிறதோ அதன் பக்கத்தில் இருக்கும் Enable என்ற ஒப்சனை தேர்ந்தெடுத்துவிட்டு Save Changes என்ற பொத்தானை அழுத்தவும். இனி நாம் தெரிவுசெய்த கூகிள் labs நம் ஜீமெயிலில் பயன்படுத்தலாம்.

உதாரணமாக Search for a lab என்ற கட்டத்திற்குள் undo என்று தட்டச்சு செய்யவும். இப்போது Undo Send என்ற labs ஒன்று காட்டப்படும். இதனருகில் இருக்கும் Enable என்பதை சொடுக்கி பின், Save changes என்ற பொத்தானையும் அழுத்தவும். இப்போது நாம் தேர்ந்தெடுத்த கூகிள் labs இன் பயன் யாதெனில் ஒருவருக்கு நாம் மெயில் அனுப்பிய ஒரு சில நொடிகளுக்குள் Undo அதாவது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

இதே போல் கூகிள் labs இன் ஒவ்வொன்றையும் எளிதாகப் பயன்படுத்தலாம்.

CRIME REPORT

# முன்னாள் இராணுவ வீரரைக் கொன்றவர்கள் யார்?

இன்றைய காலத்தில் மரணம் என்பது அதிக பட்ச தண்டனையல்ல. அது மலிந்துவிட்டது. காரணமே இல்லாத சிற்சிறு பிரச்சினைகள்கூட இன்று கொலைகளில் போய் முடிகின்றன. அண்மையில் ருவன்வெல்ல பிரதேசத்தில் நடந்த ஒரு கொலைச் சம்பவம் இதற்கு நல்ல உதாரணம்.

கடந்த மாதம் பன்னிரண்டாம் திகதி இரவு 11.55 மணியளவில் ருவன்வெல்லை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த ஒரு தொலைபேசி அழைப்பில், கத்திக்குத்தொன்று இடம்பெற்றிருப்பதாகவும் குத்துக்கு இலக்கானவர் கரவனல்ல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வழியிலேயே இறந்து விட்டதாகவும் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கொலைசெய்யப்பட்டவர் 40 வயதுடைய விதான ஆராச்சிலாகே இந்திரபியசிறி ஜயம்பதி என்பதை அறிந்தனர். ஆனால் கொலையைக் கண்ணால் கண்ட சாட்சி யாரும் இருக்கவில்லை.

ஐந்து பெண் பிள்ளைகளையும் ஐந்து ஆண் பிள்ளைகளையும் கொண்ட குடும்பத்தில் ஜயம்பதி எட்டாவது பிள்ளையாவார். ஆரம்பக்கல்வியை கலபிடமட மகாவித்தியாலயத்தில் கற்ற இவர் பொலன்னறுவை பகமுன மகாவித்தியாலயத்தில் உயர்கல்வியை முடித்தார். பின் 'கெமுனு ஹேவா' படையணியின் உளவுப்பிரிவில் இணைந்து கொண்டார். அங்கு 17 வருடங்கள் சேவைசெய்த ஜயம்பதி வியாபாரத்தில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் மரத்தளபாட ஏற்றுமதியில் ஈடுபட்ட ஜயம்பதி அத்தொழிலை விட்டுவிட்டு கலபிடமடவில் ஒரு ஹோட்டலைத் திறந்தார். வியாபார வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்துசென்ற ஜயம்பதி ஒரு சில்லறைக் கடையையும் ஆரம்பித்தார்.

தொழில் ரீதியில் எவ்வளவோ சமூக ரீதியான அந்தஸ்துக்களைப் படிப்படியாக அடைந்து கொண்டாலும் அவரது திருமண வாழ்க்கை நினைத்தபடி அமையவில்லை. ஹோராகமவைச் சேர்ந்த ஒரு பெண்ணை காதலித்தே திருமணம் செய்துகொண்டார். ஆறு வயது நிரம்பிய மகளும் மூன்று வயது நிரம்பிய மகனும் இருந்தனர். சிறிது காலமே இவர்கள் சந்தோசமாக வாழ்ந்தனர். காலப்போக்கில் இருவருக்குமிடையில் மூண்ட சண்டை இறுதியில் பிரிவை ஏற்படுத்தியது. விவாகரத்து வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் தொடரும் நிலையில் நட்டஈட்டுத் தொகையாக ஜயம்பதி மாதமொன்றுக்கு ஏழாயிரம் ரூபாவைச் செலுத்தி வந்தார்.

குடும்பவாழ்க்கையைப் போன்று அவருக்கு எல்லா வழிகளிலும் பிரச்சினைகள் வர ஆரம்பித்தன. அமைதியான சுபாவம் கொண்ட அவர் ஒருபோதும் தன் பிரச்சினைகளை வெளியில் சொல்வதில்லை. இந்நிலையில் கடந்த மாதம் பன்னிரண்டாம் திகதி கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமானார்.

◄ ரம்ஸி ►

இரவு 10.15 மணியளவு இருக்கும். நான் ஹோட்டல் சமையலறையிலுள்ள 'சின்க்' இனைக் கழுவிக் கொண்டிருந்தேன். எனது மனைவி ரோல்ஸ் பொரித்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் திடீரென்று பாரியதொரு சத்தம் கேட்டது. நானும் எனது மனைவியும் வெளியே ஓடி வந்தோம். நாம் வெளியே வர முன் ஜயம்பதியும் இன்னுமொரு வரும் கடைக்குள் இருந்து வெளியே சென்றிருந்தார்கள். காயமடைந்த நிலையில் ஜயம்பதி வீழ்ந்து கிடந்தார். உடனே நாம் ஆட்டோவில் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றோம். இடை வழியிலேயே அவர் இறந்துவிட்டதாக வைத்தியர் கூறியிருந்தார். ஆனாலும் துரதிஷ்டவசமாக யாரும் இந்தச் சம்பவத்தைக் காணவில்லை' என ஹோட்டலில் பணிபுரியும் ஜகத் என்பவர் கூறினார்.

'அண்ணாவும் நானும் வீட்டில் தனியாகத்தான் சமைத்துச் சாப்பிடுவோம். எனக்கு ஒரு முச்சக்கரவண்டியை வாங்கித்தந்திருந்தார். சம்பவம் இடம்பெற்ற தினத்தில் நான் ஒரு ஹயர் சென்று விட்டு 10.30 மணியளவில் முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்கு வந்தேன். அவ்வேளையில் கூக்குரலிடும் சத்தமொன்று கேட்கவே ஓடிச்சென்று பார்த்தேன். யாரோ ஒருவர் இரத்தம் தோய்ந்த நிலையில் தள்ளாடித் தள்ளாடி நடந்து வருவதைக் கண்டேன். கிட்ட நெருங்கிச் சென்று பார்த்த போதுதான் விளங்கியது அவர் எனது அண்ணா என்பது. என்னைக் கூவி அழைத்து தம்பி நீ தப்பித்துச் செல் என்று கூறுவதாக எனக்கு விளங்கியது. உடனே இருவர் கத்திகளைத் தூக்கிக்கொண்டு பின்னால் ஓடிவர அண்ணனை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு ஓடினேன். அவர்கள் என்னைத் துரத்தினார்கள் என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பக்கத்திலிருந்த பன்றி இறைச்சிக் கடைக்குள் ஓடித் தப்பினேன். அவர்களது அரவம் அடங்கியபோது அண்ணனைப் போட்டுவிட்டு வந்த இடத்துக்கு மீண்டும் ஓடினேன். அவ்வேளையில் எனது அண்ணன் தண்ணீர் கேட்டு கதறியுள்ளார். யாரும் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கொடுக்கவில்லை' என்று ஜயம்பதியின் தம்பி கூறினார்.



இது இவ்வாறிருக்க ஜயம்பதியின் அண்ணன் ஒருவர் 'சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று எனது தம்பி ஒரு செத்த வீட்டுக்குச் செல்லத் தயாராகியிருந்தார். வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு கடைக்கு முன்னால் உள்ள ஒரு மேசையில் இருந்து யாருடனோ போனில் கதைத்துக் கொண்டிருந்தார். அச்சந்தர்ப்பத்தில்தான் யாரோ பின்னால் வந்து தம்பியை கத்தியால் குத்தியிருக்கின்றனர். தன்னை கரவனல்ல வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறும் இல்லையேல் தான் இறந்துவிடுவேன் என்றும் கூறினார். ஆனாலும் ஒரு ஐந்து கிலோமீற்றர் தூரம்கூட செல்லவில்லை. அவர் இறந்துவிட்டார்' என்று கூறினார்.

ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலம் தொட்டு ஜயம்பதிக்கும் மற்றுமொருவருக்கும் இடையில் ஏதோவொரு பிரச்சினை இடம்பெற்று வந்திருப்பதாகவும் இடைக்கிடை ஜயம்பதிக்கும் மற்றையவருக்கு மிடையில் தகராறு இடம்பெற்று வந்திருப்பதாகவும் ஜயம்பதியைக் கொல்வதாக மற்றைய நபர் மிரட்டல் விடுத்திருப்பதாகவுமே பொலிஸார் கூறுகின்றனர். எனினும் ஒவ்வொருவரது சாட்சியங்களும் வேறுபட்ட விதத்தில் காணப்படுவதால் இதற்குப் பின் ஏதோவொரு சதித்திட்டம் இருப்பதாக சந்தேகிக்கின்றனர். இவ்வனைத்து நிகழ்வுகளுக்குப் பின்னாலும் ஒருங்கமைக்கப்பட்ட ஒரு குழுவினது சதித்திட்டம் இருந்து வந்துள்ளதென மர்மச்செய்திகள் புலனாகிக் கொண்டிருக்கின்றன. குறித்த கொலையின் சந்தேக நபர் இதற்கு முன்னரும் எத்தனையோ கொலைச்சம்பவங்களோடு தொடர்புற்றிருந்தும் ஆதாரங்களின்மையால் விடுதலைபெற்றுள்ளார் என்று கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர். எனினும் சரியான சாட்சிகள் இன்மையால் இன்னும் குற்றவாளி சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

அண்மைய காலங்களில் நடைபெறும் கொலைகளில் அதிகமாக காணும் ஒரு விடயம்தான் குடும்பத் தகராறு. திருமணம் என்பது ஆயிரம் காலத்து பயிர் என்று சொல்லி வைத்திருக்கின்றார்கள். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் அதனை கடைப்பிடிப்பது ஒரு சிலரே. தமக்குள் என்னதான் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவற்றை பிரியும் அளவுக்குக் கொண்டுசெல்வது முறையன்று. தன் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினையாலேயே ஜயம்பதி தனித்து வாழ்ந்து வந்திருக்கின்றார். அதனால் அவருக்கு என்ன நேர்ந்தது என்பதுகூட தெரியாமல் வீதியில் இறக்க நேரிட்டுள்ளது. குற்றவாளி சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, திருமணமான தம்பதிகள் தங்களுக்குள் பிரிவை ஏற்படுத்திக் கொள்ளாது வாழவேண்டியதும் இங்கு முக்கியம்.

## ◄ சிலோன் சின்னத்தம்பி ►

*வணக்கம் பாருங்கோ!!! எப்பிடிச் சுகமா இருக்கிறியளே...?*

*போன கிழமை நாளொருக்கா கிளிநொச்சிப் பக்கம் போட்டு வந்தனான் பாருங்கோ. ஏன் அங்க போனன் எண்டு கிடக்குதடா மோன. எங்கட சனம் படுற பாட்டைப் பாக்க வயிறு பத்தி எரியுதடாப்பா. ஒரு நேரச்சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கிடக்குதுகள். நான் அங்க நிக்கேக்க மருத்துவ முகாமொண்டு நடந்தது பாருங்கோ. நல்ல விசயமடாப்பா. இந்தியாவிலிருந்து வந்த பெரிய டொக்டர்மாரெல்லோ சனத்துக்கு வைத்தியம் பார்த்தவை. அதோட கை கால் இல்லாதவைக்கு செயற்கை உறுப்புக்களையும் கொண்டு வந்து பொருத்திச்சினம் பாருங்கோ. அவைக்குப் புண்ணியமாப் போகட்டுமடா மோன. எங்கட சனம் கொஞ்சமெண்டாலும் ஆறுதலா இருக்கட்டும். அதில்லை மோன அங்க மருந்தெடுக்க வந்த ஒருத்தர் தன்னை வடிவாப் பாக்க இல்லையாம். தூரத்தில வச்சு தன்ர கண்ணைச் செக்பண்ணிட்டார் எண்டு மனுசன் சத்தம் போட்டுக்கொண்டு திரிஞ்சுதடாப்பா.*

*ஒண்டு சொல்லட்டே மோன வந்த டொக்டர்மாரெல்லாம் கனக்கப் படிச்ச ஆக்கள் பாருங்கோ. அதுவும் எங்களுக்கு இலவசமா சேவை செய்ய வந்தவங்களை இப்படிக் குறைசொல்லக் கூடாது மோன. பாருங்கோ மோன நாங்கள் இப்ப இருக்குற நிலமையில இது கிடைக்கிறதே பெரிய விசயமடாப்பா. யார் குத்தியெண்டாலும் எங்களுக்கு இப்ப நெல்லுக் கிடைச்சா சரியடா மோன. சும்மா எதுக்கெடுத்தாலும் குறைசொல்லக்கூடாது பாருங்கோ*

*அப்ப நான் போட்டு வரட்டே!!!!*



# தத்துவ விசாரம்



**‘அரசாங்கங்கள் அதன் மக்களது மனச்சாட்சி யாகும்...’**

நாம் பெறும் கல்வியின் பயனாக, என்ன மாதிரியான மனிதர்களாக உருவாகின்றோம் என்பதைப் பார்ப்பதற்கு எமது அரசாங்கங்களைப் பார்த்தாலே போதும். ஏனெனில் நாங்களல்லவா அவற்றை அமைக்கின்றோம், அவற்றுக்குரிய சட்டங்களை உருவாக்குகின்றோம்? அரசாங்கங்கள் எங்கள் முழுவாழ்க்கையையும் கட்டுப்படுத்தும் அளவுக்கு அதற்கு அதியுச்ச அதிகாரங்களை வழங்கிவிட்டு, அரசியல் ஒரு சாக்கடை என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றோம். ஏன் அரசியல் ஒரு சாக்கடையாக வந்தது தெரியுமா? மக்கள் எல்லோருமே பொதுவாக தங்கள் சுயநலங்களின் அடிப்படையில்தான் இயங்குகிறார்கள் என்பதைக் கண்ட அரசியல்வாதிகள், தங்களுடைய சொந்த நலன்களை எப்படி மக்களின் நலன்களாகக் காட்டுவது என்கின்ற கலையைக் கற்றுக் கொண்டார்கள். அப்படிச் செய்பவர்கள்தான் மக்களின் ஆதரவைப் பெறலாம் என்பது கண்கூடு. இதனால்தான் உண்மையைச் சொல்லிக் கொண்டு அரசியலில் இருக்க முடியாத நிலைமை ஏற்படுகின்றது. உண்மையைக் கூறுகின்ற எந்த நேர்மையான அரசியல்வாதிக்கு மக்கள் வாக்களித்திருக்கின் றார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். உண்மைக்கும் அரசியலுக்கும் பொருத்தமேயில்லை.


அரசியல்வாதிகளை விடுங்கள். இந்த நிலைமை எங்கள் மக்களைப் பற்றி என்ன கூறுகிறது? தேர்தலில் நிற்கும் அரசியல்வாதிகளிடம் மக்கள் கேட்கும் ஒரே கேள்வி, ‘நீங்கள் அதிகாரத்திற்கு வந்தால் எனக்கு என்ன செய்வீர்கள்? வேலை எடுத்துத் தருவீர்களா? ரோட்டுப் போட்டுக் கொடுப்பீர்களா...?’ என்று இப்படியே. அவர் ஆமாம் என்றுவிட்டாரென்றால் நெஞ்சம் பூரிக்கிறது. அது மட்டுமல்ல, உடனேயே எங்களுடைய கோயிலுக்கு இதைத்தா எங்கள் கழகத்துக்கு அதைத்தா அப்படியென்றால்தான் நீ உண்மையாகச் செய்வாய் என்று நம்புவோம்..’ என்று சொல்ல உடனேயே அவர் அதையும் செய்து கொடுத்து விட்டாரென்றால் போச்சு. அவருக்கே வாக்கைக் கொடுத்து விடுகிறார்கள். என்ன முட்டாள்தனமான செய்கை இது என்பது ஆற அமர யோசித்துப் பார்த்தால் விளங்கும். இப்படி எங்களுக்கு மட்டுமல்ல, அவர் வாக்குக் கேட்டுப் போகும் ஆயிரக்கணக்கான மக்களுக்கும் இப்படிச் செய்து கொடுப்பதற்கு அவரிடம் பணம் எப்படி வந்தது? அந்தப் பணம் அவர் உண்மையாக உழைத்துச் சம்பாதித்த பணமாக இருக்க முடியுமா? ஒவ்வொரு அரசியல்வாதியும் தான் கொடுக்கும் வேலை வாய்ப்புக்கு இலஞ்சம் வாங்கும் பொழுது இந்தப் பணம்தான் அடுத்த தேர்தலில் எல்லோருக்கும் சாராயப் போத்தலாக வருகிறது என்பதை யோசிக்கிறார்களா?

ஏன் அரசாங்கங்கள் எங்களுக்கு எல்லாமே செய்து கொடுக்கவேண்டும்? மக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றலைக் கொடுக்கும் சட்டங்களுடனும் அரசியல் கட்டமைப்புக்களுடனும் திட்டங்களுடனும் வரும் அரசாங்கமும் அரசியல் தலைவர்களும்தான் தேவை என்று எங்களுக்கு சொல்லத் தெரியாதா? சுருங்கச் சொன்னால், மக்களே தங்களுக்குத் தேவையான விடயங்களைச் செய்து கொள்ளக்கூடிய அதிகாரங்களை மக்கள் கைகளில் கொடுக்கும் அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைப்பினைக் கொண்டு வா என்று கேட்க மாட்டார்களா? இதன் மூலம் நாம் ஒவ்வொருவருமே புத்தாக்கமாகச் சிந்திக்க, செயற்பட, எங்கள் பிரச்சினைகளுக்கு பல்வகையான தீர்வுகளைக் கொண்டுவர, ஏதுவாகுமே? அடேயப்பா எங்களுக்குள் எவ்வளவு சக்தி பிறக்கும்!

ஆனால், அப்படிச் செய்வதற்கு மக்களுக்கு விருப்பமில்லை என்பதனால்தான் அதிகாரங்கள் அளவுக்கதிகமாகக் குவிக்கப்பட்ட, மக்களுக்கு ஏதாகினும் ‘கொடுக்கக்கூடிய திட்டங்களைச் செயற்படுத்தும் அரசாங்கங்களைநாம்இன்றுவைத்திருக்கின்றோம்.எமது சட்டங்கள் எங்களை அமுக்கித் திக்குமுக்காட வைக்கும் சட்டங்களாகத்தான் இருக்கின்றன. அதிகாரத்திலிருக்கும் ஒவ்வொருவரும் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் வழிகளைத்தான் அனேகமான சட்டங்கள் தமது நோக்காகக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ இடங்களில் மக்களும் பொய் சொல்லி ஏமாற்றித்தான் இச்சட்டங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். இதற்கு உதாரணமாக எமது போக்குவரத்து விதிகளை எடுத்துக் கொள்ளலாம். தூரப்பயணங்கள் போகும்போது வழியில் முன்னால் வருகின்ற வாகனசாரதியானவர் தனது ஹெட்லைட்டுக்களை போட்டு அணைத்து இங்கிருந்து போகும் சாரதிகளுக்கு சமிக்ஞை கொடுப்பார். அந்த சமிக்ஞையானது முன்னால் போக்குவரத்துப் பொலிஸ் இருக்கின்றது என்பதைக் காட்டுவதாகும். உடனேயே இங்கிருந்து போகும் சாரதிகளும் அப்பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாண்டும் வரையில் தமது வேகத்தைக் குறைத்து செல்வார்கள். அதற்கப்புறம் வழமைபோலத்தான். இப்படி முன்பின் தெரியாத நபர்களெல்லாம் ஒற்றுமையுடன் கூட்டுறவாகச் செயற்படுவதற்கு அவர்களைத் தூண்டிய விசயம் என்ன? அநாவசியமான போக்குவரத்துச் சட்டங்கள்தாம். வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்தான். ஆனால் சன நடமாட்டமில்லாத காட்டுப்பகுதிகளுக்குள்ளும் குறைந்த வேகத்தில் செல்ல வேண்டும் என்று யதார்த்தமில்லாத சட்டங்களை விதிப்பது வெறுமனே பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலஞ்சப்பணம் பெற்றுக் கொள்வதற்கு ஒரு முறையாகும்.

இப்படி அரசாங்கங்கள் எமக்குப் பொய் சொல்ல வைக்கவும், நாங்கள் அரசாங்கத்துக்குப் பொய் சொல்லிக் கொண்டு திரியவுமான உலகத்தை உருவாக்கி விட்டிருக்கின்றோம். இதுதானா கல்வி கற்ற எங்களது நாகரிகம்?

◄ ரிஷி பத்தினி ►




**நூல் : மீண்டு வந்த நாட்கள்**
**ஆசிரியர் : வதிரி. சி.ரவீந்திரன்**
**வெளியீடு : எஸ்.கொடகே சகோதரர்கள்**
**விலை : 250 ரூபா**

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் வதிரி.சி. ரவீந்திரன் பாடசாலை பருவத்திலிருந்தே கவிதைமீது ஆர்வம் கொண்டிருந்தார். அதன் விளைவாக 1971ஆம் ஆண்டு ‘ஈழநாடு’ பத்திரிகையிலும் அதேயாண்டில் ‘புலம்பொழில்’ இலக்கிய சஞ்சிகையில் பிரசுரமான ‘எங்கள் எதிர்காலம்’ என்ற கவிதையூடாக இலக்கிய உலகிற்குள் பிரவேசித்தார்.

நாற்பது வருடங்களுக்கும் மேலாக இலக்கிய உலகில் இவரது பங்களிப்பு இருந்தாலும் இந்த ‘மீண்டு வந்த நாட்கள்’ தொகுப்பே முதற் தொகுதியாக வெளிவந்துள்ளது. ‘மீண்டு வந்த நாட்கள்’ கவிதைத் தொகுப்பானது, புதுக்கவிதைகள், கவிதைத் துளிகள், மெல்லிசைப் பாடல்கள் என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தினை அப்படியே பதியம் போட்ட கருக்களை தாங்கிவந்துள்ள கவிதைகள் மிக எளிய நடையோட்டத்தில் வாசகனை மகிழ்வித்துள்ளது. சிரமமின்றி வாசிக்கக்கூடிய இக்கவிதைகள் சமூகத்தின் எல்லா தளங்களையும் எல்லா தரப்பினரையும் தொட்டுக்காட்டியுள்ளது.

அன்றாட வாழ்வில் அவதியுறும் நிலமைகளை வெளிப்படுத்தியிருக்கும் கவிஞர், தனது ‘புதிய கதை பிறக்கிறது’ என்ற கவிதையில்,

*‘அடிமை குடிமைகள் என்ற*
*நினைப்போ?*
*நாமும் மனிதர்கள் தாம்*
*பழைய நயினார் காலம்*
*பாறி விழுந்திட்டுது*
*எங்கள் உழைப்பை இன்னும் உறிஞ்சவா*
*எண்ணுகிறீர் வையும் பணத்தை*
*விரும்பினால்*
*தூக்கும் முட்டியை கையில்*
*நயினார் பார்க்கிறார்*
*புதுமையாக அவனை*

என்று ஒரு அடிமைத்தன எதிர்ப்பு பற்றியும் விடுதலை பற்றியும் ஆவேசமாகப் பேசியிருக்கிறார்.



அதுமட்டுமன்றி நமது சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் மூட நம்பிக்கைகள், சாதிப்பிரச்சினை, சுரண்டும் வர்க்கத்தின் இயல்புகள், போலி கௌரவம் போன்ற குறைபாடுகளை ‘பாதை’, ‘உள்ளக் குமுறல்’ ‘எழுத்து’, ‘அடிமைக் கரங்கள்’ ‘நினைவை மீட்டிப்பார்’, ‘பாம்பு சாகவில்லை’ போன்ற கவிதைகளில் திரைவிலக்கி காண்பித்துள்ளார் கவிஞர்.

நமது சமூகத்தில் தொடர்ந்து வந்த பிரச்சினைகளையும் தொடர்ந்து கொண்டிருக்கும் அவலங்களையும் வெளிப்படுத்தியுள்ள இத்தொகுப்பானது எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. தனது மன ஆதங்கத்தை வரிகளாக்கியிருக்கும் கவிஞரின் சமூகத்தின் மீதான பார்வையை மிக இலகுவாக்கி இலக்கிய உலகிற்கு தந்துள்ளார்.

உண்மையில் இவரது கவிதைகள் மீளவந்த நாட்களாகவும் வாசகர்களுக்கு உற்சாகத்தை தரக்கூடிய மீட்சியாகவும் அமைந்துள்ளன. நல்ல கவிதைகளை வாசித்த திருப்தியையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆரோக்கியமான கவிதைகளை படைத்த கவிஞருக்கு மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இலக்கிய உலகு வளர்த்த இவரது கவிதைகள் உங்கள் கருத்துக்களையும் கவரும் என்பது திண்ணம்.


**- த.எலிசபெத்**

## தற்கொலை



*வீட்டில் யாருமில்லா*
*நேரம் பார்த்து*
*குடிவெறி தலைக்கேற*
*நிதானமின்றி*
*தூக்கில் தொங்கினான்*
*குடும்பஸ்தன்*
*நடுத்தெருவுக்கு*
*வந்தது குடும்பம்*
*‘‘குடிகாரக் குடும்பம்’’*
*என்ற ‘‘முத்திரை பதித்து’’*
*‘‘அநாதையாய்’’*

**- மாஹிறா முஜீப், மருதானை.**




## காடு

புதை குழிகள்
வாழும்
மனித வீடு

வதை மொழிகள்
ஆளும்
மிருக நாடு

புத்தகம் வாங்கி
மானம்
விற்ற கூடு

**- பூஜா**





## கந்தையா சிவக்கொழுந்து

# 'சிறுவர் உரிமைகள் பற்றி அறிகின்ற பெற்றோர் இந்த சமூகத்தில் இல்லை'






சமாதான நீதவான் பணி என்பது ஒரு கௌரவமான பதவி. அதனை வைத்து பணம் சம்பாதிப்பது என்பது கீழ்த்தரமானது என்றே கூறவேண்டும். அதுமட்டுமல்ல சமாதான நீதவானாக இருப்பவர் குறைந்த பட்சம் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதே நியதி.

ஆனால், பெரும்பாலான சமாதான நீதவான்கள் தரம்6தொடக்கம்8வரைமட்டுமேபடித்திருக்கின்றனர். இவர்கள் அரசியல் பலம், பண பலம் போன்றவற்றை துணையாகக் கொண்டு சமாதான நீதவான்களாக நியமனம் பெற்றிருக்கின்றனர். இன்று நாடளாவிய ரீதியில் 90 ஆயிரம் சமாதான நீதவான்கள் செயற்பட்டு வருகின்றனர். அவர்களில் 30 ஆயிரம் பேர் போலியான சமாதான நீதவான்களாக காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆங்காங்கே சமூக சேவையை தார்மீகப் பொறுப்பாக கொண்டியங்கும் சமாதான நீதவான்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களுள் எம் கண்ணுக்குசிக்கியவர்தான்சத்துருக்கொண்டானைச் சேர்ந்த கந்தையா சிவக்கொழுந்து. எமக்கு இருக்கும் ஆயிரம் வேலைகளில் எங்கே சமூக சேவை செய்வது என்று நினைக்கும் பலருள் இவர் சற்று வித்தியாசமானவர். அவரைப் பற்றி கேள்விப்பட்டு



அவரது இல்லம் நாடிச் சென்றோம். அவரது உதவியை நாடி வந்த மக்கள் தொகையையும் அவர்களுக்காக அவர் பரபரப்புடன் இயங்கிய விதத்தைப் பார்த்தும் பிரமித்துப் போனோம். நானும் ஏதும் உதவிகள் கேட்கத்தான் வந்திருக்கின்றேன் என்று நினைத்தவர் 'என்னம்மா பிரச்சினை' என்றார். நான் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு அவரைப் பற்றியும் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

இவர் மட்டக்களப்பு கொக்குவில் மகாவித்தியாலயத்தில் அதிபராகவும் மட்டக்களப்பு மீடியா வோட்டில் உறுப்பினராகவும் பணியாற்றி பல வழிகளில் மக்களுக்கு தொண்டாற்றிய பெருமையைப் பெற்றிருக்கின்றார். தற்போது அகில இலங்கை சமாதான நீதவானாக இருந்து சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றார்.

**'சமாதான நீதவான்' பணி தொடர்பான உங்கள் கருத்து என்ன?**

'இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சமூக சேவையில் இருப்பவர்களைவிட அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் சமாதான நீதவான் நியமனம் கிடைக்கிறது. அரசியல்வாதிகள் தங்களுடைய எதிர்கால வாழ்வைத் தக்கவைப்பதற்கான வேலையாகவும் தென்படுகிறது. சமாதான நீதவான் சங்கங்கள் அகில இலங்கை ரீதியாக நிறைய இருக்கு. அவை தங்களுடைய உழைப்புக்கும் பெயருக்கும் புகழுக்கும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆனால், நீதிவான் சங்கங்கள் அவ்வாறு அமையக்கூடாது. காரணம் அது ஒரு சட்ட நீதி மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டது. கடந்த பல தசாப்தங்களாக சமாதான நீதவானுடைய செயற்பாடு ஒரு தனி மனிதனை உறுதிப்படுத்தும் வேலையிலேயே தங்கியிருக்கின்றது. ஆனால், நீதித்துறை அதிகாரிகள் அவர்களுக்கான சட்ட யாப்பு ஒழுங்கு விதிகள் இவ்வாறு அமைய வேண்டும் என இருப்பதனால் பல சீர்கேடுகள் இடம்பெற வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. சட்டநீதி மறுசீரமைப்பு அமைச்சு இது தொடர்பாக சட்ட நகல்புகளில் மாற்றம் செய்யப்பட்டு செயற்றிட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்' என்றார்.

**சமூக சேவையில் எவ்வாறு நாட்டம் ஏற்பட்டது?**

'மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்காகவேதான் இத்தொழிலுக்கு வந்தேன். எமது மக்கள் மத்தியில் குறிப்பாக பெற்றோரிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்' என்றவர் சமூக சேவையில் நீங்காத இடத்தைப் பிடித்தமைக்காக தேசகீர்த்தி மற்றும் கீர்த்திஸ்ரீ விருதுகளைப் பெற்றுள்ளார்.

**நீங்கள் செயற்படுத்தும் திட்டங்கள் பற்றிக் கூறுங்களேன்.**

'யுத்தம் மற்றும் மாறுபட்ட சூழல் காரணமாக பாடசாலை இடைவிலகல் அதிகரித்துள்ளது. அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர் தொகையை அதிகரிக்க வேண்டும். இதற்கான விழிப்புணர்வுத் திட்டங்களை நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றோம். தற்போது மகிந்த சிந்தனையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய செயற்றிட்டமான சிவில் பாதுகாப்புக்குழு அமைக்கும் திட்டத்தில், கிராம ரீதியாக குழுக்கள் அமைக்கப்பட்டு பிரதேச மட்டத்தில் அதாவது மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் ஏரியாவுக்கு அக்குழுவின் தலைவராக இருக்கின்றேன். இதன் மூலம் பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையே ஒரு நல்லிணக்கத்தையும் கிராம ரீதியாக ஏற்படும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கக்கூடியவாறும் இருக்கின்றது' என்று விபரித்தார்.

'கிழக்கு மக்களின் ஜீவனோபாயத்தை வளர்க்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கம். மட்டக்களப்பு மண்முனை மேற்கில் மற்றும் கரித்தாஸ் நிறுவனங்களின் உதவியுடன் 10 கிராமங்களில் சமூக சேவைகள் நடைபெற்று வருகின்றன. அதில் நாங்கள் சத்துருக்கொண்டான் கிராமத்தை அடிப்படையாக வைத்தே சமூக சேவைகளைச் செய்யிறம்' என்றவர் தாம் எதிர்நோக்கும் தடைகள் பற்றியும் கூற மறுக்கவில்லை.

'முதலாவது பாடசாலை மாணவர் மத்தியில் சிறுவர் உரிமைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், அந்த உரிமைகளை அறிகின்ற பெற்றோர்கள் இந்த சமூகத்தில் அதிகம் இல்லை. அதாவது அதை அறிவதற்கு தயார் இல்லை. இதன் காரணமாக சமூக ரீதியான செயற்பாடுகளைச் செய்வதற்கு சிரமமாக இருக்கிறது. இது வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்குப் பொருத்தமில்லை' என்று கூறினார்.

**நேர்காணல் : க. மாலா**

யுத்த சூழலில் குறிப்பாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பல தொண்டு நிறுவனங்களும் பல சமூக சேவை அமைப்புக்களும் மக்களுக்கு சேவையாற்றி வந்தன. இன்று யுத்தம் நிறைவடைந்து பல நிறுவனங்கள் தம் சேவையை நிறுத்திக்கொண்டு சென்றுவிட்டன. ஆனால், இன்னும் தங்கள் அடிப்படைத் தேவைகளையேனும் பூர்த்திசெய்துகொள்ள முடியாத மக்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இவரிடம்கூட நாம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சேவைகள் தொடர்பில் கேட்டபோது தம்மிடம் அதற்கான நிதி இல்லை என்றுதான் குறிப்பிட்டார். அம்மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் வாழ்வதற்கான ஒரு நிலைப்பாட்டை உருவாக்கித் தருவதில் சமூக ஆர்வலர்களும் சமூக சேவை நிறுவனங்களும் ஆர்வம் காட்டவேண்டும். இவரைப் போன்று சமாதான நீதவான் தொழிலை மக்களுக்கு சேவை செய்வதற்காக அர்ப்பணிக்க அனைத்து சமாதான நீதவான்களும் முன்வரவேண்டும். வருவார்களா?

# 500 முன்னாள் போராளிகள் தென்னிலங்கைக்கு சுற்றுலா

வவுனியாவில் அமைந்துள்ள புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் 500 பேர்வரை கடந்த வாரம் தென்னிலங்கைக்கு சுற்றுலாவுக்கு அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா, ஓமந்தையில் இருந்து புகையிரதம்மூலம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு அழைத்து வரப்பட்ட அவர்கள் பின்னர் அங்கிருந்து களுத்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ள இச்சுற்றுலாவின் போது அவர்களுக்கு அம்பாந்தோட்டை, காலி, கதிர்காமம் மற்றும் தென்னிலங்கையின் சுற்றுலாத் தளங்கள் காண்பிக்கப்படவுள்ளன. இந்த சுற்றுலாவை சிறைச்சாலைகள்துறை அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த சுற்றுலாவை ஒழுங்குசெய்த அதிகாரிகளுக்கு நாம் நன்றி கூறுகின்றோம். இப்படியான ஒரு வாய்ப்பு கிடைக்கும் என நாம் ஒருபோதும் எண்ணியதில்லை என புனர்வாழ்வு பெற்ற நபர் ஒருவர் மக்களிடையே பேசும் போது கூறினார்.

இந்த சுற்றுலாவில் பங்கேற்ற முன்னாள் போராளிகள் ஊடகங்களுக்கு கருத்துக்கூறும்போது தயங்கிய நிலையுடன் கூடிய போக்கை காட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன்முன் கூட்டியே பயிற்றப்பட்டதைப்போன்ற பதில்களையே அவர்கள் கூறியதாக எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.



இவர்களை வரவேற்கும் நிகழ்வு ஒன்றும் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இடம்பெற்றது. தொடர்ந்து 500 இளைஞர், யுவதிகள் இன்று மாத்தறைக்குச் சென்றுள்ளனர். இவர்களை அமைச்சர்கள் டளஸ் அழகப்பெரும மற்றும் சந்திரசிறி கஜதீர ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

## 15 ஜனவரி 2011

புனர்வாழ்வளிக்கப்பட்ட 100 விடுதலைப் புலி உறுப்பினர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

## 23 ஏப்ரல் 2011

புனர்வாழ்வளிக்கப்பட்ட 484 விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

## 09 மே 2011

மட்டக்களப்பைச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான ஒன்பது பேர் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். ஆனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் காணாமற்போயிருக்கிறார்கள் என்று அவர்களின் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் முன்னர் புதைத்து மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் ஆயுதங்கள் மற்றும் ஷெல்கள் என்பவற்றை மீட்பதற்காக இவர்களைப் படையினர் அழைத்துச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## 16 மே 2011

கிளிநொச்சி, வட்டக்கச்சியின் குறித்த கிராமமொன்றில் மட்டும் புனர்வாழ்வளிக்கப்பட்டதாகக் கூறப்படும் 24 முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே திருமணமாகியிருந்த நிலையில், தற்போதே குடும்பங்களுடன் இணைந்துள்ளனர்.

இவர்கள் இரவு வேளைகளில் தாக்கப்படுவதும், முகாம்களுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுவதும் தொடர்வதாக கூறுகின்றனர். இதனால் பெரும்பாலானவர்கள் வீடுகளுக்குள் முடங்கிப் போயே உள்ளனர். இதேநிலை யாழ்ப்பாணத்திலும் தொடர்வதாக கூறப்படுகின்றது.

அதிகரித்துவரும் கெடுபிடிகள், மீண்டும் விசாரணைக்கென அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றமை, சித்திரவதைகளுக்குள்ளாகின்றமை யென குற்றச்சாட்டுக்கள் அவர்களிடமி ருந்து எழுந்த வண்ணம் உள்ளன.

## 07 ஜூன் 2011

புனர்வாழ்வளிக்கப்பட்ட 900 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட இருப்பதாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பாரிய பிரச்சாரங்கள் ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டன. விடுதலை செய்யப்படவுள்ளதாக கூறப்பட்ட 900 பேரில் 357பேர் மட்டும் விடுதலையானார்கள். மிகுதிப்பேர் விடுவிக்கப்படவில்லை. ஆற்றாமையால் மக்கள் அழுதார்கள். ஓவென்று அலறினார்கள். கடுமையான விரக்தியில் கோசம் எழுப்பினார்கள். அதனைத் தவிர அவர்களால் என்னதான் செய்யமுடியும்?

## புனர்வாழ்வும் மறுவாழ்வும்



✱ இறுதிக்கட்ட போரின்போது 11 ஆயிரத்து 800 முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் படையினரிடம் சரணடைந்ததாக புனர்வாழ்வுத்துறை ஆணையாளர் தெரிவித் திருக்கிறார்.

✱ சரணடைந்த முன்னாள் போராளிகள் பின்னர் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

✱ 12 நலன்புரி நிலையங்களில் இவர்களுக்கு தொழில் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

✱ இவர்களில் 4,000 பேர் விடுவிக்கப்பட்டனர். மேலும் 2000 பேர் விரைவில் விடுவிக்கப்படுவர் என புனர்வாழ்வுத்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

✱ புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் வடக்கு கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

✱ முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டி, சலுகை அடிப்படையில் விரைவில் கடன் வழங்கப்பட உள்ளதாக புனர்வழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

✱ மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளுக்காக மாதாந்தம் 100 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

✱ உணவு, மொழிப் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்தப் பணம் செலவிடப்படுகிறது.

✱ புனர்வாழ்வு முகாம்களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

✱ அதிகமான முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் திருமணம் முடித்து பிள்ளைகள் உடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

✱ புனர்வாழ்வு முகாம்களில் மூன்று முதல் ஒன்பது மாதங்கள் வரையில் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டுவருகிறது.

✱ வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளைச் சேர்ந்த இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது.

✱ புனர்வாழ்வளிக்கப்பட்ட ஆயிரத்திற்கும் அதிகமான முன்னாள் போராளிகள் யாழ்ப்பாணத்தில், குடும்பங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

✱ எனினும் அவர்களது சுதந்திரமான நடமாட்டம் பெரும்பாலும் முடக்கப் பட்டேயுள்ளது. வாரத்தில் ஒரு நாள், படை முகாமில் ஒப்பமிடும் நாளைத் தவிர பெரும்பாலானவர்கள் வீடுகளுள் முடங்கியே இருக்கின்றார்கள்.

✱ பெரும்பாலும் நகரப்பகுதிகளோ முகாம் சூழல்களோ புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் போராளிகளுக்கு அச்சமூட்டுபவையாகவே உள்ளன.

✱ இச்சூழல் அவர்கள் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடவோ, வேலை வாய்ப்புக்களை தேடிக்கொள்ளவோ முடியாததாகவே இருக்கின்றது.

✱ பெரும்பாலும் தொழில் தருநர்களும் அச்சங்காரணமாக இதே மனோநிலையுடனேயே உள்ளனர்.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வுத்துறை அமைச்சர்
டி.ஈ.டபிள்யூ குணசேகர
011-2787125, 2787136 - 2784014






சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்
சந்திரசிறி கஜதீர
011-2697912

புனர்வாழ்வுத்துறை ஆணையாளர் நாயகம்
பிரிகேடியர் சுதந்த ரணசிங்க
011-2883177





# கோண்டாவில் கிராமத்தில் நடந்தது என்ன?





# சிக்கிய மர்ம மனிதன் மனநோயாளியாம்!

◀ ஆழ்வார் ▶


'நீங்கள் பிடித்தது ஒரு மனநோயாளியை. ஒரு மன நோயாளியை நீங்கள் பிடித்து அடித்துள்ளீர்கள். யாழ்ப்பாணத்தில் கிறீஸ் என்று ஒன்றும் இல்லை. உங்கள் உறவினர் ஒருவர் பதினைந்து இருபது வருடம் கழித்து உங்கள் வீட்டுக்கு வந்தால் அவரை உங்களுக்கு அடையாளம் தெரியுமா? அவரையும் பிடித்து அடிப்பீர்களா? கிறீஸ் மனிதன் என்று அடைத்து வைப்பீர்களா? நீங்கள் பிடித்த நபர் பெண்களின் மீது மோகம் கொண்ட மனநோயாளி என மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது'

இது கோண்டாவிலில் பிடிபட்ட மர்ம மனிதன் தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கவென மர்ம நபர் பிடிபட்ட மறுநாள் அதாவது செப்டெம்பர் 1ஆம் திகதியன்று கோண்டாவில் தில்லையம்பதி கிராமத்தில் பொலிஸார் நடத்திய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள். இதே கருத்தையே யாழ். மாவட்ட பதில் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த தெரிவித்திருந்தார்.

கிறீஸ் மனிதர்கள் என அழைக்கப்படும் மர்ம மனிதர்கள் பற்றிய பதட்டங்கள் யாழ். குடாநாட்டில் வெகுவாக அதிகரித்து வருகின்றன. மர்ம மனிதர்கள் அங்கு வந்தார்கள் இங்கு வந்தார்கள் என்ற செய்திகள் குடாநாட்டில் ஒலிக்காத தினங்களே இல்லை. ஆனால் படைத்தரப்பும் பொலிஸாரும் கிறீஸ் என்று இங்கு ஒன்றுமே இல்லை. கிறீஸ் மனிதன் என்று வதந்திகளைக் கிளப்புவோரைக் கைதுசெய்வோம் என மிரட்டி வருகின்றனர்.

அதேவேளை மர்ம மனிதர்கள் உலாவியதாக அறிந்த மக்கள் அவர்களைப் பிடிக்க துரத்தும்போது படையினர் மக்களுக்கு குறுக்கே வந்து மக்களுடன் முறுகல் நிலையை உருவாக்குகிறார்கள். மக்களைத் தாக்குகிறார்கள். தாங்கள் பிடிக்கும் மர்ம நபர்களை உடனடியாகவே படையினர் வந்து மீட்டுச் செல்கிறார்கள். பின்னர் அவர்கள் பற்றிய கதைகள் இல்லை. என்று படையினர் மீதான குற்றச்சாட்டுக்களும் வலுத்துள்ளன. இந்நிலையில்தான் கடந்த மாதம் 31ஆம் திகதி மாலை யாழ் நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கோண்டாவில் தில்லையம்பதி கிராமத்தில் மர்ம நபர் ஒருவர் அப்பகுதி பொதுமக்களால் சிறைப்பிடிக்கப்பட்டார்.

வீடியோ படப்பிடிப்பாளர் ஒருவரது வீட்டின் பின் வளவினுள் நுழைந்த நபர் அவர்களது வீட்டின் யன்னல் வழியே உள்ளே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தாம் அவரைப்பிடித்து விசாரித்ததாக அப்பகுதி இளைஞர்கள் தெரிவித்திருந்தனர். அந்த நபர் தன்னை ஊர் மக்களிடம் அடையாளப்படுத்தவில்லை. தன்னை யார் என அடையாளப்படுத்துவதற்கான எந்தவித சான்றுகளும் அவர் வசம் இருந்திருக்கவும் இல்லை. இந்நிலையில் அந்நபர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என தெரிந்துகொண்ட இளைஞர்கள் அவரது மொழியிலேயே உரையாடிப் பார்த்துள்ளனர். ஆனால் அவர் அதற்கும்






ஸ்பெஷல் ரிப்போர்ட்

(23ஆம் பக்கம் பார்க்க..)

15

# திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!



மரகதத் தீவின்
இரகசிய ஒற்றன்
'நெடுமாறன் 999'
உளவறியும்

# கறுப்பு செப்டெம்பர் அழகி



கால் சட்டைப் பைக்குள் கைகளைப் போட்டுக் கொண்டு அறைக்குள் நுழைந்த நெடுமாறன்,

கதவில் சாய்ந்தபடியே நின்று கொண்டு விழிகளை உருட்டி அந்த அறையை அளந்து பார்த்தார்.

"அஞ்சாதீர்கள் நெடுமாறன். என்னால் உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. இப்படி வந்து உட்காருங்கள்!" சொல்லிவிட்டு,

நெடுமாறனைப் பார்த்துச் சிரித்தாள், அந்தப் பெண்.

அவள் தனது பெயரைச் சொன்னதும்,

நெடுமாறனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

சிகரெட்டை வாயில் வைத்தபடியே நிமிர்ந்து அவளைப் பார்த்தார் நெடுமாறன்.

"ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?" சிரித்துக் கொண்டே கேட்டாள் அந்தப் பெண்.

"என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?" அவளைக் கூர்ந்து பார்த்தபடியே கேட்டார் நெடுமாறன்.

## கப்பலில் நிறைந்திருக்கிறது குண்டு! காரிகை நடுங்குகிறாள் அதைக்கண்டு!

உங்கள் பெயர் மாத்திரமல்ல. நீங்கள் யார் என்பது கூட எனக்குத் தெரியும். அதனால் தான் நான் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்தேன்!"

ஆபத்தின் நிழல்,

அந்த அறைக்குள் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட நெடுமாறன் மெல்ல ஊர்ந்து சென்று அங்கே கிடந்த நாற்காலியில் வசதியாக அமர்ந்து கொண்டார்.

"என் மேல் உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?" சிகரெட் புகையை வளையங்களாக விட்டபடியே கேட்டார் நெடுமாறன்.

"வேதாள மாளிகை என்ற வழக்கில் நீங்கள் வேலை செய்த போது ஒரு ஹோட்டலில் வைத்து உங்களைச் சந்தித்தேன். அந்த ஹோட்டலில் வைத்து உங்களைத் தீர்த்துக்கட்ட வந்த ஐந்து எதிரிகளை வெகு திறமையாக நீங்கள் சுட்டு வீழ்த்தினீர்கள். அம்மாடி கண் இமைக்கும் நேரத்திற்குள் நீங்கள் அவர்களைச் சுட்டு வீழ்த்தினீர்களே நீங்கள் துப்பாக்கி பிடித்து சுடும் விதமே தனி அழகுதான். அன்றே உங்கள் மீது ஒரு அக்கறை ஏற்பட்டது. உங்களைப் பற்றி விசாரித்து வைத்துக் கொண்டேன். பல இடங்களில் உங்களைத் தேடினேன். ஆனாலும் நீங்கள் என் கண்களில் படவே இல்லை. இந்த ஹோட்டலில் நீங்கள் தங்கி இருப்பதை நேற்றுத்தான் கண்டுகொண்டேன்!" சொல்லியபடியே வந்த அந்தப் பெண் கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

"ஓ! என்னைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருக்கிறாய்! உன் பெயர் என்ன?"

"சர்மிளா!"

"சரி, டொக்டர் சுதாராஜைப் பற்றி ஏதோ தகவல் தரப்போவதாக சொன்னாயே. அது என்ன தகவல்?"

"டொக்டர் சுதாராஜ் எங்கே இருக்கின்றார் என்பது எனக்குத் தெரியும்"

"அப்படியா! சரி, விரைவாகச் சொல்லு. அவரை எங்கே மறைத்து வைத்திருக்கின்றார்கள்?" பரபரப்புடன் கேட்டார் நெடுமாறன்.

"நான் இன்று காலையில் தேநீர் அருந்த கீழே சென்றிருந்த போது எனக்கு முன்னால் அமர்ந்திருந்த இருவர் பேசிக் கொண்டது எனது காதில் விழுந்தது"

"என்ன கேட்டாய்? விரைவாகச் சொல்லு!" என்று சொல்லியபடியே எழுந்து சென்ற நெடுமாறன்,

திறந்திருந்த ஜன்னலைச் சாத்தித் தாழிட்டார்.

அப்போது,

ஜன்னலின் அருகில் இருந்து ஓர் உருவம் விரைந்து ஓடியதை நெடுமாறன் கவனித்து விட்டார்.

"கொஞ்சம் பொறு சர்மிளா இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

வெளியே,

ஏதோ ஒரு மணம் வீசிக் கொண்டிருந்தது.

நெடுமாறன் கொஞ்சம் மோப்பம் பிடித்துப் பார்த்தார்.

அந்த மணம்,

மல்லிகைச் செண்டின் மணம்.

டொக்டர் சுதாராஜின் மகள் நிம்மி தங்கியிருந்த அறைக்குள் வீசிய அதே மணம்.

அப்படியானால்,

ஐயத்தை அள்ளிக்கட்டிக் கொண்ட நெடுமாறன்,

சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தார்.

சற்றுத் தொலைவில்,

ஒரு பெண் விரைந்து நடந்து கொண்டிருந்தாள்.

அவள்,

அசைப்பில் நிம்மியைப் போலவே இருந்தாள்.

நெடுமாறன் மறுபக்கம் திரும்பிப் பார்த்தார்.

அக்கம் பக்கத்தில் வேறு எவருமே இல்லை.

முன்னால் போய்க் கொண்டிருந்த நிம்மியை நோக்கி நெடுமாறன் விரைந்து நடந்தார்.

அவள் அருகில் வந்துவிட்டார்.

முன்னால் சென்ற பெண் நிம்மியேதான்.

"என்ன நிம்மி எங்கே போனீர்கள்?" என்று அவள் பக்கத்தில் நடந்தபடியே கேட்டார் நெடுமாறன்.

"யாரது?" என்று கேட்டபடியே திரும்பிய நிம்மி,

"ஓ.. நீங்களா?" என்று கேட்டுவிட்டு முத்துப் பற்களைக் காட்டி மோகனமாகச் சிரித்தாள்.

"என்ன நிம்மி எங்கே போய் விட்டுப் போகிறீர்கள்?" அவள் மேனியில் இருந்து வீசிய மல்லிகைச் செண்டின் நறுமணத்தை அனுபவித்தபடியே கேட்டார் நெடுமாறன்.

"நாங்கள் இங்கே வந்தபோது எங்களுடன் விமானத்தில் வந்த ஒருவர் இங்கே ஒன்பதாம் நம்பர் அறையில் தங்கி இருக்கின்றார். அறையில் தனியாக இருப்பதற்கு போரிங்காக இருந்தது. அதனால் அவருடன் கொஞ்சம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று வந்தேன். ஆனால் அவர் அறையில் இல்லை. வெளியில் எங்கோ போய்விட்டார் போல் இருக்கிறது!"

"எதற்கும் கொஞ்ச நாட்களுக்கு நீங்கள் அறையை விட்டு வெளியே வராமல் இருந்தால் நல்லது"

"அந்த அளவிற்கு ஆபத்து என் பின்னால் துரத்தி வருகிறது என்றா நீங்கள் சொல்லுகிறீர்கள்?" நெடுமாறனுக்கு மிக மிக அருகில் வந்தபடியே கேட்டாள் நிம்மி.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். அடிக்கடி அறையை விட்டு வெளியே வராதீர்கள்!"

"ஆகட்டும். அதுசரி மாலை படத்திற்கு

ஜனரஞ்சக எழுத்தாளர்
**மொழிவாணன்**

போவதற்கு வருவீர்கள் தானே?"

"கண்டிப்பாக வருவேன். நீங்கள் தயாராக இருங்கள்"

"சரியாக 5.45 க்கு உங்கள் கதவைத் தட்டுவேன். ஓ..கே"

"ஓ..கே. சுதர்ஸன்!" சொல்லிவிட்டு,

அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள் நிம்மி.

சிறிது தூரம் அங்கேயே நின்றிருந்த நெடுமாறன்,

மீண்டும் சர்மிளா இருந்த அறையை நோக்கி நடந்தார்.

"என்ன நெடுமாறன். அவ்வளவு விரைவாக எங்கே போனீர்கள்? நாம் பேசியதை எவராவது ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்களா?" அறையினுள் நுழைந்த நெடுமாறனைப் பார்த்துக் கேட்டாள் சர்மிளா.

"அப்படித்தான் இருந்தது. சரி நீ கேட்ட அந்தச் செய்தியைச் சொல்லு" என்று சொல்லிவிட்டு அங்கே கிடந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார் நெடுமாறன்.

"கல்கிசை கடற்கரையில் நின்று பார்த்தால் கடல் நடுவில் ஒரு கப்பல் நின்றிருப்பது தெரியுமாம். அந்தக் கப்பலில் நிறைய அணு ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதாம். டொக்டர் சுதாராஜை விடுதலை செய்வதற்காக அரசாங்கத்திடமிருந்து ஏதோ பணம் கேட்டிருக்கின்றார்களாம். இன்னும் பதினாலு மணித்தியாலங்களில் அவர்கள் கேட்ட பணம் கிடைக்கா விட்டால் டொக்டர் இருக்கும் அந்தக் கப்பல் வெடித்து விடுமாம்.

அந்தக் கப்பலில் இரவும் பகலும் பலத்த காவல் இருப்பதனால் எவரும் கப்பலை நெருங்க முடியாதாம். எந்த விதத்திலாவது எவராவது நெருங்கினால் அடுத்த கணமே கப்பல் வெடித்துச் சிதறிவிடுமாம். எந்த விதத்திலும் டொக்டரைக் காப்பாற்ற முடியாது. டொக்டரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அப்பப்பா நினைக்கவே அச்சமாக இருக்கிறது. இல்லையா நெடுமாறன்?"

"நீ சொன்ன இந்தத் தகவல் உண்மையான தகவல் தானே?" சிந்தித்தபடியே கேட்டார் நெடுமாறன்.

"நான் கேட்ட தகவல் இது. இதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும்!" என்று சொல்லியபடியே எழுந்து நின்ற சர்மிளா,

பிளாஸ்கில் இருந்த கோப்பியை ஊற்றி நெடுமாறனுக்குக் கொடுத்தாள்.

கோப்பியை கையில் வாங்கிய நெடுமாறன்,

அதைக் கையில் வைத்துக் கொண்டு,

திடீரென்று வந்து தகவல் கொடுக்கும் இந்தப் பெண்ணை நம்பலாமா வேண்டாமா என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்.

"என்ன நெடுமாறன் கோப்பியில் ஏதாவது கலந்திருக்கும் என்று ஐயப்படுகின்றீர்களா?" என்று சிரித்துக் கொண்டே கேட்ட சர்மிளா,

எழுந்து சென்று பிளாஸ்கில் இருந்த கோப்பியை மடமடவென்று வாயில் ஊற்றிக் கொண்டாள்.

"இனியாவது, கோப்பியைக் குடியுங்கள்!" என்று கெஞ்சுவதைப் போல் சொன்னாள் சர்மிளா!

மெல்லச் சிரித்துக் கொண்டே நெடுமாறன்,

ஓரக்கண்களால் அவளைப் பார்த்தபடியே கோப்பியை உறிஞ்சிக் குடித்தார்.

"அதுசரி உன்னைப்பற்றி நீ ஒன்றும் சொல்லவில்லையே , காலியான கப்பை மேசை மீது வைத்தபடியே கேட்டார் நெடுமாறன்.

(மர்மம் தொடரும்...)

# கடாபி நாட்டை விட்டு இராணுவ வாகனத்தில் தப்பிச் சென்றாரா?



கடாபி ஆதரவு இராணுவத்தின் வாகனத் தொடர் அணி ஒன்று காலை வேளையில் எவ்வித தாக்குதலிலும் சிக்காமல் லிபியாவுக்கு வெளியே தப்பிச் சென்றிருக்கின்றது. 200-250 இராணுவ வாகனங்களைக் கொண்ட இந்த தொடரணி, லிபியாவின் தரை எல்லையைக் கடந்து, நைகர் நாட்டுக்குள் பிரவேசித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

தற்போது எழுந்துள்ள முக்கிய கேள்வி, நாட்டைவிட்டுத் தப்பிச்சென்ற இராணுவ வாகனங்களில் ஒன்றில், கடாபியும் தப்பிச் சென்றாரா?

கடாபியின் இராணுவத்துக்கு எதிராகப் போராடிய போராளிப் படையின் தளபதிகளில் ஒருவரான அலி டார்ஹோனி, '200க்கும் மேற்பட்ட இராணுவ வாகனங்கள் நைகர் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக பல சர்வதேச செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட செய்தி பற்றி நாமும் விசாரித்து வருகின்றோம். இராணுவ வாகனங்கள் சென்றது உண்மை என்றே தெரிகின்றது. அவற்றில் பயணம் செய்தவர்கள் யார் என்பது பற்றிய சரியான விபரங்கள் எமக்குக் கிடைத்தவுடன் அறியத் தருகின்றோம்' என்றார்.

நைகர் நாடு இந்த விவகாரத்தில் 'அடக்கி வாசிக்கவே' விரும்புவதாகத் தெரிகின்றது. நைகர் நாட்டின் சட்டத்துறை அமைச்சர் மாரோ அமடோ, 'சிறிய வாகனத் தொடர் ஒன்று எமது நாட்டுக்குள் வந்துள்ளது. அதில் இருந்த அனைவருமே ஆயுதம் ஏதுமற்ற பொதுமக்கள் தான். மனிதாபிமான அடிப்படையில் அவர்களை எமது நாட்டுக்குள் அனுமதித்திருக்கிறோம்' என்று தொலைபேசி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.


'குறிப்பிட்ட வாகனத் தொடரில் வந்தவர்களில் கடாபியும் உள்ளாரா?' என்ற கேள்விக்கு, 'அப்படியான தகவல் ஏதும் எனக்குக் கிடைக்கவில்லை' என்பதுடன் நிறுத்திக் கொண்டார்.


200-250 இராணுவ வாகனங்கள் தொடர் அணியாகச் சென்றன என்று கூறப்படுகையில், சிறிய அணி என்று அமைச்சர் கூறியதும் வந்தவை இராணுவ வாகனங்கள் என்பதைச் சொல்லாமல் தவிர்த்திருப்பதும் நைகர் நாடு எதையோ மறைக்கிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

போராளிப் படையின் மற்றொரு தளபதி அப்துல் ரஹ்மான் புஷின், குறிப்பிட்ட இராணுவ வாகனத் தொடரில் கடாபி இருந்தாரா என்பது குறித்த தகவல் ஏதும் தமது படைகளிடம் இல்லை என்பதை ஒப்புக் கொண்டார். ஆனால், அதில் கடாபி இருக்கலாம் என்றே கருதுகிறார்.

'இங்கே கடாபி பயணம் செய்வது வழமையாக இப்படியான வாகனத் தொடர்களில்தான். அதாவது, இதுதான் அவருடைய பாணியிலான போக்குவரத்து ஸ்டைல். லிபியாவுக்கு வெளியே சென்ற 200 வாகனங்களில் ஏதாவது ஒன்றில் அவர் இருப்பார் என்றே நான் நம்புகிறேன். இது எனது தனிப்பட்ட கருத்து' என்கிறார், தளபதி அப்துல் ரஹ்மான் புஷின்.














கடாபி கடந்துவந்த பாதை

இப்படியொரு இராணுவ வாகனத் தொடர் லிபிய எல்லையைக் கடக்கின்றது என்ற தகவலை முதலில் வெளியிட்டது ரொய்ட்டர் செய்தி நிறுவனம்தான். அவர்கள், பிரெஞ்சு இராணுவ வட்டாரங்களில் இருந்து பெறப்பட்ட தகவல் இது என்று கூறியிருந்தார்கள். தற்போது பிரெஞ்சு இராணுவ வட்டாரங்களில் இருந்து, இந்த வாகனத் தொடர் பற்றிய மேலதிகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

'நைகர் நாட்டுக்குள் இந்த வாகனத் தொடர் அணி சென்றாலும் அவர்கள் நைகர் நாட்டில் தங்குவதாக உத்தேசமில்லை. 'பர்க்கினா பாசோ' என்ற சிறிய நாட்டுக்குச் செல்வதே இந்தத் தொடர் அணியின் நோக்கம். இதில் கடாபியும் அவரது மகன்களில் ஒருவரான சைஃப் அல்-இஸ்லாமும் இருப்பதற்கு சந்தர்ப்பம் அதிகம். அவர்கள், பர்க்கினா பாசோ நாட்டில், அரசியல் அடைக்கலம் பெறுவதாகத் திட்டமிட்டிருக்கலாம்' என்பதே பிரெஞ்சு இராணுவ வட்டாரத் தகவல்.

இவர்கள் குறிப்பிடும் பர்க்கினா பாசோ, ஒரு மேற்கு ஆபிரிக்க லேண்ட்-லாக்டு நாடு. தரை எல்லைகளால் ஆறு நாடுகளால் சூழப்பட்ட பர்க்கினா பாசோ, கடாபிக்கு ஆதரவான நாடு என்று முன்பு அறியப்பட்டிருந்தது.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி, நிகர் நாட்டுக்குள் பிரவேசித்த இராணுவ வாகனத் தொடர் அணி, அந்த நாட்டின் அகாடெஸ் நகரத்தைக் கடந்து தலைநகர் நியாமியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பர்க்கினா பாசோ நாட்டு எல்லையிலிருந்து தென்மேற்கே 950 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது நியாமி.

தற்போது எழுந்துள்ள மற்றொரு கேள்வி, நேட்டோவின் போர் விமானங்கள், லிபியாவின் மேலே வட்டமிட்ட வண்ணம் உள்ளன. தவிர, அவர்களது உளவு விமானங்களும் லிபியாவில் கடாபி இராணுவம் உள்ள பகுதிகளின் மேல் பறந்து உளவு பார்க்கின்றன.

இப்படியான கண்காணிப்பு உள்ளபோது, 200-250 இராணுவ வாகனங்களைக் கொண்ட ஒரு தொடர் அணி, எப்படி யாருடைய கண்களிலும் சிக்காமல் நைகர் நாட்டு எல்லையைச் சென்றடைந்தது? இரண்டு அல்லது மூன்று இராணுவ வாகனங்கள் ஒன்றாகச் செல்வதைக் கண்டாலே குண்டுவீசி அழிக்கும் நேட்டோ போர் விமானங்கள், இவற்றைத் தாக்காமல் விட்டது எப்படி?

இந்த வாகனத் தொடர் அணியில் கடாபி இருக்கிறாரோ, இல்லையோ, வேறு ஏதோ முக்கிய மர்மம் உள்ளது.




## சிற்றூழியர் மீது பலாத்காரம்

நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் சிற்றூழியர் பிரிவில் மேற்பார்வையாளராக பணியாற்றும் பெண்ணொருவர் ஓய்வறையில் இருக்கும் போது இரகசியமாக அந்த அறையினுள் நுழைந்த மேற்படி வைத்திய சாலை சிற்றூழியர் ஒருவர் அப்பெண்ணை வன்புணர்வுக்குட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண் நீர்கொழும்பு வைத்திய சாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## உண்மையைக் கக்கிய திருடர்கள்

கடந்த வாரம் இணுவில் கந்தசுவாமி கோவிலில் திருட்டு முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களால் திருடர்கள் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்கள். சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து 6 பேர் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களால் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள ஆலயங்களில் இருந்து திருடப்பட்ட பல வெண்கலப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் திருடப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் விற்கப்பட்ட பொருட்களும் சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

## 15 வயது மகள் மீது பாய்ந்த தந்தை

முல்லைத்தீவில் 15 வயதுச் சிறுமி ஒருவர் அவரது தந்தையால் பாலியல் வன்புணர்வுக்குள்ளாகியுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சிறுமி இடம்பெயர்ந்து முகாமில் தங்கியிருந்த வேளையிலும் தந்தையால் பாலியல்ரீதியான தொந்தரவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவாம். சிறுமி இதுதொடர்பாக தனது தாயாரிடம் தெரிவித்தபோதும் தாயார் அது தொடர்பில் பெரிதாக அக்கறை கொள்ளவில்லையாம். பின்பு முல்லைத்தீவில் மீளக் குடியமர்ந்த பின்னரும் குறித்த சிறுமியின் தந்தை சிறுமிமீது பாலியல் வன்புணர்வு மேற் கொண்டுள்ளார்.

தொடர்ச்சியாகப் பாலியல் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதன் பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## 'மிஸ்ட் கோலால்' தர்மஅடி

இளைஞர் ஒருவரது தொலைபேசி இலக்கத் தேடலில் ஒரு பெண்ணின் தொலைபேசி அழைப்பு கிடைத்திருக்கிறது. அவர்களது நட்பு தொலைபேசி வழியே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்து கொண்டிருந்தது. உண்மையில் அப்பெண்ணின் தொலைபேசிச் செலவைக் கூட இவர் 'ரீலோட்' மூலம் பூர்த்தி செய்திருக்கிறார். இவர்களது நட்பின் உச்சக் கட்டமாக அப்பெண்ணை நேரே பார்க்கத் துடித்த இளைஞன் சந்திக்க வரும்படி கட்டாயப்படுத்தியிருக்கிறார். 'கற்புக்கரசி'யான அப்பெண்ணுக்கு விடயம் பிழைப்பது தெரிந்ததும் சந்திப்பதற்கான நேரம், உடையின் நிறம், வாகன இலக்கம் எல்லாம் பெற்று விட்டு அதை தனது அண்ணனிடம் கொடுத்து விட்டார்.

இவர்களின் வரவை எதிர்பார்த்து வான் ஒன்றில் காத்திருந்த அப்பெண்ணின் அண்ணனிடம் இவரும் இவரது நண்பரும் வசமாக சிக்கிக் கொண்டார்கள். அப்புறம் என்ன? தர்ம அடிதான்.

ஆனால், இதைவிட உச்சக்கட்டம் என்ன தெரியுமா? அந்நபரின் தொலைபேசியைப் பறித்த அண்ணன்காரன் அதில் உள்ள அனைத்து இலக்கங்களுக்கும் தொடர்பெடுத்து இந்நபர் 'பெண்களுடன் போனில் சேட்டை விட்டதால் நெல்லியடியில் ஒரு இடத்தில் வான் ஒன்றினில் வைத்து அடிக்கிறோம். அவரில் அக்கறையிருந்தால் வந்து காப்பாற்றிக் கொண்டு போகவும்' என்று அறிவித்தார். பிந்திக் கிடைத்த தகவல்களின்படி அடிவாங்கிய ஆசாமி தனது பழைய சிம் அட்டையை எறிந்து விட்டு, இப்பொழுது புதிய சிம் அட்டையை உபயோகிக்கிறாராம்.

## ஓதுங்கினாலும் தேடிவரும் சனீஸ்வரன்

பண்டத்தரிப்பு பிரான்பற்று முருகமூர்த்தி ஆலயச் சூழலில் நள்ளிரவு வேளை மதுபோதையில் இருந்த இளைஞர்களிடம் அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் தேவையற்ற விதத்தில் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மர்ம மனிதர்களின் நடமாட்டத்தினால் தடிகள், பொல்லுகளுடன் இளைஞர்கள் நின்றபோது இராணுவத்தினர் அதனைப்பறிக்க முற்படுகையில் இராணுவ சிப்பாய் ஒருவர் கத்தி வெட்டுக்கு இலக்கானார். இதனையடுத்து மறுநாள் காலை அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் தகராறில் ஈடுபட்ட நபரைதம்மிடம் ஒப்படைக்குமாறு கூறிவிட்டுச்சென்றனர். அச்சம் காரணமாக குறித்த நபரை இராணுவ முகாமில் ஒப்படைத்தபோது, குறித்த நபரை இராணுவத்தினர் தாக்கியதோடு எச்சரிக்கை செய்து விடுவித்தனராம்.

## நீதிபதி வைத்த ஆப்பு!

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதிகளில் மதுபோதையில் நின்று பெண்களிடம் சேஷ்டை விடுவோரை கைதுசெய்யுமாறு சாவகச்சேரி நீதிபதி கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். வீதிகளில் நின்று சேஷ்டைகள் புரிவதாக நீதிமன்றுக்கு முறைப்பாடுகள் வருவதால் இவ்வாறான குற்றச்செயல்களைப் புரிவோரை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளாராம்.

பாடசாலை முடிவுறும் நேரங்களிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் முடிவுறும் மாலை நேரங்களிலும் வீதிகளில் நின்று பாடசாலை மாணவிகளுடன் சேஷ்டை புரிவோரையும் கைதுசெய்து ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாம்.




## 'வசந்த நிலா'

இரவு வேளையில் வசந்தம் எப்.எம்.இல் ஒலிபரப்பப்படும் 'வசந்த நிலா' என்னும் நிகழ்ச்சியானது மிகவும் பாராட்டத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். வாரத்தின் ஒருநாள் நேயர் விருப்பமாக இந்நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகின்றது. நேயர்களின் விருப்பத்திற்கேற்ப அதிகளவிலான விளம்பரங்கள் இல்லாது மிகவும் அருமையாக நிகழ்ச்சி அமைந்துள்ளது. வாழ்த்துக்கள்.

- தர்மராசா தனுசா, சாவகச்சேரி.

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07,
மின்னஞ்சல்: irukiram@gmail.com

## இது வானொலியா?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கிழக்குப் பிராந்திய சேவையான பிறை எப்.எம். ஒரு வானொலியை எப்படியாவது உருட்டிச் செல்ல வேண்டும் என்பதற்காக நடாத்தப்பட்டு வருகின்றது.

காலையில் தபாலட்டையில் பாடல் கேட்போர், மகளிர், வேலைசெய்வோர், சிறுவர் என பாடல் கேட்போரை வகைப்படுத்தி அவர்களுக்குரிய நேரங்களில் கேட்கின்ற பாடல்களை ஒலிபரப்புவது என்பது உண்மையிலேயே ஒரு வானொலி நிகழ்ச்சியா?

ஒவ்வொரு பிரிவினருக்கும் பிரித்துப் பிரித்து பாடல்களை ஒலிபரப்பி தனது பிழைப்பை நடாத்தி வருகின்றது. அதில் விளம்பரங்களை அறிவிப்பாளர்கள் வாசிக்கும்போது பயம்தான் வருகிறது. ஓடுற மாட்டுவண்டிபோல ஏன் இப்படி வாசிக்கின்றீர்கள்? இப்படியொரு வானொலியை பெயருக்கு மட்டும் கட்டாயம் நடத்தத்தான் வேண்டுமா? புதுசா சிந்திக்கமாட்டீர்களா...?

- ஆர். தர்ஷன், திருக்கோவில்.

## ஒலி சீரில்லாமல் ஒரு வானொலி!

*தொழில்நுட்பம் எவ்வளவோ வளர்ந்துள்ள கால கட்டத்தில் தெளிவில்லாத ஒரு அலைவரிசையில் வானொலியை நடாத்திவரும் வசந்தம் எப்.எம். நாங்களும் முதல்தரம் எனும்போது கேட்பர்களுக்கு சிரிப்புத்தான் வருகிறது.*

- முஹம்மட் றியாஸ், கல்முனைக்குடி 14.

# வாசகர் கடிதம்

எத்தனையோ வாரப்பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவைகளில் இல்லாத ஒரு தேடல், தாகம் போன்றவற்றை 'இருக்கிறம்' பத்திரிகையில் கண்டுகொள்ள முடிகின்றது. செய்திகளையும் தகவல்களையும் தேடித் தேடி சேகரித்து உண்மைத் தன்மைகளைக் கூறும் விதம் உண்மையில் பாராட்டுக்குரியது. வாழ்த்துக்கள்.

எதிர்காலத்தில், பத்திரிகை வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தை தக்கவைத்துக்கொள்ளப் பாடுபடுவது கண்டு நானும் அகமகிழ்கின்றேன். 'றாக்கை' பகுதியில் புதிய வரவு நூல்களையும் அதுபற்றிய விமர்சனங்களையும் தருகின்றீர்கள். இதேபோல் புதிய இலக்கியச் சஞ்சிகைகள் பற்றிய தொகுப்புக்களையும் தந்தால் இலக்கிய ஆர்வலர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**- எம். கலைதாசன், கிண்ணியா.**

'தலைவிரித்தாடும் மருத்துவ சபையின் அதிகாரம்' எனும் கட்டுரை சிறப்பாக இருந்தது. பாதிக்கப்பட்டவன் என்ற முறையில் இன்னமும் நாங்கள் இவ்வாறு துன்பப்படுவதை 'இருக்கிறம்' ஊடாக வெளிப்படுத்தியதற்கு நன்றிகள். இதற்குப் பிறகாவது என் போன்றவர்களுக்கு ஏதாவது வழி கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இரண்டாவது தடவையும் பரீட்சை எழுதிவிட்டு காத்திருக்கின்றேன். ஆனால், நிச்சயம் சித்தியடையப்போவதில்லை என்பது எனக்கு இப்பவே புரிகிறது. ஆனாலும் சிறிய நப்பாசையுடன் இருக்கிறேன்.

**- த. மணிவண்ணன், வெள்ளவத்தை.**




'இருக்கிறம்' ஆசிரியர் தலையங்கம், தமிழனின் தற்கால இருப்பைத் தொடர்ந்தும் தெளிவுபடுத்தி வருகின்றது. அத்துடன் அரசியல் அலசலாக வரும் 'மிஸ்டர் க்றோ' வும் சிறப்பாகவுள்ளது. ஏன் இருக்கிறமில் அரசியல்வாதிகளின் (உண்மையான) நேர்காணல்கள் வருவதில்லை? எதிர்காலத்தில் அவற்றையும் எதிர்பார்கின்றோம்.

**- தே.வியோஜன். வவுனியா.**

*அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச்சட்டம் என்பவற்றைப் பற்றிப் போதிய விளக்கம் தந்திருந்தீர்கள். மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அத்துடன் இதுவரைகாலமும் பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கான சட்ட ஆலோசனையையும் எதிர்பார்க்கின்றோம். அவற்றையும் விளக்கமாகத் தந்தால் பயனுள்ளதாக இருக்கும்.*

**- எம்.லலிதாம்பிகை, கிளிநொச்சி.**

'இப்படியும் நடக்கிறது' பகுதி எனக்கு மிகவும் பிடித்தது. சமுதாயத்தின் மறுபக்கத்தில் நடக்கும் சம்பவங்களைத் தெளிவாகத் தருகின்றீர்கள். 'இருக்கிறம்' வாங்கியதும் நேரே பார்ப்பது இந்தப் பகுதியைத்தான். எமது சமுதாயத்தில் இவ்வாறான சீரழிவுகள் அதிகரித்துச் செல்வது நல்லதல்ல. சமூகச் சஞ்சிகையான 'இருக்கிறம்' மூலம்தான் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

**- எஸ்.ஜீவா, கொட்டாஞ்சேனை.**

வடக்கில் அதிகரித்துவரும் ஆடைத்தொழிற்சாலைகள் என்ற செய்தித் தொகுப்பு (NEWS FEED) மிகவும் பயனுள்ளதாக இருந்தது. குறிப்பாக வடக்கில் புனர்வாழ்வு பெற்ற யுவதிகளுக்கு வழிகாட்டக்கூடியதாக இருந்ததுடன், பயிற்சிபெற விண்ணப்பிப்பதற்கான முகவரியையும் தந்திருந்தீர்கள். இவ்வாறான நிகழ்ச்சித் தொகுப்பு மிகவும் பயனுள்ளது. எதிர்காலத்தில் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு தகவல்களையும் தந்தால் பேருதவியாக இருக்கும்.

**- எஸ்.ரஞ்சனி, புனர்வாழ்வு முகாமிலிருந்து...**

(19ஆம் பக்கத் தொடர்ச்சி..)

# கோண்டாவில்...

வாய் திறக்கவில்லை. அந்நபர் பொலிஸாருடன் மட்டும் சரளமாக உரையாடியதாக நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். தன்னை நிரூபிக்கும் அடையாளங்கள் எதுவுமின்றி சிறுபான்மை இன நபர் இலங்கையின் எப்பாகத்தில் பிடிபட்டிருந்தாலும் அவர் மீது பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்ந்திருக்கும் என்பது சர்வ நிச்சயமான உண்மை.

சுமார் மாலை 4.30 மணிக்கு பிடிபட்ட நபரை இளைஞர்கள் தங்கள் சனசமூக நிலைய அறையில் வைத்து பூட்டிவிட்டனர். இதனை அறிந்து அங்கு விரைந்த படையினர் அந்நபரை மீட்டுச் செல்ல பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டனர். அப்பகுதியைச்சுற்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டதால் நிலைமை அவர்களுக்கு சாதகமற்றுப்போக மர்ம நபரை மீட்டுச் செல்லும் முயற்சி கைகூடாமல்போனது. நீதிபதி ஒருவர் வந்தால் அவரிடம் குறித்த நபரை ஒப்படைக்கிறோம் என்ற மக்களின் வாதம் வலுப்பெறத்தொடங்கியது. பல திசைகளிலிருந்தும் பொதுமக்கள் திரளத்தொடங்க அவர்களை அடக்க கட்டைகள், பொல்லுகள், துப்பாக்கிகளுடன் படையினரும் அப்பகுதியெங்கும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

நேரம் செல்லச் செல்ல அதனைப் பார்வையிட வந்த பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்படத்தொடங்கியது. இந் நிலையில் அந்தப் பகுதிக்கு அழைக்கப்பட்ட மேலதிக இராணுவத்தினர் பொல்லுகளுடன் வந்து பொதுமக்களைத் தாக்கத் தொடங்கினர். சில படையினர் தங்கள் துப்பாக்கிகளை சுடும் நிலைக்கு தயார் செய்து வானத்தை நோக்கி நீட்டியும் விட்டனர். அங்கு நின்ற மேஜர் தர அதிகாரி ஒருவரின் தலையீட்டினால் படையினர் கட்டுப்படுத்தப்பட்டதுடன் வன்முறைகள் மேலும் தொடரா வண்ணம் நிலைமை கட்டுக் குள் கொண்டுவரப்பட்டது.



கோப்பாய் பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அதிகாரி வந்தபோதிலும் மர்ம நபரை மக்கள் ஒப்படைக்கவில்லை. பின், அச்செழுவில் நிலைகொண்டுள்ள 511ஆவது படையணியின் கட்டளை அதிகாரி சம்பவ இடத்துக்கு வந்து மர்ம நபரை அடைத்து வைத்திருந்த அறைக் கதவைத்திறந்து அந்நபரின் கன்னங்களில் நாலைந்துமுறை அறைந்தார். பின் அவரை இழுத்துச்சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்தார். பொலிஸார் அவரை கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

குறித்த மர்ம நபர் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டுவரும் இளைஞன் என மறுநாள் சில செய்திகள் பரவின. வீதி அகலிப்புப் பணிகளை யாழ்ப்பாணத்தில் சீன நிறுவனம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. இரவுகளில் வரும் மர்ம மனிதர்கள் மரங்களில் தாவிப்பாய்வதாகவும் மதில்களுக்கு மேலாக பாய்ந்து செல்வதைக் கண்ணுற்றதாகவும் பொதுமக்கள் தெரிவித்து வருகின்றனர். சீனர்கள் இப்படியான வித்தைகளில் கைதேர்ந்தவர்கள். மட்டக்களப்பில் பிடிபட்டு தப்பிய மர்ம நபர் ஒருவர் சீனநாட்டவர் சாயலில் இருந்ததாக சில இணையங்கள் தெரிவித்திருந்தன. கோண்டாவிலில் பிடிபட்ட நபர் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபடுபவர்தான் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் கிறீஸ் மர்ம மனிதர்கள் பற்றிய சந்தேகங்களுக்கு விடைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

இந்நிலையில்தான் குறித்த சந்தேக நபர் தென்னிலங்கையைச் சேர்ந்த ரி.டி.தனஞ்சே எனவும் அவருக்கு 20 வயது எனவும் உறுதிப்படுத்திய பொலிஸார் அந்நபர் ஒரு மனநோயாளி என அறிவித்தனர். குறித்த நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் வழக்கை விசாரணை செய்த நீதிமன்ற நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்ததுடன் மனநோயாளியாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதனால் வைத்திய பரிசோதனைக்கும் உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

படையினர் மற்றும் பொலிஸாரினால் தாக்கப்பட்ட நிலையில் குறித்த சந்தேக மர்ம நபர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்பே நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் குறித்த நபருக்கு மனநோயாளி சான்றிதழ் வாங்கிய பொலிஸார் அதனையே பதிவு செய்துள்ளனர். கடந்தமாதம் நாவாந்துறையில் பொதுமக்களைத் தாக்கிய படையினரும் பொலிஸாரும் மறுநாள் நண்பகல் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் வரை அவர்களுக்கு சிகிச்சை அளிக்க முன்வரவில்லை. கோண்டாவிலில் பிடிபட்ட மர்ம சந்தேக நபருக்கு மட்டும் ஏன் அவசர சிகிச்சை என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கோண்டாவில் பிரதேசம் கோப்பாய் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்டதாகவும் ஊரெழு பிரிகேட்டிற்கு உட்பட்ட பிரதேசமாகவும் இருந்தபோதும் அவர்களுக்கு மேலதிகமாக சந்தேக நபரை மீட்க அச்செழு பிரிகேட் படை அதிகாரி, யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரி, ஊரெழு படையினர், புலனாய்வுப்பிரிவினர் என பெரும் படை பரிவாரங்கள் அங்கு குவிந்தது மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்திருந்தது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிடிபடும் மர்ம நபர்கள் மனநோயாளிகளாக்கப்படுவதும் கிறீஸ் மர்ம மனிதன் பற்றிய மக்களின் சந்தேகங்களை வலுப்பெறச் செய்துள்ளது. கோண்டாவில் பிரதேசத்தில் பிடிபட்ட நபர் மன நோயாளி எனின் அவர் யாழ்ப்பாணம் எப்படி வந்தார்? யாருடன் வந்தார்? சிங்கள மக்கள் அறிந்திருக்கவேமாட்டாத ஊர் ஒன்றிற்குள் எப்படி சைக்கிளில் உலாவினார்? போன்ற கேள்விகளுக்கு விடைகாணப்படவேண்டும்.

# பராக்..! பராக்..!
# வடக்கில் அதிகரிக்கும் 'மனநோயாளிகள்'

## வட மாகாணம் NEWS FEED

### யாழ்ப்பாணம்

**04 செப்டெம்பர் 2011**

இரவு டச்சு வீதியில் உள்ள சில வீடுகளினுள் மர்ம மனிதர்கள் 9 மணியளவில் நுழைய முற்பட்டுள்ளனர். எனினும் வீட்டின் உரிமையாளர்கள் கண்டு துரத்திய போது தப்பிச் சென்றுள்ளான்.

இதேவேளை, இரவு 8.45 மணி தொடக்கம் 9.00 மணிவரைக்கும் இராணுவத்தினர் தொடர்ந்தும் ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டிருந்ததோடு நீண்ட நேரம் தரித்து நின்றதாகவும் தெரிவித்த பொதுமக்கள் இராணுவத்தினர் அங்கிருந்து சென்று சில நிமிடங்களில் வாகனமொன்று முன்னுக்கும் பின்னுக்கும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புடன் வந்ததாகவும் அதிலிருந்து 7 பேர் வரையில் இறங்கியதாகவும் இவர்களே மர்ம மனிதர்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.



இதனால் வீடுகளில் உள்ள ஆண்கள் பொல்லுகளுடன் விடியும்வரை விழித்திருக்கும் முடிவில் இருந்தனர் எனவும் பெண்கள் பாதுகாப்பாக வீடுகளினுள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**05 செப்டெம்பர் 2011**

யாழ்ப்பாணம், சாவற்கட்டு அந்திக்குழி ஞானவைரவர் ஆலயத்தின் அருகாமையில் உள்ள வீடொன்றில் இரவு 10.30 மணியளவில் மர்ம மனிதன் புகுந்ததனையடுத்து அப்பகுதி மக்கள் மர்ம மனிதனைத் துரத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த நபர் ஓடி மறைந்து விட்டதால் இதனையடுத்து துரத்திச் சென்ற மக்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற ஒரு சில நிமிடங்களின் பின்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் வாகனங்களில் ஏற்றி வந்து குவிக்கப்பட்டனர்.

பொலிஸாரினால் அப்பகுதி மக்கள் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அப்பகுதியில் சோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் தாம் விடியும் வரை நித்திரையின்றி விழித்திருந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

**05 செப்டெம்பர் 2011**

யாழ். மாவட்ட வலிகாமம் பிரதேசத்தில் உள்ள பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சிப் பகுதியில் அதிகாலை வீட்டினுள் நுழைந்த மர்ம மனிதன் தாக்கியதில் 5 பிள்ளைகளின் தாய் முகத்தில் காயமடைந்தார். மர்ம மனிதன் படுத்திருந்த பெண் ஒருவர்மீது கல்விட்டு எறிந்துள்ளான். பெண் கதவைத் திறந்து எட்டிப்பார்க்க முற்பட்ட வேளையில் மர்ம மனிதன் அவரது தலையில் அடித்ததுடன் வாயைப் பொத்திக் கழுத்தையும் நெரித்துள்ளான். இதனால் அவரது கன்னத்தில் நகக் கீறல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் திக்குமுக்காடிய பெண் எழுப்பிய கூக்குரலைக் கேட்டு ஏனையவர்கள் எழுந்ததைத் தொடர்ந்து மர்ம மனிதன் முன்னால் உள்ள தகர வேலியைப் பாய்ந்து தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

**06 செப்டெம்பர் 2011**

வசாவிளான் தெற்கில் உள்ள வீடு ஒன்றுக்குள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஐவரைத் துரத்திச்சென்ற போது கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சிவராசாஜெயகாந்தன்(வயது30)என்பவர் மாட்டிக் கொண்டார். இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டபின் அச்சுவேலிப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

காலை எனது வீட்டு முன்வாசலின் ஊடாக ஒருவர் உள்ளே நுழைந்தார். நானும் எனது குடும்பத்தவரும் யார் நீ எனக் கேட்டபோது அந்த நபர் ஓட முற்பட்டார். நான் குரல் கொடுத்ததும் அயலில் தோட்டங்களில் வேலை செய்தவர்கள் எமது வீடு நோக்கி ஓடி வந்தனர். அப்போது அந்த நபருடன் கூடவந்த ஏனைய நான்கு பேரும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியை நோக்கி ஓடிவிட்டனர் என்றார் இலங்கை நாதன்.

இராணுவத்தினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. வந்த இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட நபரைப் பொறுப்பேற்றதுடன், ஏனைய நான்கு பேரையும் இராணுவக் கவலரண்களைச் சூழவுள்ள பகுதிகளில் தேடினர். எனினும் எவரும் அகப்படவில்லை. சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலிப்பொலிஸாரிடம்மர்மமனிதன் ஒப்படைக்கப்பட்டு அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான்.

**06 செப்டெம்பர் 2011**

நவாலி, அட்டகிரிப்பாடசாலைக்குமுன்பாக உள்ள வீடொன்றில் குடும்பப் பெண் ஒருவர் உடைகளை உலரவிட்டுக் கொண்டிருந்தபோது, ஒருவர் அவரைப் பின்புறமாகக் கட்டிப் பிடித்து கழுத்துப் பகுதியை திருகியதுடன் வாயையும் இறுக்கப் பொத்தியுள்ளார் ஓர் 'மனநோயாளி'.

பெண்மணி திணறிக் கத்திக் குழறியதும் அவர் தப்பியோடி விட்டார். துரத்திக் கொண்டு உடனே உறவினர்கள் வீதிக்கு வந்தபோது அங்கு இராணுவத்தினர் நிற்பதைக் கண்டு அவர்களிடம் சம்பவம் குறித்து விவரித்துள்ளனர்.



அதற்கு தாம் 'எதுவும் செய்யமுடியாது. பொலிஸாருக்கு அறிவியுங்கள்' என்று கூறிச் சென்ற பின்னர், மானிப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்டது.

இரவு 8.30 மணியளவில் அவர்கள் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். 'பின்னர் கிறீஸ் மனிதன் இல்லை, இது வேறு பிரச்சினை' என்று உதாசீனமாகப் பதிலளித்துவிட்டு அங்கிருந்து சென்றனர் என்று கூறப்பட்டது.

இதேவேளை, மேற்படி பெண் தாலிக்கொடி மற்றும் நகைகள் அணிந்திருந்த போதும் அவை எதுவும் அபகரிக்கப்படவில்லை எனவும் வீட்டார் தெரிவித்தனர்.



**06 செப்டெம்பர் 2011**

சித்தங்கேணி சிவன் கோயில் பகுதியில் மாலை 7 மணியளவில் வீடொன்றுக்குள் நுழைய முற்பட்ட இருவர் அங்கிருந்தவர்கள் விழிப்படைந்ததை அடுத்து தப்பி ஓடினர் தெரிவிக்கப்படுகிறது.

**06 செப்டெம்பர் 2011**

அத்துடன் ஊர்காவற்றுறைப் பகுதியில் இரவு 10 மணியளவில் மனநோயாளிகள் தொடர்பான மூன்றாவது சம்பவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. நடைபெற்ற மூன்று சம்பவங்களின் போதும் குறிப்பிட்ட பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

**07 செப்டெம்பர் 2011**

ஏழாலை மேற்குப் பகுதியில் இளைஞர் ஒருவர் 'மனநோயாளிகளின்' தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த ஞானேஸ்வரன் நவீனன் (வயது 22) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். இந்த இளைஞர் இயற்கைக்கடன் கழிக்க வெளியே சென்ற வேளை மர்ம மனிதரின் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

**07 செப்டெம்பர் 2011**

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குச் சென்ற மாணவியை கச்சாய் வீதியில் இடைமறித்த 4 'மனநோயாளி' இளைஞர்கள் அந்த மாணவியின் நெஞ்சுப் பகுதியில் கூரிய பிளேட்டினால் கீறிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். எனினும் தெய்வாதீனமாக மாணவிக்குக் காயம் ஏற்படவில்லை. அவர் அணிந்திருந்த பாடசாலை சீருடை மட்டும் கிழிந்திருந்தது.

**09 செப்டெம்பர் 2011**

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்புப் பகுதியில் இரவு 9 மணிக்கு சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருவரைப் பின் தொடர்ந்து சென்ற இளைஞர்கள் இருவர் மீது 'மனநோயாளிகள்' பதுங்கி இருந்து தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆர். பீற்றர் (வயது 24), சி.ரமணன் (வயது26) ஆகியோர் காயமடைந்துள்ளனர். பற்றைக்குள் பதுங்கியிருந்து கூரிய ஆயுதத்தால் ஒருவரைக் கீறியும் மற்றவரைத் தாக்கிவிட்டு அவர்கள் தப்பியோடிவிட்டனர்.

### கிளிநொச்சி

**09 செப்டெம்பர் 2011**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் கிழக்கு 8ஆம் வாய்க்கால் பகுதியில் உள்ள வீடுகளுக்கு இரவில் 'மனநோயாளிகள்' சிலர் தொல்லை கொடுப்பதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

**06 செப்டெம்பர் 2011**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் கிராமத்தில் இரவு 9 மணி யளவில் கணேஸ் என்பவரது வீட்டின் முன்பகுதியில் கத்தியுடன் ஒரு நபர் நிற்பதைக் கண்டு வீட்டுக்காரர்கள் யார் நிற்பது எனக் கேட்டு டோச் லைட் அடித்துப் பார்த்தபோது அவர் ஓட ஆரம்பித்துள்ளார். அதனைக்கண்டு வீட்டுக்காரர் ஓடுபவரின் பின்னால் கலைத்துக் கொண்டு சென்றபோது அந்த நபர் ஓடிச்சென்று 8ஆம் வாய்க்கால் பிள்ளையார் கோயிலுக்கு முன்பு உள்ள இராணுவக் காவலரணினுள் புகுந்து கொண்டதாகத் தெரியவருகின்றது.



★ தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதிகளில் மதுபோதையில் நின்று பெண்களிடம் சேஷ்டை விடுவோரை கைது செய்யுமாறு சாவகச்சேரி நீதிபதி மா.கணேசராஜா கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

★ வீதிகளில் நின்று சேஷ்டைகள் புரிவதாக நீதிமன்றுக்கு முறைப்பாடுகள் வருவதால் இவ்வாறான குற்றச்செயல்களைப் புரிவோரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

★ பாடசாலை முடிவுறும் நேரங்களிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் முடிவுறும் மாலை நேரங்களிலும் வீதிகளில் நின்று பாடசாலை மாணவிகளுடன் சேஷ்டை புரிவோரை கைதுசெய்து முற்படுத்துமாறு உத்தரவிட்டார்.

★ சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்கு அருகில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்வோர் தொடர்பாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.